விலை சதம் 25

# சுதந்திரன்

SUTANTIRAN

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1998 வைகாசி திங்கள் 9-ம் நாள் (23—5—67) செவ்வாய்க்கிழமை ஸபர் 12 | இதழ் 44
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183

சுதந்திரன்

## அந்த எண்ணம் வேண்டாம்

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேற வேண்டும் என்று கூறுவது சிலருக்கு ஒரு பொழுது போக்காகி விட்டது. சென்ற வாரம் ஒரு கூட்டத்தில் அவர்களுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்துள்ளார் தமிழரசுத் தந்தை.

தமிழரசார் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் விரும்புகின்றன. அதில் அர்த்தமுண்டு. தமிழ் காங்கிரசும் விரும்புகிறது. அதிலும் அர்த்தமுண்டு. ஆனல் வேறு சிலரும் கிளிப்பிள்ளை போல அவர்கள் கூறியதைக் கூறுவதுதான் விந்தையாக இருக்கிறது.

எந்த நோக்கங்களுக்காக அரசாங்கத்தை நிறுவுவதற்கு கட்சி உதவியதோ, அந்த நோக்கங்கள் நிறைவேறச் செய்வதே கட்சியின் குறிக்கோள்--அரசாங்கத்திலிருந்து விலகுவது குறிக்கோளன்று.

கட்சி கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதிலே யன்றி, அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதிலன்று.

வெளியேறுவது இன்று தமிழ் பேசும் மக்களின் ஒரு பிரச்சினையல்ல. ஆகவே அதில் கவனம் செலுத்த வேண்டிய தேவையும் கிடையாது.

சில உறுதிகளின் அடிப்படையிலேயே கட்சி அரசாங்கத்துக்குக் கை கொடுத்தது. அந்த உறுதிகள் மீறப்படுமானல், அடுத்த விநாடி கட்சி வெளியேறி விடும். அதற்குக் கட்சி என்றும் தயார் என்பதை தமிழ் பேசும் மக்கள் அறிவர்.

அன்று சுதந்திரக் கட்சி தனது வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டது. ஆனல் ஐ.தே. கட்சி அப்படிச் செய்யவில்லையே!

கட்சிக்கு அளிக்கப்பட்ட உறுதிகளைக் காப்பாற்றும் மனப் போக்கு ஐ. தே. கட்சித் தலைவர்களிடம் உண்டு. தமிழ் மொழி விசேட விதிகள் அதற்கு ஒரு சான்று.

மாவட்டசபை நிறுவும் பிரச்சினையிலும் அரசாங்கத்தின் உறுதி தளர்ச்சி பெறவில்லை. மசோதாவில் இடம்பெற வேண்டிய விடயங்கள்பற்றி பிரதம மந்திரி தமிழரசுத் தலைவர்களுடன் ஐந்து முறை விரிவாக விவாதம் நடத்தியதிலிருந்தே அவரது உறுதி தெளிவாகிற தல்லவா?

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் விடுத்த மாவட்ட சபை பற்றிய அறிக்கையும் பிரச்சினையைத் தட்டிக்கழிக்கும் நோக்கம் அவருக்குக் கிடையாதென்பதை எடுத்துக் காட்டியது.

ஆகவே இத்துறையில் கட்சி எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தமிழ்பேசும் மக்கள் தங்களின் முழு ஆதரவையும் அளித்தல் அவசியமாகும்.

இந் நிலையில் "வெளியேறுவது" அரசியற் தற்கொலைக் கொப்பாகும். தற்போதைக்கு அந்த எண்ணம் வேண்டாம்!

### 'கிளிநொச்சிப் பிரச்சினை"

# சதி முயற்சி அனைத்தும் சடசட வென முறிந்தன

# ரத்தினம் வெற்றி ஜீ. ஜீ. தோல்வி

கிளிநொச்சி நகருக்குப் பட்டினசபை அந்தஸ்து கிடைக்க விடாமல் தடுப்பதற்குத் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் பல திரைமறைவுத்திட்டங்களைக் கையாண்டாரென்றும் அவையாவும் முறியடிக்கப்பட்டு விட்டன என்றும் அறியப் படுகிறது. கிளிநொச்சியை பட்டினசபையாக்கும் பிரகடனத்துக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் இவ்வாரம் கையொப்பமிட்டுள்ளார். 1968ம் ஆண்டு ஜனவரி 1ந் திகதி முதல் கிளிநொச்சிப் பட்டினசபை செயல்பட ஆரம்பிக்கும் என்று தெரிகிறது.

கிளிநொச்சிப்பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் 1965ம் ஆண்டுகிளிநொச்சிக்கு பட்டினசபை அந்தஸ்து வேண்டுமென்று தனிநபர் தீர்மானம் கொண்டு வந்ததும் அத்தீர்மானம் சபையில் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தெரிந்ததே.

ஆனல் கிளிநொச்சிக்கு பட்டினசபை அந்தஸ்து கிடைக்க விடாமல் தடுப்பதற்குத் திரு. பொன்னம்பலம் பல திட்டங்களைக் கையாண்டார் என்று தெரிகிறது.

பிரதம மந்திரியையும் திரு. பொன்னம்பலம் சந்தித்து கிளிநொச்சிக்கு பட்டினசபை அந்தஸ்து வழங்கப்படுவதைதான் எதிர்ப்பதாகவும் அப்பிரச்சினையைத் தள்ளிப் போடும்படியும் கூறியதாகத் தெரிகிறது.

திரைமறைவில் நடைபெற்ற சதிவேலைகளையறிந்த கிளிநொச்சி எம். பி. திரு. இரத்தினமும் தமிழரசுத்தலைவர்டாக்டர் இ. மு. வி. நாகநாதனும் பிரதம மந்திரியைச் சந்தித்து திரு. பொன்னம்பலத்தின் தலையீட்டுக்கு செவிசாய்க்காதுகிளிநொச்சிக்கு பட்டினசபை அந்தஸ்து கிடைக்க உடன் நடவடிக்கையெடுக்கும்படியும் கேட்டுக்கொண்டனர். பிரதமர் அப்பொழுது இதுபற்றி விரைவில் வேண்டிய நடவடிக்கையெடுப்பதாக உறுதியளித்தாராம்.

மீண்டும் 4-4-67ல் இதுபற்றி திரு. இரத்தினம் பிரதமரைச் சந்தித்தபோது, 11-4-67ல் உள்ளூராட்சி அமைச்சரையும், திரு. பொன்னம்பலத்தையும் அழைத்துப்பேசிமுடிவு செய்வதாக பிரதமர் திரு. இரத்தினத்திடம் கூறினர் என்று தெரிகிறது.

இதைத் தொடர்ந்து, பின்வரும் கருத்துள்ள கடிதம் ஒன்றை கடுகதி மூலம் 14-4.67ல் பிரதமருக்கு திரு. இரத்தினம் கிளிநொச்சியிலிருந்து அனுப்பி வைத்ததாகதெரிகிறது.

''4-4-67ல் நீங்கள் எனக்குத் தந்த உறுதிமொழிப்படி 11-4-67ல், கிளிநொச்சிக்கு பட்டினசபை அந்தஸ்து அளிக்கும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவில்லையென்றும் அறிகிறேன்.

'இந்த விஷயத்தில் யாழ்ப்பாணப் பிரதிநிதியின் சூழ்ச்சித்திட்டத்துக்கு இடமளித்து ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்துவதையும் எங்கள் ஒத்துழைப்புக்கு குந்தகம் ஏற்படுத்துவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

'இப்பிரச்சினையை இன்னும் காலதாமதப்படுத்தாமல் எப்பொழுது தீர்த்து வைப்பீர்கள் என்பதை எனக்கு தந்திமூலம் அறியத்தரவும். ஏனெனில் யாழ்ப்பாண எம். பி.யின் கையாட்களால்எனது மக்களிடையே பரப்பப்பட்டுள்ள நச்சுப் பிரச்சாரத்துக்கு நான் சமாதானம் கூறவேண்டியிருக்கிறது''

பண்டிதர் இரத்தினத்தின் தொடர்பான முயற்சியால் திரு. பொன்னம்பலத்தின் திட்டங்கள் முறியடிக்கப்பட்டன,

கிளிநொச்சிக்கு பட்டின சபை அந்தஸ்து அளிக்கும்பிரகடனத்தில்இம்மாதம் 18ந்திகதி உள்ளூராட்சி அமைச்சர் கையெழுத்துப்போட்டார். 1968 ஆண்டு ஜனவரி 1ந்திகதிமுதல் கிளிநொச்சி பட்டின சபை செயல்பட ஆரம்பிக்குமென்று தெரிகிறது.

மாவட்டசபை, தமிழ் பல்கலைக் கழகம்

## வவுனியா எம். பி. ஆதரவு அளிப்பார்

மாவட்ட சபைகள் நிறுவப்படுவதைதாம் மனப்பூர்வமாக ஆதரிப்பதாகவும், பாராளுமன்றத்தில் மாவட்ட சபைகள் மசோதாவரும் போது தாம் அதை ஆதரித்து வாக்களிக்க இருப்பதாகவும் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வவுனியா எம். பி. திரு. த். சிவசிதம்பரம் தமது தொகுதியைச் சேர்ந்த நண்பர்களிடம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

மாவட்ட சபைபற்றி தமிழ் காங்கிரசுக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக சுதந்திரன் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

இம் மாதம் 8ந் திகதி வவுனியா எம். பி. திரு. சிவசிதம்பரத்துடன் அவரது இல்லத்தில், சில நெருங்கிய நண்பர்கள் உரையாடிய போதே அவர்களிடம் மாவட்டசபையை தாம் ஆதரிக்கப் போவதாக திரு. சிவசிதம்பரம் கூறியதாக தெரியவருகிறது.

மாவட்டசபையைத் தாம் ஆதரிப்பது என்று என்றே முடிவு செய்துவிட்டதாகவும், மாவட்டசபை நிறுவப்படுவதால், தமிழர்களுக்கு உண்மையில் விமோசனம் உண்டு என்பதை தமது கட்சி தலைவர் திரு. பொன்னம்பலம் உணர்ந்திருக்கிறர் எனவும், ஆனல் ஏன் அவர் அதை எதிர்க்கிறர் என்பதுதான் தனக்கு தெரியவில்லை யென்றும், திரு. சிவசிதம்பரம் கூறியதாக அறியப்படுகிறது.

தமிழ்ப்பல்கலைக்கழகம்பற்றியும் திரு. சிவசிதம்பரம் உள்ளந்திறந்து பேசினராம். இந்துப் பல்கலைக்கழகம் கோருவது முட்டாள்தனமானது என்றும், தமிழ்ப்பல்கலைக்கழ

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமனம் இல்லை

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்போதனு மொழியைக் கொண்ட எந்த ஒரு தமிழ்ப் பாடசாலைக்கும் இதுவரை சிங்கள ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப் படவில்லை.

இத்தகவலைப் பாராளுமன்றத்தில் இவ்வாரம் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். திரு. இலங்கரத்தினவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே கல்வியமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழ் மொழி மூலம் போதனை செய்யும் முஸ்லிம் பாடசாலைகளுக்கே சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டித நேரு: சில நினைவுகள்

'அவனையும் நேருவையும் அபிப்பிராய பேதங்களால் பிரிக்க முடியாது; நாங்கள் சக ஊழியர்களாக ஆன தினத்திலிருந்தே எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. எனினும் எனக்குவாரிசு ஜவகர்லால் நேருதான்... அவர் மனிதருள் மாணிக்கம்' இது காந்திஜி கூறியது:

வேறொரு சமயம் அவர் கூறியதாவது:-

'நாட்டுப்பற்றில் அவரை யாரும் மிஞ்சமுடியாது. துடிப்புடன் வீரன் போல அவர் பாய்ந்தாலும் அவரிடம் ராஜதந்திரத்துக்குள்ள விவேகம் இருக்கிறது. நாடு அவரிடம் பத்திரமாக இருக்கும்' காந்திஜி வைத்திருந்த இந்த நம்பிக்கையைக் காப்பாற்றி 17 வருடகாலம் சுதந்திர இந்தியாவின் பிரதமராகத் தொண்டாற்றி நாட்டின் மதிப்புயரப் பாடுபட்டிருக்கிறார் நேரு.

★

மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட இளைஞர் நேரு ஒரு போர் வீரனாக விளங்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். இத்தாலிய வீரர் கரிபோல்டி தன் தாயகத்தின் அடிமைத்தளை யறுக்கப் போராடியது போன்று தானும் பாடுபட வேண்டுமென்று உறுதி கொண்டார். மேல் நாட்டு வழக்கங்களையே பின்பற்றிய போதிலும் அவர் வெள்ளை ஆட்சியின் தாஞகை மாறிவிடவில்லை. 1912ல் பாரிஸ்டராக தாயகம் திரும்பிய நேரு அலகபாத்தில் வழக்கறிஞராக தமது வாழ்வைத் துவக்கினர்.

★

நேருஜி பங்கு பற்றிய முதல் காங்கிரஸ் மாநாடு பங்கிபூரில் நடைபெற்றதாகும். இவர் முதன்முதலாக காங்கிரஸ் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்ட போது பெரும் ஏமாற்றமடைந்தாராம். ஏன் தெரியுமா? காந்திஜியே தலைவராகவருவார் என்று இவர் எதிர்பார்த்திருந்தாராம், ஆனால் நேருவின் பெயரை காந்திஜியே தலைவர்பதவிக்கு முன் மொழிந்து விட்டார். இதில் தந்தை மோதிலாலுக்கு மகிழ்ச்சி அதிகம். நேருஜி காங்கிரசுக்கு தலைமைதாங்கி நடத்திச் சென்ற போதுதான், காங்கிரஸ் மாநாட்டில், இந்தியாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது அத்தீர்மானத்தை கொண்டு வந்தவரும் இவரே.

நேரு முதன் முதலாக பொலீஸ் தடியடிக்கு இலக்கானது லட்சுமணபுரியில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் போதுதான். 16 பேர் கொண்ட முதற்குழுவை நேருஜியும், இரண்டாவது குழுவை பண்டித பந்தும், தலைமை வகித்து நடத்திச் சென்றனர். குதிரைப்படையினர் தடி கொண்டு அடித்ததில் நேருவிற்கு சரியான அடி. தன் மகன் இப்படி அடிபட்டது கண்டு மோதிலால் கண்ணீர் சிந்தினர்.

★

செல்வச் சீமானின் மகனுகப் பிறந்து ராஜபோகவாழ்வு வாழ வேண்டிய இவர், நாட்டின் சேவைக்காக சகலத்தையும் தியாகம் செய்ததுடன் தன் தந்தையையும், விடுதலைப் போரில் இறக்கச் செய்துவிட்டார். பண்டித நேரு மொத்தம், 3262 நாட்களை சிறையில் செலவிட்டிருக்கிறார். 1642 ஆகஸ்ட் பேராட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்று வருடகாலம் அகமதாபாத் கோட்டையில் சிறைவைக்கப்பட்டிருந்தார். யோகாசனப் பயிற்சியிலும். புத்தகங்கள் எழுது



வதிலும், இவர் சிறையில் தன் நேரத்தை செலவிட்டார்.

★

நேருஜி மீது தொடரப்பட்ட முதல் வழக்கில் அவருக்கு ரூபா 100 அபராதம் விதிக்கப்பட்டது. இரண்டாவது வழக்கில் அவர் மறியல் செய்யத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்டார், இம்மாதிரியாக அவர் மீது 8 தடவைகள் வழக்குகள் தொடரப்பட்டன.

★

நேருவுக்கு 26 வயதாகும் போது திருமணம் நடைபெற்றது. மணப் பெண் கமலா. இத் திருமணம் 1916 ம் ஆண்டு டில்லியில் மிக விமரிசையாக நடைபெற்றது. கமலாவும் நேருவும் நாட்டுத் தொண்டில் மிக மும்முரமாக ஈடுபட்டார்கள். உடல் நலம் குன்றியதால் கமலா, 1936 ல் ஜெனிவாவில் காலமானர்.

★

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னர் நடைபெற்ல் ஒரு சம்பவம். கூட்டத்திய போலீசார் தடியடிப் பிரயோகம் செய்வதை நேரு பார்த்துவிட்டார். காரிலிருந்து குதித்து தடியடி நடத்தும் ஒரு போலீஸ் காரனிடம் சென்று 'யாரடா உனக்கு பொலீஸ் வேலை கொடுத்தது? உன் தொப்பியைக் கழற்றி வை. நீ இந்த வேலைக்கு லாயக்கற்றவன்.' என்று கோபித்து பேசி விட்டு, தொப்பியை வாங்கிக் கொண்டு காரில் ஏறி சென்றுவிட்டார்.

காரிலிருந்த நேருவின் நண்பர், 'தாங்கள் எந்த அதிகாரத்துடன் பொலீஸ் காரரின் தொப்பியை பிடுங்கிக் கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டார்.

ஆச்சரியமடைந்த நேருஜி, அதிகாரமா? என்ன 'அதிகாரம்?' என்றார். அதற்கு நண்பர்' நீங்கள் எப்பதவியில் இருக்கிறீர்கள்?' என்று கேட்கவே நேருவுக்கு தூக்கி வாரிப் போட்டது. காரைத் திருப்பச் சொல்லி, தொப்பியை அந்த பொலீஸ் காரரிடம் கொடுத்து விட்டு திரும்பினர்.

★

இந்திய சுதந்திரத்துக்குப் பின் ஒரு முறை நேரு பஞ்சாப்பில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கும் போது ஒரு முரடன் அவரை வழி மறித்துத் தொட்டு நிறுத்தி 'நீங்கள் எங்களையெல்லாம் பாழடித்து விட்டீர்கள். என் குடும்பமே நாசமாகிவிட்டது. இதற்குப்பதிலாக எனக்கு என்ன கொடுத்தீர்கள்?' என்று கேட்டான்.

நேருஜி புன்னகையுடன், அம் முரடன் தோள் மீது கை வைத்து, 'உனக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று தானே கேட்கிறாய்? ஒரு நாட்டின் பிரதமமந்திரியை இடைமறித்து, தைரியமாக எதிரே நின்று மனத்திலுள்ளதை வெளிப்படையாகச் சொல்லுமளவுக்கு சுதந்திரமும் மனேதிடமும் கிடைத்திருக்கிறதே' என்று கூறினர். இதைக் கேட்ட அம்முரடன் அவரிடம் மன்னிப்புக்கோரினன்.

★

நேருஜி, 'நேஷனல் ஹெரால்ட்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் பதவியையும் அலங்கரித்திருக்கிறர். நேருவுக்கு தன் குற்றங்குறைகள் தெரியாமலில்லை. அக்காலத்திலேயே 3வது மனிதனுக தன்னைப்பாவித்துக் கொண்டு தன்னைப் பற்றியே 'மொடேன் றிவியூ' என்ற பத்திரிகையில் 'சாணக்கியா' என்ற புனைப் பெயரில் கட்டுரைகள் எழுதினர்.

**27-5-67 ந் திகதி நேருஜியின் சிரார்த்த தினமாகும். அத் தியாக மூர்த்திக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவே சில நினைவுத் துளிகளை இங்கு குறிப்பிடுகின்றேம்.**

---

# அறுசுவை

ஆங்கில மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன? 26 தானே என்கிறீர்களா? தவறு; இப்பொழுது 44 எழுத்துக்கள் கொண்ட நெடுங்கணக்கு ஒன்று இங்கிலாந்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் புதிய நெடுங்கணக்கில் 'கியூ' 'எக்ஸ்' என்ற எழுத்துக்கள் கிடையாதாம்.

இந்த நெடுங்கணக்கு, பிரிட்டனிலுள்ள சுமார் 2000 பள்ளிக்கூடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நெடுங்கணக்கு மூலம் கற்பிக்கப்படும்பிள்ளைகள்மூன்றுண்டுகளில் தெளிவாகப் படிக்க கற்றுவிடுகின்றனராம். இது மற்றக் குழந்தைகள் படிக்க கற்றுக் கொள்ளும் காலத்தை விட 6 மாத காலம் குறைவு என்று இலண்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு அறிக்கை கூறுகிறது.

ஆங்கிலம் நுழையாத நம் நாட்டு மாணவர்களுக்கு இது தித்திப்பான சேதி. இல்லையா?

●

மார்க் ட்வையின் கடன்காரர்களுக்கு சாக்குப்போக்கு சொல்லிச்சமாளிப்பதில் நல்ல திறமைசாலி.

அவர் ஒரு பத்திரிகாசிரியர். பிரதிதினமும் அவர் செலுத்த வேண்டியதற்கான 'பில்கள்' ஏராளமாக வந்து கொண்டிருந்தன. அவை வர வர குப்பைக் கூடைக்குள் கிழித்துஎறிந்து விடுவார் ட்வைன்.

ஒருநாள் ஒரு பில்லை ட்வைன் குப்பைக் கூடைக்குள் எறியப் போகும் தருணத்தில் அலுவலகப் பையன் குறுக்கிட்டு, 'அந்தப் 'பில்'லின் பின்புறம் எழுதியிருப்பதைப் பாருங்கள் சார், உடனே பணம் கொடுக்காவிட்டால், சட்டப்படி நடவடிக்கையெடுக்கப்படும் என்று எழுதியிருக்கிறது' என்றான்.

மார்க் ட்வைன், அந்தப் பில்லை உடனே அலுவலகப் பையனிடமே திருப்பிக் கொடுத்து 'இம்மாதிரி நம் காரியாலயத்துக்கு வரும் கையெழுத்துப் பிரதிகளை என்ன செய்ய வேண்டு [illegible] எழுதப் பெற்ற கையெழுத்துப் பிரதிகள் கவனிக்கப் பட மாட்டா' என்ற சீட்டை அதனுடன் இணைத்து திருப்பி அனுப்பி விடு' என்றார்.

●

'கீரையில் என்ன இருக்கிறது?' என்று அலட்சியமாகக் கூறுகின்றவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்களுக்கு இது சமர்ப்பணம்.

ஜப்பான் தலைநகராகிய டோக்கியோவில் டாக்டர் காக்கூஜியோஷிடா என்பவர் கீரையின் மகத்துவத்தை உணர்ந்து ஆறு ஆண்டுகளில் சுமார் 1840 கிலோ கிராம் கீரையைச் சாப்பிட்டாராம். அதாவது—

நாளொன்றுக்கு அவர் சாப்பிட்ட கீரையின் எடை சுமார் ஒன்றரை கிலோ கிராம் ஆகும்.

உடல் யௌவனமாகவும்' உறுதியாகவும் இருக்க கீரை சாப்பிட்டதாகக் கூறுகிறார் டாக்டர் யோஷிடா.

●

காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இல்லத்தில் ஒரு திருமணம் நடந்தது. அதில் குழிக்கரை பிச்சையப்பா கலந்துகொண்டு நாதஸ்வரம் வாசித்தார். அங்கு குழுமியிருந்த அனைவரும் பிச்சையப்பாவின் இசையின்பத்தில் மூழ்கிக் கிடந்தனர். கலைவாணர் கச்சேரியை ரசித்துக் கொண்டே தன் கடமையிலும் ஈடுபட்டிருந்தார்.

கச்சேரி முடியப் போகிறது என்டதைத் தெரிந்து கொண்ட என். எஸ். கே., பிச்சையப்பாவிடம் ஓடோடிவந்து, 'பிச்சையப்பா, இன்னும் கொஞ்சம் பிச்சையப்பா' என்று கைகளை கூப்பி வணங்கிக் கொண்டே கேட்ட போது ஒரே சிரிப்பொலி எழுந்ததாம்.

●

'அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்திய குறள்' என்று ஔவையால் புகழப்பட்ட குறள் இன்று உலகெங்குமுள்ள பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. இந்தக் குறள் தமிழ் நூல்களில் எத்தனை இடங்களில் இடம் பெற்றிருக்கிறது தெரியுமோ?

சீவக சிந்தாமணியில் 20 இடங்கள்; மணிமேகலையில் 69 இடங்கள்; புறநானூற்றில் 32 இடங்கள்; சிலப்பதிகாரத்தில் 13 இடங்கள்; புறப் பொருள் வெண்பா மாலையில் 35 இடங்கள்; பதிற்றுப்பத்தில் ஓரிடம், கந்த புராணத்தில் 4 இடங்கள்; வில்லி பாரதத்தில் 12 இடங்கள்; பரஞ்சோதி திருவிளையாடலில் 7 இடங்கள்; நெஞ்சுவிடுதூதில் ஓரிடம், திருக்களிற்றுப்படியில் ஓரிடம்; இப்படி இன்னும் பல நூல்களில் குறள் எடுத்தாளப் பெற்றுள்ளது.

●

புதிதாக மண முடித்த ஒரு இளைஞருக்கு ஏற்கெனவே மணமுடித்த நடுத்தர மனிதர் ஆலோசனை கூறிக் கொண்டிருந்தார்.

'தம்பி, மணமுடித்த புதில், மனைவி கஷ்டப்படுகிருளே என்று குசினிப்பக்கம் போய் விடாதே. நானும் ஆரம்பத்தில் இப்படித்தான் மனைவிக்கு உதவி செய்யப் போனேன்.

'அப்புறம்என்னநடந்தது' பின்பு என்ன? இப்பொழுது தினசரி நானே ஏழே ஏழு நிமிடத்தில் காப்பி போட்டுக் கொண்டு வந்து மனைவிக்கு 'பெட்காப்பி' கொடுக்கிறேன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. மனோகரன்,
இறத்தோட்டை.

கே: இந்திய ஜனாதிபதித் தேர்தலில் தி. மு. க. ஜாகிர் ஹுசைனை ஆதரிக்காதது தவறு தானே?

ப: தவறில்லை. எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்தைக் காப்பதற்கே தி. மு. க. அவ்வாறு செய்தது. இல்லையேல் தி. மு. க. தங்களை முதுகில் குத்திவிட்டதாக இதர எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டிருக்கும்.

கே: ரூபாய்க்கு ஒருபடி அரிசி வழங்குவதால் ஏற்படும் பெரும் நட்டத்தைத் தமிழக அரசாங்கமே ஏற்கும் என்கிறதே தி. மு. க., இதன் உள்ளர்த்தம் இந்த நட்டத்தை ஏற்கப்போகும் தமிழ் நாட்டு மக்கள் தமது மற்றைய பாவனைப் பொருள்களின் விலை உயர்வை எதிர்பார்க்க வேண்டுமென்பதுதானே?

ப: இல்லை. அரிசிவிலை குறையும்போது அதன் தாக்கம் இதர விலைவாசிகள்மீதும் ஏற்படும். அதனால் அரிசிவிலை குறையும்போது இதர விலைவாசிகளும் குறையும். நட்டத்தைச் சரிக்கட்ட பணம் எங்கிருந்து பெறப்போகிறார்கள் என்பதே பிரச்சினை.

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம்,
புதுவட்டகொடை.

கே: திரு. தொண்டமான், 10 சதம் சம்பள உயர்வு வேண்டுமென்று கூட்டு ஒப்பந்தத்தில் கைசாத்திட்டதின் காரணம் என்ன?

ப: அவர் பெரிய பணக்காரர். ஆகவே 10 சதம் 100 சதம்போல அவர் கண்ணுக்குத் தெரிகிறது. அதுதான் 10 சதம் கேட்டு வாங்கினார்.

கே: கடந்த வாரம் சம்பள நிர்ணய சபையில், 25 சதம் வேண்டுமென்று கொண்டுவந்த ஒரு பிரேரணையை எதிர்த்திருக்கிறார் திரு. தொண்டமான். இதன் மர்மம் என்ன?

ப: ஆதரித்தால் 25 சதம் சம்பள உயர்வு கிடைத்துவிடும் என்பதற்காகவேஎதிர்த்தார்.

கே: தோட்டத் தொழிலாளரின் சந்தா பணத்தை இ. தொ. கா. வுக்கு தோட்டதுரைமாரே எடுத்து தருவதாக கூறியிருக்கிறார்களே ஏன்?

ப: இ. தொ. கா. வுக்கு தொழிலாளர் சந்தா கொடுக்காமல் டிமிக்கி கொடுப்பதைத் தடுப்பதற்காக.

கே: மல்வத்த மகாநாயக்க தேரோ சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை வாபஸ் பெற வேண்டுமென்றுகூறியிருக்கிறாரே இதன் காரணம் என்ன?

ப: பிரசாவுரிமையுள் வாக்குரிமையும் அடங்கியிருப்பது தான் அவரது எதிர்ப்புக்குக் காரணம். வாக்குரிமையில்லாத பிரசாவுரிமையை வழங்கக்கூடியஒப்பந்தமாயிருந்தால் அவர் ஆதரிப்பார்.

ஃ

ராணி,
சாவகச்சேரி.

கே: இப்பகுதியில் ஒரு பாடசாலையின் தலைமை ஆசிரியரின் அலுவலக அறையில் பால்போத்தல்கள் இருப்பதன் மர்மம் என்ன?

ப: பிள்ளைகளுக்குப் பாலூட்டுவதற்காக பால் போத்தல்களை வைத்திருப்பார். ஏனெனில் அவரது பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் பால் குடிக்கும் பச்சைக் குழந்தைகளாக இருக்கலாம்.

ஃ

எம். நிமுகலன்,
உருத்திரபுரம்.

கே: தமிழரசுக் கட்சி இன்னும் ஏன் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும்? பிரதமர் சொல்லிவிட்டாரே மாவட்டசபை என்று ஒன்றும் இல்லை என்று!

ப: 'கறுப்பு நிறமாக வாந்தி எடுத்தேன்' என்று ஒருவர் காலையில் கூறியது மாலை நேரமாகும்போது அவர் காக்காயை வாந்தி எடுத்ததாகச் செய்தி ஊரெங்கும் பரவி விட்டதாம். அம்மாதிரி இருக்கிறது உங்களின் கூற்று. மாவட்டசபை இல்லை என்று பிரதமர் கூறவில்லை. அது பற்றி பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்று தான் கூறியிருக்கிறார். இதற்காகவா போயும் போயும் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும்!

ஃ

எஸ். என். முருகன்,
கொழும்பு-13.

கே: அகலவத்தை இடைத் தேர்தலின் முடிவுகளிலிருந்து என்ன தெரிகிறது?

ப: கிராம மக்களிடம் யு. என். பி. யின் செல்வாக்கு அமோகமாக வளர்ந்து வருகிறதென்று தெரிகிறது.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: இக்காலக் கிழவர்கள் இளங் கன்னியர்களைக் கல்யாணம் செய்வதேன்?

ப: இழந்த இளமையை மீண்டும் பெறுவதற்காக.

ஃ

க. நவரத்தினம்,
நெடுங்கேணி.

கே: யாருக்காவது வால் பிடித்துத் திரிந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியுமா?

ப: முடியாது. ஏனெனில் பிடிப்பதற்கு யாருக்காவது வால் இருப்பதாக இதுவரை தெரியவில்லை.

ஃ

வீ. நவரத்தினம்,
நோட்டன் பிறிஜ்.

கே: பீகாரில் பஞ்சமென்றால் சிங்கள மக்கள் மனம் கலங்குவதின் மர்மமென்னவோ?

ப: பீகார் மாநிலம் பௌத்தம் தோன்றிய பிரதேசமல்லவா?

கே: தமிழ் மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் உரிமைகளையும் முட்டுக்கட்டை போட்டு வியாக்கியானம் செய்வது தான் பத்திரிகா தர்மமா?

ப: இல்லை. அது பத்திரிகா அதர்மம்! இந்நாடு பத்திரிகா தர்மத்துக்கு முழுக்குப்போட்டு நீண்டநாட்களாகி விட்டதே.

கே: இனத்துவேச முறையில் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்காவின் கொள்கைகளையும், திட்டங்களையும் எதற்காக தேசிய அரசாங்கம் பின்பற்றி எதிர்க்கட்சிகளின் கூச்சல்களுக்கு,இடம் கொடுத்து வருகின்றது?

ப: அதுதான் தேசிய அரசாங்கம் செய்த,—இன்னும் செய்து கொண்டிருக்கும் பெருந் தவறு.

ஃ

சந்திரா,
கருக்குப்பனை.

கே: சந்திர மண்டலத்தில் என்றாலும் தமிழருக்கு முதவிடம் கிடைக்குமா?

ப: கிடைக்காது. காரணம் தமிழன் சந்திர மண்டலத்தை இன்னும் வணங்கிக்கொண்டிருக்கிறானே தவிர சந்திரமண்டலத்துக்குச் செல்ல அவன் இதுவரை எதுவித முயற்சியும் செய்யவில்லையே.

ந. மனோகரன்,
மன்னிங்பட்டணம்.

கே: த. பெ. தலைவருக்கு வரவேற்புகள் மக்களால் அளிக்கப்படுகின்றதா? அல்லது அவரே தனக்கு வரவேற்பு ஒழுங்கு செய்து கொள்ளுகிறாரா?

ப: வரவேற்பு விஷயத்தில் சில அரசியல் வாதிகள் பெரிய கில்லாடிகள். சிலர் பணம் கொடுத்து தமக்கு வரவேற்பளிக்கும்படி கைக் குருவிகளைத் தூண்டிவிடுவார்கள். சிலர் மாலை வாங்கிக்கொடுத்து தங்களின் கழுத்தில் போடும்படி சொல்வதுமுண்டு. இவர் எந்த வகையோ?

ஃ

'காங்கிரஸ்''
கரவெட்டி.

கே: மாவட்டசபை மசோதாவை எதிர்க்கும் ஜீ. ஜீ. மசோதா வரும்போது தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறுவாரா?

ப: சொல்வதைச் செய்வது அரசியல்வாதிக்கு அழகல்ல.

கே: தேசிய அரசாங்கம் அமைந்த பின் திரு. பொன்னம்பலம் தமிழருக்குப் பெற்று தந்த உரிமைகள் யாவை?

ப: உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்க்கும் உரிமையைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார் என்று கூறலாம்.

ஃ

திருமதி. ராஜு நடராசா,
மட்டுநகர்.

கே: மாவட்டசபை பற்றிய பிரதமரின் அறிக்கைக்குப் பின்னும் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரிக்கத் தான் வேண்டுமா?

ப: மாவட்டசபை கொடுக்கப்படும் என்று பிரதமர்கூறும் போது அவரை ஏன் எதிர்க்க வேண்டும்?

க. வே. பா. சந்தர்,
தெல்லிப்பழை.

கே: மாவட்ட சபைகள் மசோதா என ஒன்று இல்லை என்று பிரதமர் கூறியதேன்?

ப: மசோதா இன்னும் தயாரிக்கப்படாததால்! மசோதாவில் அடங்கியிருக்க வேண்டிய விஷயங்களைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் இன்னும் முடிவடையவில்லையாம். அது முடிவடைந்ததும், நகல் மசோதா தயாரிக்கும் சட்ட நிபுணர்கள் 24 மணி நேரத்தில் மசோதாவைத் தயாரித்துவிட முடியும்.

ஃ

'தாழையூர்' நாகராஜன்,
தாழங்குடா.

கே: மணிமேகலையின் 'அமுத சுரபி' இந்த ரேஷன் காலத்தில் உங்களிடம் கிடைத்தால்?

ப: நான் சுயநலமி அல்ல! ரூபாயில்லாமல் மூன்று படி அரிசி போடும்படி கூறி அமுத சுரபியை அண்ணாவுக்கு அனுப்பிவைப்பேன்.

ஃ

எஸ். ஏ. மக்கள்தாசன்,
உருத்திரபுரம்.

கே: தமிழரசுக் கட்சியின் முயற்சியின்மீது கொண்டுவரப்படும் மசோதாக்களை எதிர்த்து தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பிரசாரம் செய்வதன் நோக்கம் என்ன?

ப: கேள்வியிலே பதில் அடங்கியிருக்கிறது. தமிழரசுக்கட்சி முயற்சியின் மீது கொண்டுவரப்படுவதுதான் அவர் எதிர்க்கக் காரணம்!

ஃ

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: இக்காலக் கன்னுட்டிகளின் கைப்பையில் என்ன இருக்கும்?

ப: கண்ணாடி இருக்கும்.

ஃ

வி. யோகா,
கொழும்பு-8.

கே: மனிதன் வாழ்வதற்குத் திருமணம் அவசியந்தானா?

ப: உள்ளம் பண்படாத வரை மனித வாழ்வுக்குத் திருமணம் அவசியமே.




## கவிஞர்களுக்கு ஒரு வாய்ப்பு

### புது முறைக் கவி அரங்கு

கவிஞர்களே!

இங்கு விளக்கப்படும் நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு கவிதை இயற்றி அனுப்புங்கள். கவிதை வெண்பாவாகவோ, விருத்தமாகவோ வேறு எவ்வகையாகவோ இருக்கலாம். 10-6-67 க்கு முன்னர் கவிதை அனுப்பப்படல் வேண்டும்.

நிகழ்ச்சி

'பெண்ணிற்பெருந்தக்க யாவுள?' என்று பெண்ணின் பெருமை பற்றி வினவுகிறார் திருவள்ளுவர். அவர் தமது துணைவியைப் பிரிந்தபோது "அடிசிற்கினியாளே......" என்று பாராட்டிப் பாடியதாகவும் ஒரு கதையுண்டு. அத்தகைய திருவள்ளுவர் மேனாட்டைப் பின்பற்றும் இக்கால நவ நாகரிகை நங்கை ஒருத்தியைக் காணுகிறார் என்று கற்பனை செய்யுங்கள். காணும் போது அவர் பாடியதாக ஒரே ஒரு கவிதை மட்டும் இயற்றி அனுப்புங்கள். கவிதைகளிற் சிறந்தவை 22-6-67ந் திகதி 'சுதந்திரனில்' வெளிவரும். மிக மிகச் சிறந்த கவிதைக்கு ஒரு பரிசும் உண்டு.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

புது முறைக் கவிதை
'சுதந்திரன்'
த. பெ. எண் 1183
கொழும்பு.



பசி வந்திட....

அமெரிக்க அரிசியாயிருந்தாலும் அதை வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதாக கேரள உணவு மந்திரி திருமதி கௌரி தாமஸ் அறிவித்தார்.

—செய்தி.

—'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று தெரியாமலா ஔவைப் பாட்டி சொல்லி வைத்தாள்?

சீனியை விட
இனிக்கிறது.

சீனித் தொழிற்சாலை ஊழியருக்கு சலுகைகள் வழங்க சீனிக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது.

—செய்தி.

—இச்செய்தி சீனித் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சீனியை விட இனிப்பாக இருக்கும். இல்லையா?

குழாயடியும்
சேலைக் கடையும்

சேலை வாங்கச் சென்ற இரு பெண்கள் கடைக்கு முன்னால் சண்டை பிடித்தனர்.

—செய்தி.

—குழாயடிச் சண்டை இப்பொழுது சேலைக் கடைவரை பரவி விட்டதோ?

காதல் முடிவு

காதல் விவகாரம் தற்கொலையில் முடிந்தது.

—செய்தி.

—முடிய வேண்டிய இடத்தில்தானே முடிந்திருக்கிறது. காதல் போயிற் சாதல்! தால்!! சாதல்!!!

அதையும்
சொல்லலாமே!

1966ல் இலங்கையில் ஒருவர் கூட கோடீஸ்வரர் ஆகவில்லை.

—செய்தி.

—ஏழைகளானது எத்தனை பேர் என்பதையும் கூறலாமே!

வெள்ளம் வடிகிறது

அகலவத்தையில் வெள்ளம் வடிகிறது.

—செய்தி.

—வகுப்புவாத வெள்ளமும் வடிந்து வருகிறது என்பதை தேர்தல்முடிவு உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் வெற்றிபெற வள்ளுவர் காட்டும் வழி

**திருவள்ளுவர் தினச் சிறப்பிதழ்**

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றார் புத்துலகுக் கவி பாரதியார். தமிழ் நாட்டிலே வள்ளுவர் பிறந்து, தமிழ் மொழியிலே திருக்குறளை ஆக்கி அதனை உலகத்துக்கே பொதுமறையாக்கிய பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

'தாம் இன்புறுவது உலகம் இன்புறக் கண்டு' எனக் கூறும் வள்ளுவர் உலகத்துக்குத்தான் உரியவர்.

'இரந்து உயிர் வாழவைத் தால் அதற்குரியவன் இந்த உலகத்தில் பரந்து கெடுக' என ஆத்திரங் கொள்ளும் வள்ளுவர் உண்மையில் உலகத்துக்கே சொந்தமானவர்தான்.

எந்த நாடு, எந்த இனம், எந்த மதம் என்ற வேற்றுமையில்லாமல், இந்த மாநிலம் முழுவதும் ஒரு பெருமனை. அதிலே வாழும் மக்கள் அனைவரும் ஒரு குலத்தினர் என்ற உயர்ந்த பண்போடு உலகப் பொது மறை தந்த செந்தமிழ் அறிஞர் வள்ளுவரை இன்று உலகம் புரிந்து கொண்ட அளவுக்கு தமிழினம் புரியவில்லையே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

## எல்லா மொழிகளிலும் குறள்

வள்ளுவர் தினம் வைகாசி அனுடமா, மாசி உத்தரமா என்ற ஆராய்ச்சியில் எம்மவர் இருக்க, திருக்குறளிலே பொதிந்திருக்கும் கருத்தாழத்தையும், அதன் பொருள் இனிமையையும் மேல்நாட்டவர் ஆராய்கின்றனர்.

ஒரு நாட்டு இலக்கியம் வேற்று நாட்டுக்குச் சென்று அங்குள்ள மக்களின் உள்ளங்களில் பரவுமானால் அந்த இலக்கிய மொழி அந்நாட்டு அரசியல் மொழியாக இருக்கவேண்டும்; அல்லது, மற்றைய மொழிகளிலே இல்லாத புதுமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இன்று அநேகமாக எல்லா மொழிகளிலும் திருக்குறள் பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி தெரியாதவர்களும் குறளின் அருமையை உணருகின்றனர்.

## நடமாடி

எந்தை எடுத்து மற்றவர்களுக்குக் காட்டும் கண்ணாடி தான் எமது முகம்.

"அடுத்தது காட்டும்
பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

ஆகவே, நாம் எமது முகத்தைச் சிரித்த முகமாக வைத்திருந்தால் நாம் எடுக்கும் முயற்சி வெற்றியில் முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சிரிக்கத் தெரிந்தவர்களுக்குப் பின்னே உலகம் கிடக்கும். முகத்திலே கொடுமையைத் தேக்கி வைத்திருப்பவர்களை யாருமே அண்ட மாட்டார்கள். கிட்டப் போகவும் அஞ்சுவார்கள். அவர்களுக்குத் தனிமைதானுண்டு.

சிரிக்கவேண்டும் என்பதற்காகச் சிரிக்கின்றவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் சிரித்தால் தம்மைத் தாமே நையாண்டி செய்வதுபோல அமைந்துவிடும். உள்ளத்திலிருந்து சிரிப்பு வந்தால் அதுவே வாழ்க்கையின் வெற்றிப்படியாகும்.



## வள்ளுவர் வழியைக் கடைப்பிடிப்போம்

தமிழினத்துக்குப் பெருமை யளித்துச் செந்தமிழ்த் தாயை அரியாசனத்தில் அமர்த்தி யிருக்கும் திருவள்ளுவனை நாம் மறந்தால் நன்றி கொன்றவர்களாக மாட்டோமா?

உலகத்தில் பிறந்த நாம் இன்பமாக வாழவேண்டும்—நல்ல வாழ்வு வாழவேண்டும் என்பதற்கு வள்ளுவர் கூறும் எளிய, இனிய முறையைக் கைக்கொண்டால் அதுவே போதுமானது.

## அகமும் புறமும்

நமக்கு ஒரு காரியம் நிறைவேற வேண்டியிருந்தால், சிரித்த முகத்தோடு சென்றால் கடின காரியம் கூட எளிதாகி விடும். சிரிக்கத் தெரிந்தவனுக்கு வசீகரிக்கும் தன்மை நிறையவுண்டு. நன்கு சிரிக்கத் தெரிந்தவன் உள்ளம் வெள்ளையாயிருக்கும். வெள்ளையுள்ளம் கொண்டவன் முகம் செழிப்பாயிருக்கும். ஒருவன் உள்ளத்தைக் காட்டுவது முகம். உள்ளத்தில் கொடுமையிருந்தால் முகத்திலே [illegible]

## இனிய மொழி

கடுஞ்சொற் கூறிக் காரியத்தைக் கெடுத்து விடுகின்றவர் பலர் வாயினால் சுடுகின்ற புண் மற்றவர் இதயத்தில் மாறாத வடுவாகி விடுகின்றது. அன்புமொழி கேட்டு உலகம் இன்பத்தில் மிதக்கிறது. ஆகவே, நல்ல வாழ்க்கை நடத்த வேண்டிய நாம் இனிய வார்த்தைகள் பேச வேண்டாமா?

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"

"இகலினும் இன்றுத
வெல்லாம் நகலாணும்
நன்னயம் என்றும்
செருக்கு"

சிரிப்பார்கள்! இனிக்கப் பேசவும் செய்வார்கள்! உள்ளம் மட்டும் கரவு, வஞ்சனை, குறிலே அடக்கியிருக்கும். உள்ளத்திலே நஞ்சினைத் தேக்கி, வெளியிலே நகைமுகம் காட்டி, அழகுறப் பேசி உலகத்தினை ஏமாற்றித் திரிகின்றவர்களை நாம் அறிவது கடினந்தான்! இத்தகைய பொலிவினிலே சிக்காமல், வெளிவேடத்தைக் கண்டு மயங்காமல் முன்னெச்சரிக்கையாக இருப்பதும் நமது வெற்றிக்கு ஒரு வழியாகும். அப்படி அவர்கள் ஏமாற்றுக்குள் சிக்கிவிட்டால் அறிவு முற்று மிள்வது கடினம். இத்தகைய வஞ்சகரைக் கண்டு

அஞ்சுகிறார் வள்ளுவர்.
"முகத்தின் இனிய
நகா அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்"

## அண்டிக் கெடுப்பவரிடம் இருந்து எப்படித் தப்புவது

ஒருவனை வஞ்சகன் என அறிந்து கொண்டதும் அண்டிக் கெடுக்க நினைப்பவர் சிலர். நேரிடையாகவே பகையாடத் தொடங்குவர் இன்னும் சிலர். இப்படிச் செய்வதால் இன்னமும் எதிர்ப்பு உச்ச நிலையடையும். பகை வலுவடையும்! இவைகளை நீக்க வள்ளுவர் கூறும் வழி மிகச் சுலபமானது. வஞ்சகனோடு நட்பாடுவது போல நாமும் நடிக்க வேண்டுமாம் ஆனால் அவன் சூழ்ச்சியில் சிக்காமல் காலம் பார்த்துத் தவறிவிட வேண்டுமாம்!

"பகைநட்பாம் காலம்
வருங்கால் முகம்நட்டு
அகம் நட்பு ஒரீஇ விடல்"

## பொறுமை

முகத்தளவில் நட்பை வைத்து சந்தர்ப்பத்தில் தவறிவிடுவதற்கு நேரத்திலும் வஞ்சகன் விரிக்கும் வலைக்குள் அகப்பட்டிருப்பவன் நெஞ்சம் குமுறத்தான் செய்வான். 'இரண்டில் ஒன்று' கண்டுவிடவேண்டுமெனத் துணிகின்றவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு வள்ளுவர் கூறும் வாய்மொழி 'பொறுமை' என்பது. பொறுத்தவர்க்கு என்றுமே அழியாத புகழ் என்கின்றார்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை
இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றும் துணையும் புகழ்"

'மேலும் மேலும் ஒருவன் தீங்கு செய்து கொண்டிருக்கின்ற போதிலும் அதனைப் பொறுக்க முடியுமா?' என ஆவேசங் கொள்ளுகின்றவர்களைப் பார்த்து, 'அவன் செய்த குற்றத்தை மறந்துவிடச் சொல்லுகிறார் வள்ளுவர்.

"பொறுத்தல் இறப்பினை
என்றும் அதனை
மறத்தல் அதனினும்
நன்று."

'பொறுக்க வேண்டும்; விரோதி செய்த குற்றத்தை மறக்க வேண்டும்!' என்று சாந்த வழியைக் காட்டுகின்ற வள்ளுவர் அதற்கு ஒரு குறுக்கு வழியையும் கூறுகின்றார்.

## நன்மையைப் [illegible] தீமை: மறக்க வேண்டும்

நல்லதும் கெட்டதும் உள்ளது உலகம், நல்லது மட்டும் செய்து கொண்டிருப்பவர்களை நாம் காண முடியாது. அது

(5-ம் பக்கம் பார்க்க)

## வள்ளுவனும் 'மகிழ்ச்சி' கொள்வான்

— காரை செ. சுந்தரம்பிள்ளை —

முப்பாலே சுந்தரமிழ் முனிவன்; காலம்
மூன்றிற்கு மேற்றபொரு ளாய்ந்து சொன்னேன்
எப்பாவ லர்க்குமுயர் வேந்தன் ஞாலம்
இருக்கும்வ ரைதமிழர்க் குயர்வு தந்தோன்
செப்பாத பொருளில்லை யென்று நல்லோர்
இசைமேத்தும் குறளாரம் கோத்து வைத்தோன்
இப்பாரு லோர்க்குவழி காட்டு கின்ற
இனியதமிழ் மறைதந்தோன் நாமம் வாழ்க.

இன்றியமை யாதாகுக(நு) எவர்க்கு மேற்ற
இனிதான பொன்மொழிகள் என்றும் வாழும்
மணிகள் கோத்ததுபோல் பகுத்து வைத்த
பாடலமைப் போடுஅதி கார வைப்பு
நன்னெறிகள் நானிலத்திற் கொளியை நல்கும்
நல்லமுழுமதி போன்ற தன்மை வாய்ந்த
இன்தமிழுக் கென்றுமணி கலனும் நிற்கும்
இலக்கியமாம் குறள் நாமம் என்றும் வாழ்க

அறமாய்ந்து பொருளாய்ந்து இன்ப மாய்ந்து
அதனாலே விடுபெறு கின்ற மார்க்கம்
திறமாக நுவல்கின்ற செம்மை மிக்க
திருமறையைத் தந்தஅரும் சிறப்பி னாலே
துறைபோகக் கற்றபே ரறிஞ ரெல்லாம்
தாயோர்க்குள் நாயனிப பெரியா ரென்றே
அறைகின்றார் விழாக்காணும் மேடை தோறும்
அழகுதமிழ் வள்ளுவன்பேர் இனிது வாழ்க.

இப்புவியோர் ஆற்றுகிற அறங்க ளுள்ளே
இல்லறத்தைப் போற்றுந்த நில்லை யென்றே
செப்புகிறான் அறவியலில் சிறந்த வாழ்க்கைச்
செவ்வியலே தெய்வநிலை கூறு கின்றான்
[illegible]
[illegible]
எப்போதும் இவ்வாழ்வாள் தயவை யன்றோ
எதிர்பார்த்து வாழ்கின்ற துலக மம்மா.

பொருளியலே ஆய்கின்ற புலவன் ஆமி
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உலக்க நாமே.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
மறைதந்த வள்ளுவனும் மகிழ்ச்சி கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் தழுவிய சமயம் எது

## ஓர் ஆராய்ச்சியாளரின் கருத்து

வள்ளுவர் இன்று உலகப் பொதுச் சொத்தாகிவிட்டார். அதனால் அவர் தழுவிய சமயம் என்னவென்பதில் ஆராய்ச்சியாளர்களிடையே பலதிறப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. பல வருடங்களாக பேரறிஞர்கள் பலர் ஆராய்ச்சி செய்தும், தீர்க்கமான முடிவுகள் எதுவும் ஏற்படவில்லை. தங்கள் தங்கள் ஆராய்ச்சிக்குத் தோன்றிய அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

சிலர் வள்ளுவர் சமண சமயத்தவர் என்கின்றனர். வேறு சிலர் வைணவர் என்கின்றனர். இன்னும் சிலர் பௌத்த சமயத்தவர் என்கின்றனர். மற்றும் சிலர் கிறிஸ்தவர் என்கின்றனர். இன்னொரு சாரார் சைவ சமயி என்கின்றனர். வேறொரு சாரார் வள்ளுவர் அருக சமயி என்றும் விவாதிக்கின்றனர்.

வள்ளுவர் யார்?

முதற்கண் வள்ளுவர் யார் என்று பார்ப்போம். வள்ளுவர் யார்: திருசேர்ந்த வள்ளுவர் ஒருவர், அவர்தான் திருவள்ளுவர். செந்தமிழ் உலக அரங்கில் ஒலிக்க வழி வகுத்த வேளாண் குடித் தமிழன். 'உலகம் உய்ய வேண்டும், மக்கள் பண்போடு வாழ வேண்டும்' என்ற பரந்த நோக்கோடு ஒரு அறிவுக் களஞ்சியத்தை அதாவது ஒரு வாழ்க்கை நூலை உலகிற்கு அளித்த பேரறிஞன்.

திருவள்ளுவர் பிறந்திராது விட்டால் தமிழன் என்றொரு இனம் உண்டென்பதை உலகம் அறிந்திராது. திருக்குறள் என்ற நூல் தோன்றியிராது விட்டால் தமிழ் என்றொரு மொழி உலகில் உண்டென்பதை வேற்று மொழியாளர்கள் அறிந்திருக்க முடியாது. இன்று உலகத்திலுள்ள எவை பதிற்கு மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து திருக்குறளில் உள்ள கருத்துக்கள் அம்மொழியாளர்களை எவ்வாறு கவர்ந்திருக்கிறது என்று புரிகிறதல்லவா.

குறள் தரும் ஆத்மிக ஒளி

சேற்று நிலத்திலே வழுக்கி வழுக்கி நடக்கிறவனுக்கு ஊன்றுகோல் துணை செய்வது போல, வாழ்க்கையிலே வழுக்கி வழுக்கி விழுகிற மக்களுக்கு திருக்குறள் துணை புரிகிறது. நாத்திகம் பேசுகிறவர்களுக்கும், அஞ்ஞான இருளில் அமர்ந்திருப்பவர்களுக்கும் குறளில் காணப்படும் சமயக் கருத்துக்கள் ஆத்மீக ஒளியை ஊட்டுகின்றது.

உலக மக்கள் சீரிய வாழ்க்கை வாழ வேண்டும். சமயக் கொள்கைகள் அவர்கள் வாழ்க்கையில் தெரிக்க வேண்டும். இவ்வரிய கருத்துக்களை, இலக்கியம் போல் சுவைத்தும்; அரசியல் போல் நுகர்ந்தும்; கலை போல்; போற்றியும்; மக்கள் அனுபவிக்கக் கூடிய வகையில் திருக்குறள் ஆக்கப்பட்டிருக்கிறது.

உலகின் பொதுச்சொத்து

உலக மக்கள் விரிந்து நோக்கக் கூடியவகையில் குறள் செய்யப்பட்டிருக்கின்றது. இது தமிழ் பண்பு, தமிழனுடைய பண்பும் ஆகும். தமிழர்கள் எதைச் செய்யும் போதும் உலகத்தை நோக்கியே செய்திருக்கிறார்கள். ஆண்டவன் உலகத்திலுள்ள ஜீவகோடிகள் யாவற்றையும் நேசத்தோடும், பாசத்தோடும், சமரசமாக நோக்கியிருக்கின்றார். அதே போல் வள்ளுவரும் உலகத்தை நோக்கி இருக்கின்றார். இவ்வாறு வள்ளுவர் உலகத்தை பாகுபாடற்ற முறையில் அணுகியதற்கு அடிப்படை அவரிடத்தே காணப்பட்ட சமயக் கருத்துக்களேயாகும். அக் கருத்துக்கள் யாவும் சைவசமயத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பது குறளை நுணுகி ஆராய்வோருக்கு எளிதில் விளங்கும்.

கடவுள் வாழ்த்து

திருக்குறளின் தூற்றி முப்பத்தி மூன்று அதிகாரங்களுள் முதன்மையாகவும் பெருமையாகவும் இலங்குவது கடவுள் வாழ்த்து. ஆரம்பத்திலேயே தெய்வ மணம் கமழ்கிறது. எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உள்ளது போல் இவ்வுலகம் ஆதி பகவனை முதலாக உடையது. 'இறைவன் இல்லாமல் இவ்வுலகம் இல்லை' இது ஒவ்வொரு குறளிலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அருட்செல்வம் எல்லாச் செல்வங்களிலும் மேலானது. இத்திருவருட் செல்வத்தைப் பெறுவதற்கு வழி என்ன என்றும் வள்ளுவர் கூறுவதற்கு தவறவில்லை.

'பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு'

பற்றுக்களை நீக்கிய இறைவனின் பற்றினைப் பற்றினால் தான் எம்மைப் பிடித்திருக்கும் உலகப் பற்றுக்கள் நீங்கும். இப்பற்றுக்களை வேரறுத்தால் தான் திருவருள் கிடைக்கும். இத்திருவருளைப்பெற்றால் தான் வாழ்க்கையில் ஈடேற்றம் பெறலாம் என்பதை வள்ளுவர் தெட்டத் தெளிவாக கூறுகிறார். இவைகள் நல்ல சான்றுகள் அல்லவா அவர் எச்சமயத்தைச் சார்ந்திருப்பார் என்பதற்கு மேலும் சென்று பார்ப்போம்.

ஞானம் என்றால் என்ன?

'ஐந்து' என்பது சைவசமயத்தில் பல தத்துவக் கருத்துக்களைக் குறிக்கும் சொல்லாக கருதப்படுகிறது.

'ஐந்தவித்தான் ஆற்றல்
அகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி'

இதில் 'ஐந்து' அவித்தான் எனபது ஐம்புலன்களைக் குறிக்கிறது. ஐம்புலன்களை அடக்கியவன் தான் திருவருள் மாட்சியைப் பெற முடியுமென சைவசமயம் போதிக்கிறது. இந்த ஆத்மீக கருத்து வள்ளுவருக்கு எப்படித் தெரிய வந்தது! சிந்தித்துப் பாருங்கள்.

வள்ளுவர் 'ஞானம்' என்பதற்கு நல்ல விளக்கம் கொடுக்கிறார். 'ஞானம்' என்பது மெஞ்ஞான அறிவு, ஞான பிற்குப் பின் மெய்யறிவு பிறக்கிறது. எது மெய்யறிவு என்பதை தெரிந்து கொள்வதற்கு நிலையாமை என்ற அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் செல்வம் நிலையாது. உடல் நிலையாது என்று தெளிவாக கூறுகிறார் வள்ளுவர். அதில் உடல் நிலைக்காது என்பதைப் பற்றிய குறள்களைப் பாருங்கள்:

'நெருநல் உளனொருவன்
இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு'

இதன் பொருள்: நேற்றிருந்த ஒருவன் இன்றைக்கு இல்லை என்னும் பெரிய உண்மையுள்ளது இந்த உலக வாழ்க்கை என்பது -

'ஒரு பொழுதும் வாழ்வ
தறியார் கருதுப
கோடியு மல்ல பல'

'ஒரு நாள் முழுதுக்கு மேலும் உயிரோடு இருப்பார்கள் என்பதை நிச்சயமாக சொல்ல முடியாத மனிதர்கள்

**ஐ. தி. சம்பந்தன்**

நினைக்கிற நினைவுகளோ ஒரு கோடி, இரண்டு கோடியுமல்ல, பல கோடி நினைவுகள் — என்பது.

'குடம்பை தனித்தொழியப்
புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு'

இதன் பொருள்: உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு முட்டையின் ஓட்டினை விட்டு விட்டுப் பறவைக் குஞ்சு பறந்து போய்விடுகிற அதே மாதிரித்தான் என்பது.

'உறங்குவது போலுஞ்
சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

தூங்குவது போன்றது மரணம். தூங்கி விழிப்பது போன்றது மறுபடியும் பிறத்தல் என்பதாகும்.

பகவத்கீதையும் குறளும்

இந்தக் குறள் 'பிறந்தவன் இறப்பான், இறந்தவன் பிறப்பான்' என்ற பகவத் கீதையின் கருத்தை ஒத்திருப்பது குறிக்கத் தக்கது.

நவம் செய்வதன் நோக்கம் 'பிறவாமை' என்னும் முத்தி நிலையைப் பெறுவது. தவ ஒழுக்கங்களான விரதங்களைக் காத்து மெய்ஞானத்தை உணர்ந்து எல்லா ஆசைகளையும் விட்டொழித்தால் அதுவே முத்தி நிலை. இவ்வுலக இன்பங்களையும் ஆசைகளையும் துறந்தவனுக்கு மறு பிறப்பில்லை என்பது சைவசமயம் பகரும் உண்மைக் கருத்து. அதைத் திருவள்ளுவரும்,

'அவா என்ப எல்லா
உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா அப்பிறப்பீனும் வித்து'

என்ற குறளில் சொல்லுகிறார். எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் தப்பாமல் பிறப்பை உண்டாக்குகிற விதை ஆசை தான் என்று சொல்லப்படுகின்றது.

ஒழுக்கம்

ஒழுக்கம், கட்டுப்பாடு, என்பன சைவசமய கோட்பாடுகளில் தொன்மையானதும், முக்கியமானதுமாகும். இதை வள்ளுவர்,

'ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

உயிர் போனால் மீண்டும் வராது என்பது எல்லோருக்கும் தெரியும். அதே போல ஒழுக்கம் தவறினால் மீண்டும் அதைத் தேட முடியாது. ஒழுக்கம் தவறி விட்டால் சமயப் பண்பு குன்றி விடுகிறது. ஒழுக்கத்தைப் பேணினால் சமய நெறி வளரும் என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறு தத்துவ அடிப்படையில் வள்ளுவர், சைவ சித்தாந்த கொள்கைகளையே வாழ்க்கையில் கடைப்பிடித்தார் என்பதும் அதையே குறளில் கையாண்டுள்ளார் என்பதும் புலனாகிறது.

சைவசமயக் கருத்துக்கள்

'கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவா அறுத்தல், ஊழ்' ஆகிய அதிகாரங்களில் சைவசமயக் கருத்துக்கள் மலிந்திருப்பதைக் காணலாம்.

வள்ளுவர் சைவர்

இது வரை எடுத்தியம்பிய கருத்துக்களிலும், இன்னும் சொல்லாமல், குறளில் பொதிந்திருக்கும் கருத்துக்களிலிருந்தும், திருவள்ளுவர் பெரும் பாலும் சைவசமயத்தை சேர்ந்தவர் என்பதை ஐயம் தெளிவுபட தெரிந்து கொள்ளலாம்.

ஒரு சமய ஞானியாக இருந்து நல்ல சமயக் கருத்துக்களை பைந்தமிழில் படைத்து அதை உலகத்திற்கு அளித்து, சைவமும் தமிழும் வாழ வழி வகுத்து வான்புகழ் கொண்ட வள்ளுவனை நாம் எவ்வளவு போற்றினாலும் மிகையாகாது.

# அச்சம் வேண்டுமா?

பாரதியார், அப்பர் சுவாமிகள், ரூஸ்வெல்ட் முதலிய புலவகைத் தலைவர்களும் 'அஞ்சற்க!' என்று கூறும் போது அஞ்ச வேண்டுமென்றும் கூறுகிறார் ஒருவர். அவ்வொருவர் யார்? அவர் தான் திருவள்ளுவர்.

அஞ்சற்க என்று அவரும் பல இடங்களிற் கூறுகிறார்;

'வாள் போற் பகைவரை
அஞ்சற்க!'—குறள் 882
'அச்சமுடையார்க்கு
அரணில்லை!'—குறள் 534
'அஞ்சாமையல்லால் துணை
வேண்டா!'—குறள் 497
'அஞ்சாமை ஈகை அறிவூக்கம்
இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கியல்பு'
—குறள் 382
'அச்சமே கீழ்களது ஆசாரம்!'
—குறள் 1075

இம்படியெல்லாம் அச்சத்தைக் கண்டித்த வள்ளுவர், 'அஞ்சாமை பேதைமை' (குறள் 428) என்கிறார்; 'விழுமியார் அஞ்சுவர்!' (குறள் 201) என்கிறார்; 'அஞ்சுவதோரும் அறனே' (குறள் 366) என்கிறார். அது மாத்திரமல்ல, 'அறிவார் தொழிலே அஞ்சுவது!' (குறள் 428) என்கிறார்!

எதற்கு அஞ்ச வேண்டும்? பழிக்கு அஞ்ச வேண்டும்; கொலைக்கு அஞ்ச வேண்டும்; தீயவற்றைத் தீயினுக்கும் மேலாக அஞ்சவேண்டும். உட்பகை பொல்லாதது; உடனிருந்து கொல்வது. 'உட்பகை அஞ்சித் தற்காக்க' வேண்டும். 'கேள் போற் பகைவர்

**மு. சிவானந்தம் எம். ஏ.**

தொடர்பு அஞ்ச' வேண்டும். பொதுவாக, அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்ச வேண்டும்.

'அஞ்சுவது அஞ்சாமை
பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்'

என்கிறார் வள்ளுவர்.

'அவன் துணிவுள்ளவன்; எதற்கும் அஞ்சாதவன்!' என்று எவரைப்பற்றியாயினும் கூறப்பட்டால், அப்பொருள் மெய்ப் பொருள் காணவேண்டுவது நமது அறிவு. பொய் சொல்லத் துணிந்தவன், பழிக்கு அஞ்சாதவன், களவெடுக்க அஞ்சாதவன், ஏமாற்ற அஞ்சாதவன் என்றெல்லாம் கூடக் கருதக் கொள்ளலாம் அல்லவா? எனவே அஞ்சா நெஞ்சமுள்ள அசகாயசூரர்களைப் பற்றிக் கொஞ்சம் கவனமாய்த்தான் இருக்க வேண்டும்!

அப்படித்தானே?

## வாழ்வில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போலவே ஒருவன் முழுக்க முழுக்கக் கெட்டவனாகவும் இருக்க முடியாது. ஒருவன் சிறிது நன்மை செய்து பெருமளவு தீமை செய்பவனாயிருந்தால்கூட அவன் செய்த சிறிய நன்மையை எண்ணிப் பார்த்துத் தீமையை மறந்து விடும்படி கூறுகிறார் வள்ளுவர்.

''கொன்றன்ன
இன்னாசெயினும்
அவர் செய்த
ஒன்றுநன்று
உள்ளக் கெடும்.''

வாழ்க்கையின் வெளிப் பகட்டில் ஏமாந்து போகாமல் அதன் உயர் நிலையை அறிந்து கொண்டவர் வள்ளுவர். அதனால் தான் ஒரு காலத்துக்கோ, ஒரு நாட்டுக்கோ நீதி சொல்லாமல், எந்த நாட்டுக்கும், எக்காலத்துக்கும் தேவையான திருக்குறளை ஆக்கித் தமிழன்னையின் பெருமையை உலகறியச் செய்தவர். இதனாலேயே, 2000 ஆண்டுகளுக்கு முன்னால் செய்த திருக்குறளை இன்றும் ஏற்றி வள்ளுவரைப் போற்றுகின்றோம்!

நீர்கொழும்பில் வள்ளுவர் விழா

இன்று பிற்பகல் 4-30 மணி தொடக்கம் நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் ஷெ சங்கத்தின் ஆதரவில் திருவள்ளுவர்விழா வெகு சிறப்பாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரநாயக்காவின் கொள்கையை கையாள்வதற்கு சிங்கள ஏடு கண்டனம்

'இந்தத் தேசிய அரசாங்கத்தின் தலைவர் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் கொள்கைக்குப் பதிலாக 'பண்டார நாயக்கா கொள்கையை' அமுல் நடத்த முயற்சிசெய்ததின் விளைவாக காட்டில் போகும் நாக பாம்பைப் பிடித்து மடியிலே போட்டுக் கொண்டு 'கடிக்கிறது கடிக்கிறது' என்று கூச்சலிட்டவரின் நிலைக்குவந்திருக்கிறர்'

இவ்வாறு சிறிலங்காதிப்ப (16-5-67) எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கட்டுரை மேலும் கூறுவதாவது:

'நியாயமான தமிழ் உபயோகச் சட்டமும், மாவட்ட சபை மசோதாவும், சிறிமா சாத்திரி ஒப்பந்தமும் பண்டாரநாயக்கக் கொள்கையின் முக்கிய அம்சங்களல்லவா? அப்படியல்ல என்று திருமதி. சிறிமா பண்டாரநாயக்காவுக்கு தெய்வங்கள் முன்னிலையில் நின்று கூறமுடியுமா?

சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்துக்குத் திருமதி பண்டாரநாயக்காதான் கையெழுத்திட்டார். இன்று அவரே அதை எதிர்க்கிறர். தமிழர்களுக்கு மாவட்ட சபை அமைத்துக் கொடுப்பதாக அவர் 1964ம் வருட சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்தார். இன்று அவரே அதனை எதிர்க்கிறர்.

அது ஒரு புறமிருக்க, பண்டாரநாயக்க அரசாங்கத்தில் வர்த்தக அமைச்சராக இருந்த திரு. ஆர். ஜி. சேனநாயக்க அவரது காலத்துள் அன்னிய வியாபாரிகளை ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார் என்று கேட்கின்ருேம்

பிறக்கோட்டையைப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்தி போரா வியாபாரிகள் கும்பலையும் சினிமாப்படத் தயாரிப்பைச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் கோஸ்டியையும் அடக்காமல், நாட்டை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்வது கேலிக்கூத்தாகும்.'

## சிங்கள இதழ்களில்...

# தென்னிந்திய தமிழர்கள் இங்கு வருவதேன்?

## 'சிங்களே' கூறும் காரணம்

'தென்னிந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு அதிகமாக வரத் தொடங்கி விட்டனர். இங்குவரும் ஒவ்வொரு தமிழனும் இலங்கையிலுள்ள பல்வேறு சங்கங்களின் அழைப்பின் மீதே வருகிருன்' என்று சிங்களே (16-5-67) எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

இக்கட்டுரையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

'அவ்வாறு இங்கு வரும் தமிழர்கள் இலங்கையில் தங்களின் செல்வாக்கைப் பலப்படுத்துவதற்குப் பல்வேறு நுட்பமான உபாயங்களைக் கையாண்டு, அந்த ஸ்தாபனங்களை 'நாம் தமிழர்' இயக்கத்துடன் இணைத்துச் செல்லுகின்றனர்.

அவர்கள் இலங்கைக்கு வந்ததும், வருவதும் உற்சவங்கள் நடனம், நாடகம் சங்கீதக் கச்சேரி முதலிய வற்றை நடத்துவதற்கே. அவ்வாறு இங்கே வந்த தென்னிந்திய நடிகர் தங்கவேல் கம்பளையில் நடைபெற்ற ஒரு கலை நிகழ்ச்சியின் போது 'இலங்கையில்ஒரு தேயிலைத் தோட்டத்தை விலைக்கு வாங்க நினைக்கிறேன்' என்று போக்கு வரத்து உதவி அமைச்சரின் ஆசியுடன் கூறினர்.

இரகசியமாக இந்நாட்டுக்கு வந்தவர்களிடையே அண்மையில் இங்கு வந்த பிரபல தென்னிந்தியப் பாடகர் திரு. டி. எம். சௌந்தரராஜனும் ஒருவராவர்.

அவர் 'நாம் தமிழர்' ஸ்தாபனத்தின் வாயிலாக மட்டக்களப்பு, நாவலப்பிட்டி கம்பளை ஆகிய நகரங்களில் கட்டணம் வசூலித்து கச்சேரி நடத்தினர். இதில் வசூலான பணம் புஸ்ஸெல்லாவ சரஸ்வதி வித்தியாலய நிதிக்கு என்று அவர்கள் கூறிக் கொண்டார்கள்.

ஆனல் இந்தப் பணம் நாம் தமிழா இயக்கம் இலங்கையில் செயல்படுவதற்காகச் செலவு செய்யப்படும்.

இது சம்பந்தமாக கம்பளையிலுள்ள சிங்கள மக்கள் பீதியடைந்துள்ளனர். தென்னிந்தியத் தமிழர் தலைவர்களின் வருகையைத் தடுக்காவிட்டால், சிங்கள மக்கள் வருங்காலத்தில் பெரும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும்'




பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: காமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 3597—6522


## சிங்கள கிராம வாசிகளை விரட்டுகிருர்களாம்

'திருமலையிலிருந்து சிங்களவர்களை விரட்டும் முயற்சி' என்ற தலைப்பின் கீழ் எத்த (9-5-67) கீழ்க்காணும் செய்தியை வெளியிட்டுள்ளது.

'திருகோணமலையில் வில்கம் ரஜமகா விகாரையை அடுத்துள்ள பிரதேசத்தில் குடியேறியுள்ள சிங்கள வர்களை அங்கிருந்து செல்லும்படியும், அப்படிச் செல்லாவிட்டால், வீடுகளுக்கு தீ வைத்து விரட்டி விடப்படுமென்றும் ஒரு கிராம சேவகரும் இரு போலிஸ் அதிகாரிகளும் வந்து பயமுறுத்தினர் என்று வில்கம்புற ஐக்கிய விவசாயிகள் சங்கம் திருமலை அரசாங்க அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இக் கடிதத்தின் நகல்கள் பிரதமருக்கும் காணி அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அனுதரவாகச் செல்ல கிராம வாசிகள் தயாரில்லை என்றும்' விகாரைப் பிரதேசத்தில் வசிக்கும் ஒவ்வொரு கிராமவாசிக்கும் வீட்டுடன் காணியும் வேறு ஓர் இடத்தில் கொடுக்கப்பட்டால், அத்துடன் விகாரைப் பிரதேசத்தில் பௌத்தர்கள் மட்டும் குடியேற்றப்படுவார்களானல் மட்டுமே அரசாங்க அதிபர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இணங்கத் தயாரென்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கந்தோர்களில் சி. ஐ. டி. கள்

'அரசாங்கத்தின் எல்லா அலுவலகங்களிலும் அரசாங்கத்துக்கு ஆதரவு காட்டாத அல்லது அரசாங்கத்தைக் குறைகூறும் அரசாங்க ஊழியர்கள் பற்றிய துப்புக்களைக் கண்டு பிடிப்பதற்காக இரகசிய போலிசாரை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்துள்ளது'

—சிங்களே (16-5-67)

## பதவி விலக வேண்டுமாம்

பிரதமர் ராஜிநாம செய்ய வேண்டும் என்ற தலைப்பின் கீழ் எத்த (18-5-67) எழுதியுள்ள தலையங்கத்தில் அகலவத்தை உட்பட ஏழு இடைத் தேர்தல்களிலும் ஐ. தே. கட்சி தோல்வி கண்டிருப்பதால் பிரதமர் ஆட்சிபுரிவதற்கான தார் மீக ஆதரவை இழந்துவிட்டாரென்பது தெளிவாகிறதென்றும் அவர் பதவி விலக வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## வீரகேசரி மீது பாய்ச்சல்

'வண. மல்வத்தை தமாநாயக்க தேரோ பதவியையும் பௌத்த தர்மத்தையும் இழிவுபடுத்தக் கூடியதாக வீரகேசரி என்னும் தமிழ் பத்திரிகை தொடர்கதை என்ற பெயரால் செய்யப்பட்ட நிந்தனைக்குத் தண்டனை அளிப்பதற்கு பிரதமர் இதுவரை நடவடிக்கை எடுக்காமலிருப்பது வேதனைக் குரிய விஷயமாகும் என்று வண. கந்தேகம நாரத தேரோ வனவாசல ஐக்கிய வாலிபர் நலவுரிமைச் சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

வீரகேசரி இந்நாட்டு பௌத்தர்களை நிந்தனை செய்ததற்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காகவே இக்கூட்டம் நடத்தப்பட்டது. இம்மாதிரி அநாகரிகமான கதைகளை வெளியிடுவதற்கு வீரகேசரி நிறுவனத்துக்கு நீண்ட காலத்துக்கு இடம் கிடைக்காது என்று வண. ஹாஸ்வெவ்லே சிறி நிமல தேரோ கூறினர்.

—எத்த(4-5-67)

## பிக்குகளுக்கு அழைப்பு

'செல்வ நாயகத்துடன் சேர்ந்து பிரதமர் நடத்திக் கொண்டிருக்கும் இந்த ஆட்சியின் விளைவாக இன்னும் 10 ஆண்டுகளுள் நாடும், இனமும், சமயமும் அழிந்துவிடக் கூடியதாக இருப்பதால் இலங்கையிலுள்ள பிக்குகள் அனைவரும் முன்னணிக்கு வந்து இந்த நிலைமையிலிருந்து நாட்டைக் காப்பதற்காக போராடவேண்டும்' என்று தென்னிலங்கை சங்க நாயகரான வண. நலுவே குணநந்த நாயக்க தேரோ பெப்பிலியான சுநேத்தரா மகா பரிவேணவில் நடந்த ஒரு பரிசளிப்பு விழாவில் கூறினர்.

—எத்த (18-5-67).

## அஞ்சல் வேலைகள் தமிழில்

'வட, கிழக்கு இரு மாகாணங்கள் தவிர்த்து, ஏனைய மாகாணங்களில் தபால் கந்தோர் வேலைகள் சிங்களத்தில் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு தபால் மா அதிபர் எல்லா தபால் கந்தோர்களுக்கும் சுற்று நிருபம் விடுத்துள்ளார்.

இது என்ன அர்த்தம்.

வட, கிழக்கு மாகாணங்களில் தபால் கந்தோர் வேலைகளைத் தமிழில் செய்யுங்கள் என்பது தானே இதன் பொருள்?

தமிழ் மொழி விசேட விதிகள் விவாதத்தின் போது சிங்களம் மட்டும் சட்டம் பருத்தித்துறைமுதல் தெவுந்துறை வரை அமுல் நடத்தப்படும் என்று கூறப்பட்ட கொள்கை எங்கே? மொழிக்கொள்கைக்கு இடி விழுந்து விட்டதா? தமிழ் விதிகளால் சிங்கள மொழிக்கு ஆபத்து ஏற்படாமல் தடுத்த இலச்சணம் பிரமாதம்'

—சிங்களே (16-5-67)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறும் பேச்சல்ல

"குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்றுஎங்கடை ஔவைப் பாட்டி கூறிவைத்தது பொய்யாகிப்போகுமே?' என்று கேட்டுக் கொண்டே வந்தார் அப்பாக்குட்டி அம்மான்.

"என்னம்மான் இது, இன்று தத்துவத்தில் விழுந்து விட்டீர்கள்? என்ன விஷயம்? என்றேன்.

"இல்லை, ஒரு காலத்திலெவ்வளவு பெரிய பெருமையோடை, கௌரவத்தோடை, வாழ்ந்த இந்தச் சுகர்ணோஇன்றைக்கு பட்டம் பதவியழந்து அரண்மனையிருந்தும் துரத்தப் பட்டுவிட்டதை நினைச்சன். அதுதான் பாட்டு வந்தது'என்றார் அம்மான்.

"சரிதான் அம்மான், பதவியென்பது எப்பொழுது நிலையானதல்லவே!

"நீ அப்படி சொல்லுகிறாய். இலங்கை எங்கடை அரசியல்வாதிகள் பதவிக்காக எப்படி எப்படியெல்லாம் பொய்ப்பிரசாரம் செய்யினம் தெரியுந்தானே!

"அம்மான், ஆரைச்சொல்லுறியள்?

'உந்தக்கூட்டாட்சிக் கட்சிகளைத்தான் சொல்லுறன். அவையளின்ரை தலைவி சிறிமாவோ அம்மையார் போடுகிற கூச்சலைக் கேட்டால் மீண்டும் ஒரு 1958 வருமோ என்டுபயமாக கிடக்கு. என்ன இருந்தாலும் ஒரு நீதி ஞாயம் வேண்டாமே! மனிசி இப்பிடி பச்சை பச்சையாய் வகுப்பு வாதத்தை கக்குது! இதுக்கு சமசமாஜிகளும், கம்யூனிஸ்டுகளும் ஒத்துதினம் என்றார் அம்மான்.

"அம்மா யாழ்ப்பாணம் வரப் போவதாகபத்திரிகையில் செய்தி வந்ததே!'

"வந்திருந்தா சிலவேளையிலை இப்பிடியெல்லாம் பேசியிருக்க மாட்டா. ஒரு கூட்டத்திலை வடக்கு, கிழக்கிலை பெயர்ப்பலகைகளில்உள்ள சிங்களச் சொல்லைத் தமிழர்கள் அழிக்கினம் எண்டு சொல்லியிருக்கிறாவாம். இதைக்கேட்டுக்கொண்டு நிண்ட பல சிங்கள ஆக்கள் சிரிப்பாய்ச் சிரிச்சினமாம். ஏனெண்டால் அவையள் அம்மா இப்பிடிப் பேசுவதற்கு இரண்டு நாள் முன்னம்தான் யாழ்ப்பாணத்துக்கு போய் வந்தவை. அவைக்கு அம்மா சொல்லுகிறது 'பச்சைப் பொய்' எண்டு தெரியும். பொய்யை சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமே? இப்பிடித்தான் தி. மு. க. பூச்சாண்டியும்! தி. மு. க. வைப்பற்றி அம்மா காட்டும் பூச்சாண்டி வெறும் ஏமாற்று என்பதையும் சிங்கள மக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள்"

'அப்போ, அம்மா என்னதான் கூறினாலும் மக்கள் எடுபட மாட்டார்கள் அப்படித்தானே!

"அப்படித்தான் நினைக்கிறன். அதுசரி, மாவட்டசபை பற்றி பிரதமர் இப்பிடிக் கூறி விட்டாரே!

"என்ன கூறிவிட்டார்? மாவட்டசபை அமைப்பது தமது கொள்கையில்லை என்று கூறினாரா?

"இல்லையே! மாவட்ட சபை அமைப்பது தேசிய அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கையென்றும் மாவட்ட சபை அமைக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்"

"தமிழரசாருடன் மாவட்ட சபை பற்றிபேசவில்லையென்று கூறினாரா"

"சே, சே, தமிழரசாருடன் சபைபற்றி பலமுறை பேச்சு வார்த்தை நடத்தியதாகவல்லவா கூறியிருக்கிறார்! இனி வழமையான பாராளுமன்ற முறைப்படி மசோதா தயாரிக்கப்பட்டு நாட்டு மக்களின் ஒப்புதலுடன் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும் என்றும் கூறியிருக்கிறாரே!

"பின்னர் பிரதமர் கூறியது பற்றி என்னவோ சொன்னீரே...!

"நான் அதுக்குச் சொல்லேல்லை, சில தினசரி பத்திரிகைகள்தான் என்னவெல்லாமோ கூறுகின்றன!

"அது தெரிந்ததுதானே அம்மான். இந்தத் தினசரிகளின் சுயரூபம் தெரிந்த நீங்களே இப்படித்தடுமாறலாமா?

"தவறுதான் தம்பி...எனக்கு இந்தப் பத்திரிகைகளின் [illegible] நோக்கம் விளங்கிது. [illegible] றவையளிடம் இதைப்பற்றி எடுத்துச் சொல்லுறன்' என்று விடைபெற்றார் அம்மான்.

# இராகலையில் வாலிபர் முன்னணி மாநாடு

## அண்ணா அரங்கில் நடைபெறும்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வாலிப முன்னணி மகாநாடு எதிர் வரும் ஜுன் மாதம் 21ம் 22ம் திகதிகளில் இராகலை நகரில் வெகு விமரிசையாக நடைபெறு மென்று தெரிகிறது.

இதற்கான சகல வேலைகளையும் கழகத்தின் துணைச் செயலாளரும் வாலிப முன்னணி அமைப்புச் செயலாளருமான திரு. கே. பி. செல்லத்துரை கவனித்து வருகிறார்.

இம்மகாநாட்டில் கலைவிழாவும் நாடக விழாவும் இடம் பெறும். அத்துடன் கோலாட்டம், கும்மி, கரகாட்டம் போன்றவைகளும் நடைபெறக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இராகலையில் நிர்மாணிக்கவிருக்கும் நடேசய்யர் அரங்கில் கலைவிழாவும், தந்தை செல்வா அரங்கில் மாதர் முன்னணி மகாநாடும், அண்ணா அரங்கில் வாலிப முன்னணி மகாநாடும் நடைபெறும்.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ள விருப்பவர்கள் பொகவந்தலாவ, மஸ்கெலியா, சாமிமலை, ராசாத் தோட்டம், அட்டன், நோர்டன், தலவாக்கொல்லை, டயகாம, அக்கரப்பத்தனை, பசுமலை, பன்விலை, கண்டி, மாத்தளை, ஹேவாகெட்ட, மடுல்சீமை, நாவலப்பிட்டிய, கினிகத்தேன, ஒப்படன், பசறை, பதுளை, பண்டாரவளை, கந்தப்பளை, அரக்பத்த, கம்பாயம் ஆகிய பகுதிகளிலிருந்து விசேட பஸ்வண்டி மூலம் வருவதற்கான ஏற்பாடுகள் இப்பொழுதே செய்யப்பட்டுவிட்டன.

இங்கு நடைபெறும் இம்மகாநாட்டில் புதுமுறையில் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு மேற்படி மாநாட்டு குழுவினர் பல ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர்.

இம்மாநாட்டிற்கு கழகத்தின் தலைவரும் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. என். நவரத்தினம் தலைமைதாங்குவார். மற்றும் இ. த. அ. கட்சியின் வாலிப முன்னணி தலைவர் திரு. செ. இராசதுரை பா. உ. அவர்கள் விசேட விருந்தினராக கலந்து கொள்வார்.

மாதர் மாநாட்டுக்கு மாதர் சங்கத்தலைவி திருமதி ராசன் தெய்வானை தலைமை வகிப்பார். மற்றும் தந்தை செல்வநாயகம் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம், மங்கையர்கரசி அமிர்தலிங்கம் செனட்டர் சு. நடராசா, திரு. மு. ஆலாலசுந்தரம், உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள், இணைப் பொருளாளர் திரு. எல். வாணன், தொழில் உறவு செயலாளர் திரு. ஏ. ஜே. சாமுவேல் ஆகியோருடன் மற்றும் பலர் உரை நிகழ்த்துவார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

## 'எம்மலையக வாலிபர்கள் எழுத்தாளராக வேண்டும்'

மலையகத்திலே பல அறிவகங்களும் மன்றங்களும், படிப்பகங்களும் ஏற்படல் வேண்டும். அதன் மூலம் எம் மலையக வாலிபர்கள் எழுத்தாளர்களாக கவிஞர்களாக வளர வேண்டும். எமது இனத்திற்கு இன்று தேவைப்படும் உரிமைகள் பற்றி சென்றவிடமெல்லாம் செப்ப வேண்டும். அதன் மூலம் எமது சமுதாயமே எழுச்சியுற வேண்டும் என்பதே எனது அவாவாகும். இதைச் செயல்படுத்த எமது கழகம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எமது குழந்தைகள் நல்ல முறையிலே கல்வியைப் பெறுவதற்கு, நேர்மையும் உண்மையும் உள்ளவர்களாக வளர்வதற்கு இது போன்ற மன்றங்கள் உதவும் என்பதே கழகத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு கடந்த 8-5-67ல் [illegible] பெரிய மட்டுக்கொல்லைதோட்டத்தில் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் [illegible]றிய கழகத்தின் தலைமை அலுவலக பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன் கூறினார். கழகத்தின் இணைப்பொருளாளர் திரு. மு. எல்லாளன் தலைமை வகித்தார்.

எமக்கு நல்ல முறையில் கல்வி வசதியை ஒரு சில அரசாங்கங்கள் கொடுக்கத்தவறின. அதைத் தொழிலாளர் தலைவர்களும் தட்டிக் கேட்கவில்லை. காரணம் தொழிலாளர்கள் கல்வி வசதியை பூரணமாக பெற்றுவிட்டால் சுயநலவாதிகளின் தம்பட்டம் செல்லுபடியாகாதென்ற காரணத்தால் கழகம் குழந்தைகளின் கல்வி வசதியை பேணும் முகமாக ஒரு கல்வி திட்டத்தை ஏற்படுத்தி இப்போது அதை செயல்படுத்தி வருகின்றது. இந்த திட்டத்தின் மூலம் எமது மத்தியில் பல பட்டதாரிகளை உருவாக்க முனைந்துள்ளோம். எமது மத்தியில் பட்டதாரிகளை உருவாக்குவதற்கு அறிவகங்கள் ஆரம்ப பாடசாலையாக அமைய வேண்டும் என்பதே எனது அவாவாகும் என்று திரு. கோவிந்தராசன் தொடர்ந்து கூறினார்.

மாவட்ட பிரதிநிதி திரு. எஸ். பாக்கியநாதன் உட்பட பலர் சொற்பெருக்காற்றினர்.

## நாம் செய்வோம்!

—சுரேக்குமார்—

வாழுஞ் செந்தமிழ் எங்க ளுயிரென்று
வானெட்ட முரசது ஆர்ப்போம்—அதற்குச்
சூழும் எதிர்ப்பினைப் போக்கிட எம்முயிர்
தூசென மதித்ததைக் காப்போம்!

வீரத்தி னுயர்வினைச் சாற்றிடும் புறமதால்
வைய முழுதையும் ஆண்டோம்—வெற்றி
ஆரங்கள் சூடிநல் அகத்தின் வழியினில்
அன்புநற் காதலை வளர்த்தோம்!

ஏழைக ளாயினும் என்றமிழ்த் தாயவள்
ஏற்த்றதிற் குழைத்திடத் தவறோம்—என்றுங்
கோழைகளாகோம்; தமிழினை மறந்தெம்
கும்பி நிறைவதைப் பாரோம்!

உழைப்பவர் வாட முதலுடை பேர்கள்
உயர்ந்திடும் நிலைதனை மாற்றிப்—பாரும்
தழைத்திடத் தம்முயிர் தந்திடும் பாட்டாளி
தரந்தனை யுயர்த்துவோம் போற்றி!

மடமை எனுங்கரு மிருட்டினில் சிக்கி
மக்கள் பகுத்தறி வின்றி—இன்று
கடமை மறந்திட்டு வாழ்ந்திடும் நிலையைக்
களைந்தங்கு அறிவொளி பெய்வோம்!

## பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

இரம்புக்கந்தை அரசினர் தமிழ் வித்தியாலயம் பெற்றோர் ஆசிரியர் சங்க பொது சபை கூட்டம் 29-4-1967ல் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. அ. சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது.

திரு எஸ். சி. ஆனந்தன் பேசுகையில், பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். பாடசாலையை விஸ்தரிப்பதற்கு கூடியசீக்கிரம் கல்வி மந்திரி நடவடிக்கை எடுப்பதாக கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

பின்னர் திருவாளர்கள் பெ. கதிர்வேல், இ. சுப்ரமணியம், எஸ். சந்தனம திருமதி. கி. சிவபாக்கியம் ஆகியோர் கல்வி வளர்ச்சியைப் பற்றி பேசி

## கழகத்தின் வாலிபர்கட்கு அழைப்பு

எம் கழகத்தைப்பார்த்து கேலி செய்தவர்கள் இன்று எம் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பொறுமை கொள்கின்றனர். கழகத்தின் எழுச்சி, அதன் வேலைத்திட்டங்கள், அதன் வளர்ச்சி ஆகியவற்றை தொழிலாள மக்கள் நன்கறிந்ததனால்தான் கழகம் துரிதமாக சீரிய முறையில்வளர்ந்து வருகின்றது. கழக தோழர்கள் தாய்மார்கள் கழகத்திற்காகச் செய்யும் சேவையும் பிரச்சாரமும்தான் இன்று கழகம் பெருவளர்ச்சிசெய்யக் காரணம். ஓரிரு ஆண்டுகளில் கழகம் மலையகத்தில் குறள்பாடும் ஓரேயொரு தொழிற்சங்கமாக திகழும் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை. காலமெல்லாம் காத்திருந்து நாம் இழந்து நிற்கும் உரிமைகள் சலுகைகள் அனைத்தையும் பெற்றுக் கொடுக்க கழகம் தயாராகி வருகின்றது, அன்று ஊதிய சங்கு என்றும் வெற்றிச்சங்காக விடுதலை முரசாக ஒலிக்க வேண்டும். அதற்கு ஒருவழி உண்டெனில் கழகத்தை வளர்க்கும் முயற்சியில் வாலிபர்கள் பெரும் பங்கு கொள்ளவேண்டும். ஆகவே கழகத்தின் வாலிப முன்னணி உறுப்பினர்களாகிய நீங்கள் கழக நடவடிக்கைகளில் பெரும் பங்கு கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

இவ்வாறு கடந்த19-4-67ல் உடபுசலாவையைச் சேர்ந்த லோமாவி தோட்டத்தில் நடைபெற்ற வாலிபமுன்னணி மாதர் முன்னணியின் விசேட கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் தலைவர் அலுவலக பிரமுகர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன் கூறினார். மாவட்டத்தலைவர் திரு. எம். ஆறுமுகம் தலைமைவகித்தார்.

மக்களுக்கு வாக்குறுதியை கொடுத்து விட்டு தங்கள் நன்மையை தங்கள் தலைமையை காப்பாற்றிக்கொண்டு பின்பு அவ்வாக்குறிதியை காற்றில் பறக்கவிடுபவரல்ல நாம், பேச்சளவில் இன்றிச் செயலில் காட்டக்கூடியதை மாத்திரமே மக்களுக்கு வாக்குறுதியாக வழங்குவோம். அதை விடுத்து உங்களுக்கு அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று கூறிவிட்டு பின் காற்றிலே பறக்கவிடுவதல்ல கழகத்தின் நோக்கம் என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

மற்றும் இராகலை மாவட்ட துணைப்பிரதிநிதி திரு, அ. ம. பிரகாசம், மாதர் முன்னணி திருமதி ராஜன் தெய்வானை. மாவட்டத் தலைவர் திரு. ஆறுமுகம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

## முன்னேற்றம் போதாது

நமது தொழிலாளர்களிடம் உள்ள குறைகள் சில மறைந்து விட்டாலும் இன்னும் பல குறைகள் இருந்து கொண்டிருக்கின்றதென்பதை நாம் மறுக்க முடியாது. நாம் முன்னேறியிருக்கின்றோம். ஆனால் எல்லா துறைகளிலும் இன்னும் முன்னேறவில்லை. விஞ்ஞானம் வளர்ந்து வரும் இந்நாளில் நாம் இன்னும் சம்பள பிரச்சினைக்காக மட்டும்தான் போராடிக்கொண்டிருக்கின்றோம். சம்பளப் பிரச்சினைகள் சம்பந்தமாக போராடுவதுடன் எம்மைச் சூழ்ந்திருக்கும் அறியாமையைப் போக்குவதற்கு நாம் மிகமிக முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும், அப்போதுதான் நாமும் ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டாட்சியினரின் குறுகிவரும் பொதுத் திட்டம்

ஹலோ! ஹலோ! மிஸ்டர் பொதுசனம், கேட்டீர்களாசெய்தியை? கூட்டாட்சிவாதிகளின் திட்டம் குறுகி விட்ட செய்தி தெரியுமா உங்களுக்கு?

எதிர்க்கட்சிகளான மூன்று கட்சிகளும் ஒரு புதிய திட்டம் தீட்டியது. அடுத்து ஆட்சிக்கு வர மூன்று கட்சிகளும் கனவு காண்கின்றனவல்லவா? கனவு நனவானால் அமுல் நடத்துவதற்குத்தானும் இந்தத் திட்டம்! இதுஒரு 15அம்சத்திட்டம் என்று 3 மாதங்களாக டமாரம் அடித்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

காற்றுடிஆகாயத்தில்பறந்து கொண்டிருந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் கையில் திட்டத்தின் நகல் ஒன்று படபடத்துக் கொண்டிருப்பதைக் கண்டது. உடனே அதைச் சற்று உன்னிப்பாகக் கவனித்தது. கண்டு பிடித்தது இரகசியத்தை. அதில் 15 க்குப் பதில் 12 அம்சம் தானே இருந்தது.

இதுபற்றி சக காற்றுடிகளிடம் விசாரித்ததில் அம்மையார் சில அம்சங்களை 'ஸ்லாஹா' செய்துவிட்டதாக செய்தி கிடைத்தது.

உதவிபெறும் பாடசாலைகள் அனைத்தும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பது திட்டத்தில் ஓர் அம்சம்'

## காற்றுடி

'அப்படியானால் உதவி பெறும் பௌத்த பாடசாலைகளையுமல்லவா அரசாங்கம் எடுக்கவேண்டும்? முடியாது——அதைச் செய்ய முடியாது' என்று அடித்துக் கூறிவிட்டாராம் அம்மையார். அத்துடன் அந்த அம்சம் ஒழிந்தது.

அடுத்தது தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான சிகிச்சை நிலையங்களைத் தேசியமயமாக்கும் அம்சம்!

அதற்கும் கையை விரித்து விட்டாராம் அம்மையார். அத்துடன் அதுவும் குப்பைக் கூடையிற் சரண்புகுந்தது.

மற்றுமொன்று வர்த்தக ஏகபோக உரிமையைத் தகர்க்கும் அம்சம்.

'இதைச் செய்யத்தான் வேண்டும். வர்த்தகர்களோ மகா கில்லாடிகள். எங்கள் திட்டம்பற்றி முன்கூட்டியே பறைசாற்றப்போனால் அவர்கள் மாற்றுத் தந்திரங்களைக் கையாள்வர். இதெல்லாம் சொல்லாமல் செய்யவேண்டிய விஷயம்' என்றாராம் அம்மையார்.

அத்துடன் அந்த அம்சமும் காலி!

பத்திரிகைகளைத் தேசியமயமாக்குவதிற்தான் இடதுசாரிகளுக்கு கன குஷியாச்சே! ஆனால் பத்திரிகைகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு தன்னிடம் ஒரு திட்டம் இருக்கிறதென்றும். அது தேசியமயத்தைப் போலவே சக்திவாய்ந்ததென்றும் அம்மையார் கூறிவிட்டாராம். அத்துடன் பத்திரிகைத் தேசியமயமும் தீர்ந்தது.

ஆகவே அது 12 அம்சத்திட்டமாகவே இப்பொழுது எஞ்சி நிற்கிறதாம்.

'ஏஜன்ஸி ஹவுஸ்' என்று கூறப்படும் தோட்ட நிர்வாகக் கம்பெனிகள் தேசியமயமாக்கப்படும்' என்று திட்டத்தில் காணப்படும் அம்சம்தான் மிக முக்கியமானது என்று தொழிலாளர்கள் பேசிக்கொள்வது கொழும்புத் துறைமுகத்திற்குமேலால் நான் பறந்து கொண்டிருக்கும் போது என் காதிலும் விழுந்துவைத்தது.

'ஆனால் தோட்டங்களைத் தேசியமயமாக்கும் யோசனை திட்டத்தில் இடம்பெறவில்லையாம். இதில் இந்தத் தொழிலாளர்களுக்குப் படுகோபம் என்று எனது சக காற்றுடிகள் கண்டுபிடித்துச் சொன்னார்கள்.

வங்கி விஷயம் தெரியுமா? அன்னிய வங்கிகளைத் தேசியமயமாக்கமாட்டார்களாம். ஆனால் வங்கிகள் தங்கள் இலாபத்தையெல்லாம் இந்த நாட்டிலேயே தொழில், விவசாய வளர்ச்சியில் முடக்க வேண்டும் என்ற ஓர் அம்சமும் அத்திட்டத்தில்இருப்பது காற்றுடியின் கண்ணில் பட்டது.

இந்தத் திட்டம் என்றைக்கு வெளி உலகத்தை எட்டிப் பார்க்கும் என்றுகாற்றுடியைக் கேட்டுவிடாதீர்கள்! ஏனெனில் அது அம்மையாருக்குதான் வெளிச்சம்!


# அறிவிப்பு

ராணி சந்தன சோப்

அழகிகளைகண்டு பிடியுங்கள்

போட்டி முடிவு திகதி

பொதுமக்களின் வேண்டுகோட்கிணங்க

1967ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி வரை

பிற்போடப்பட்டிருக்கிறது


# தேசிய அரசிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேற வேண்டுமா?

சமீப காலமாக தமிழ் பேசும் மக்களில் ஒரு சாராரிடையே ஒரு புதிய கருத்து நிலவி வருகிறது. தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தை விட்டு விலகிவிடவேண்டும் என்று கூறப்படுவதையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

இந்தக் கருத்தை தற்போதைய நிலையில்ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், தேசிய அரசை விட்டு வெளியேற வேண்டும் என்பதற்கு எந்த வித தகுந்த காரணமும் கிடையாது என்றும், கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார்.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று கூறுபர்கள் இருசாரார். ஒரு சாரார், எப்படியாவது தமிழரசுக் கட்சியை அரசாங்கத்தை விட்டு வெளியேற்றி தேசிய அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டுமென்ற நச்செண்ணம்கொண்டவர்கள்.

இன்னொரு சாரார் போதிய அரசியல் அறிவின்மை காரணமாக, அப்படிக் கோருகிறார்கள். இவர்கள் துடிப்புள்ள வாலிபர்கள், உணர்ச்சி மிகுந்தவர்கள், இரண்டில் ஒன்று காணவேண்டுமென்று கருதுபவர்கள்.

### வாலிபர்களின் மனோபாவம்

பொதுவாகவாலிபர்களுக்கு பேச்சுவார்த்தை, சமரசம், இவற்றில் அதிக நம்பிக்கை இல்லாதிருப்பது இயற்கை. அதுவும் தமிழரசு சார்புள்ள வாலிபர்கள் நீண்டகாலமாக அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியே பழக்கப்பட்டவர்கள். அதனால், தமிழ்பேசும் மக்களுக்கு சில உரிமைகள் கிடைப்பதில் ஏற்படும் காலதாமதம் அவர்களுக்கு எரிச்சலைக் கிளப்பி விடுவது சகஜம்.

அவர்களுக்கு தமிழரசுத்தலைவர்கள் அரசியல் ரீதியாக இன்றைய நிலைமைகளை எடுத்து விளக்கினால், உண்மை நிலையைப் புரிந்து அமைதி அடைந்து விடுவார்கள்.

கடந்தவாரம் தமிழரசுவாலிபர்களின் சந்தேகங்களை கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் போக்கியபின்னர், வாலிபர்கள் அமைதியடைந்திருக்கிறார்கள்.

### காரணம் இல்லை

தமிழரசுத் தந்தை சென்ற வாரம் கந்தர்மடத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் சரியாகச் சுட்டிக்காட்டியிருப்பது போல தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சியினர் வெளியேறுவதற்கு அவசியமான தக்க காரணம் எதுவும் இப்பொழுது உருவாகவில்லை.

தேசிய அரசாங்கத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக தமிழரசுக்கட்சி அங்கம் வகிக்கின்றது. தேசிய அரசாங்கத்தில் ஐ. தே. கட்சிக்கு எவ்வளவு தூரம் பங்குண்டோ அதே அளவு பங்கு தமிழரசுக்கட்சிக்கும் உண்டு. இன்னும் சொல்லப்போனால், இன்றைய அரசாங்கம் 'தேசிய அரசாங்கம்' என்று பெயர்பெற்றுள்ளதே தமிழரசுக்கட்சி, அதில் அங்கம் வகிப்பதனால். தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்துவெளியேறினால் எஞ்சியிருப்பது ஒரு 'தேசிய அரசாங்கம்' ஆக முடியாது.

### இன்றுள்ள நிலை

தேசிய அரசாங்கம்ஏற்பட்ட பின்பு இந்த நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் நிலை உயர்ந்திருக்கிறது. சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் கூட்டரசாங்கத்தின் காலத்திலும், இந்த நாட்டில் அடிமைகள் போல நடத்தப்பட்ட தமிழ் பேசும் மக்கள் ஓரளவு கௌரவத்துடன், தலைநிமிர்ந்து, வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின்தான். இந்தப் பெரிய உண்மையை எவரும் மறுக்க முடியாது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

தேசிய அரசாங்கம் ஒன்றுதான், ஜாதி, இனம், மதம் மொழி வேறுபாடின்றி சகல மக்களுக்கும் சமநீதி என்றதிட்டவட்டமான கொள்கையை வகுத்து அதன் வழியிலே நடைபோடுகிறது.

### ஏனைய கட்சிகள்

இன்றுஇந்நாட்டிலேயுள்ள ஏனைய கட்சிகளின் நிலையென்ன? இலங்கை முழுவதும் சிங்கள நாடாகவேண்டும்; இலங்கை முழுவதும் தனிச்சிங்களமே ஆளவேண்டும், என்பதல்லவா? தமிழ் பேசும் மக்களின் தனித்தன்மையை இக்கட்சிகள் ஏற்க மறுக்கின்றன. தேசிய அரசாங்கம் தமிழுக்குக் கொடுக்க முன்வந்த பிரதேச ஆட்சிமொழியுரிமையைக் கூட எதிர்த்தகட்சிகளல்லவா ஏனைய சிங்களக் கட்சிகள்?

வடக்கு, கிழக்கில், இன்னும்கூட தமக்கு ஆதரவு கிடைக்காதா என்று நோட்டம் விடும் சமசமாஜ கம்யூனிஸ்டுகட்சிகள் கூட தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க முன்வரவில்லையென்பதையும் உற்று நோக்க வேண்டும். இதுமட்டுமல்ல, இந்நாட்டுச் சிறுபான்மை மக்களுக்கு அரசியல் சட்டத்தில் இருக்கும் ஒரேபாதுகாப்பான 29வது சரத்தைக் கூட எடுத்துவிட வேண்டும் என்று கூறும் அளவுக்கு எதிர்க் கட்சிகள் இன்று வகுப்புத் துவேஷம் பிடித்து ஆவேசம் கொண்டிருக்கின்றன.

### தேசிய அரசால் விளைந்த நன்மைகள்

இந்த நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்றுதான் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்து, அவற்றை அங்கீகரித்துள்ளது என்பதை தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மொழியை இந்நாட்டுத் தேசிய சிறுபான்மையினரின் மொழியென்பதை தேசிய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் மரபு வழித் தாயகம் என்பதையும் தமிழ் பேசும் மக்களின் தனித்தன்மையையும் தேசிய அரசாங்கம் ஒன்றுதான் அங்கீகரித்துள்ளது.

அத்துடன், வடக்கிலும், கிழக்கிலும் தமிழை நிர்வாகத்துறையில் புகுத்தவும். ஏனைய ஏழு மாகாணங்களில் உள்ளவர்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவுமான உரிமைக்குச் சட்டபூர்வமான அங்கிகாரம் அளித்துள்ளதும் தேசிய அரசாங்கம்தான்.

இதற்கு மேலாக அரசியல் சட்டத்திலுள்ள, சிறுபான்மையினரின் ஒரே பாதுகாப்பான 29 வது ஷரத்தை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கும் முயற்சியையும், தேசிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதே நேரத்தில், தமிழ் பேசும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட சகல உரிமைகளையும் தேசிய அரசாங்கம் வழங்கிவிட்டதென்று நாம் கூறவரவில்லை. ஆனால் எல்லாவற்றையும் உடனடியாக வழங்குவதில், அரசாங்கத்துக்கு ஏற்படும் கஷ்டங்களையும் நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சிறு சலுகை வழங்கப்பட்டாலே, அதைப் பெரிது படுத்தி சிங்கள மக்களிடம் பொய்ப் பிரசாரம் செய்து, அரசியல் லாபம் சம்பாதிக்க தென்னிலங்கையிலுள்ள அரசியல் வாதிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் எந்த ஒரு நடவடிக்கையையும், நின்றுநிதானித்து, அமைதியாக செய்ய வேண்டிய ஒரு நிலையில் தேசிய அரசாங்கம் இன்று இருக்கிறது. எனவே தேசிய அரசாங்கத்தின் கஷ்டங்களை உணர்ந்து, பொறுமை காட்ட வேண்டியது தமிழ் பேசும் மக்களின் இன்றைய கடமையாகும்.

### பிரதமர் உறுதி

சமீபத்தில் பத்திரிகை நிருபர்களுக்கு மாவட்ட சபை பற்றி அளித்த பேட்டியொன்றிலிருந்தும் தமிழ் பேசும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் திறந்த உள்ளத்துடன் தான் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இருக்கிறார் என்பது தெளிவாகிறது. ஆகவே தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறுவது என்ற பிரச்சினைக்கே இன்று இடமில்லை.

தமிழரசுக் கட்சியையும், தேசிய அரசாங்கத்தையும் பிளவு படுத்தும் முறையில் சில தமிழ்த் தினசரிகள்பரப்பி வரும் நச்சுக்கருத்துக்களையிட்டு, தமிழ் பேசும் மக்கள் மனச் சோர்வு அடையத் தேவையில்லை.

இத் தினசரிகளின் ஒரே நோக்கம் தமிழரசுக் கட்சி பற்றி விஷமத்தனமானசெய்திகளைப் பரப்புவதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கட்சிக்கிருக்கும் செல்வாக்கை அழித்துவிடலாமென்பதே. ஆனால் இந்தத் தினசரிகளின் நோக்கம் ஒருபோதும் ஈடேற தமிழ் பேசும் மக்கள் இடங்கொடுக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

சத்தியம் ஒன்றையே தமது அரசியல் மார்க்கமாக கொண்டுள்ள தமிழரசுத் தந்தை காட்டும் நேர்மையான பாதையில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து வருவார்களாயின், ஈழத்தமிழ் பேசும் இனத்தின் விடிவு காலம் அதிக தூரத்திலிருக்கப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேசிய அரசாங்கத்திலிருந்து

# "காரணமின்றி விலகுவது தமிழர் பண்பாடல்ல"

## தமிழரசுக் கட்சி நிலை பற்றி எஸ். ஜே. வி. அளித்த விளக்கம்

'1965ம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள், தமிழரசுக் கட்சியை இக்கட்டான ஒரு நிலைபரத்தில் வைத்தன. நாம் எந்தக்கட்சியை ஆதரித்தாலும், அந்தக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் நிலை அன்று இருந்தது. எனவே நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கக் கூடிய நிலையிருக்கவில்லை. ஐ. தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும் எமது உதவியை நாடின. 1960ல் சுதந்திரக் கட்சியை ஆதரித்தோம். ஆனால் நமக்கு சுதந்திரக்கட்சி தந்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டதால் 1965ல் ஐ. தே. கட்சியை ஆதரித்தோம் ஐ. தே. கட்சியை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் அன்றைய விருப்பமாயிருந்தது. அப்படிச் சேர்ந்த நாங்கள் போதிய காரணமின்றி அவர்களை விட்டுப்பிரிவது தமிழர் பண்பாடல்ல' இவ்வாறு' கந்தர் மடத்தில் இம்மாதம் 17ந் திகதி நடைபெற்ற தமிழரசுக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழரசுத் தந்தை கூறினர்.

'தமிழரசுக் கட்சியின் இன்றைய அரசியல் நிலை பற்றியும் மாவட்ட சபை, இ. இ. மசோதா ஆகியன பற்றியும் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறும் நோக்கத்துடன் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. மன்மதராஜன் தலைமை வகித்தார்.

திரு. செல்வநாயகம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'மாவட்ட சபையைப் பற்றி பிரதமர் டட்லி சேனநாயக்கா கூறியவற்றை தமிழ் மக்கள் பெரிய தோல்வி என எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருதோல்வியுமில்லை. மாவட்ட சபை பற்றி தமிழ் மக்கள் கொண்டுள்ள தப்பான அபிப்பிராயம் சரியல்ல.

'மாவட்ட சபை கொண்டு வருவேன் என்பதுதான் பிரதமர்சொன்னகருத்து. அதைஎப்போது கொண்டு வருவேன் என்பதுதான் தெரியவில்லை என்றார். மாவட்ட சபை கொண்டுவரமாட்டேன் என்று பிரதமர் சொல்லவில்லை.

'தேசிய அரசாங்கத்தின் இரண்டு சிம்மாசனப் பிரசங்கத்திலும், எதிர்க்கட்சி அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்திலும் மாவட்ட சபை ஏற்றுக் கொண்டுள்ள விஷயமெனப் பிரதமர் கூறியுள்ளார். ஆனல் அது இன்னும் மசோதா உருவம் பெறவில்லை. மந்திரி திருச்செல்வம் போட்ட திட்டத்தின்படி தர்க்கம் பண்ணுவதாக அவர் சொல்லியிருக்கிறார். அதன் கருத்து மாவட்டசபை உள்ளடக்கத்தைப் பற்றிய தர்க்கம் தான்.

'தர்க்கம் முடிந்தபின் மசோதாவாக உருவெடுக்க ஒரு நேரம் போகாது. மாவட்ட சபை பற்றி பேசி அது முடிந்தால், மசோதா சரிக்கட்டும் போது, என்னென்ன போட வேண்டுமென்பது துலாம்பரமாக தெரியும். இப்படி அவர் சொன்னதுதான் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதில் ஒரு தோல்வியுமில்லை.

'சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா தமிழ் மக்கள் தப்பபிப்பிராயம் கொண்டுள்ள இரண்டாவது விஷயமாகும். இம்மசோதாவை ஆராய்ந்து பார்ப்போம். இம்மசோதாவின்படி 5லட்சத்து 25ஆயிரம் பேரை இந்தியா ஏற்றுக் கொள்ளும். ஒருவரையும் இங்கிருந்து வலோற்காரமாக அனுப்ப முடியாது தாளுக விரும்பிப் போகிறவர்களைத்தான் இலங்கை அரசாங்கம் அனுப்ப முடியும். அப்படியானவர்களைத்தான் இந்திய அரசாங்கம் ஏற்க முடியும்.

'ஆனபடியால் 5லட்சம்கணக்குப்படி அத்தனை மக்களும் இந்தியாவுக்குப் போவார்கள் என்று நிச்சயமில்லை. நாங்கள் ஆராய்ந்து பார்த்ததில் ஒரு லட்சம் முதல் 2லட்சம் வரை தான் விரும்பி போவார்கள் என்று தெரிகிறது. 2லட்சம் பேர் இந்தியா போனல் இங்கு 1லட்சம் பேருக்கு பிரஜாவுரிமை கிடைக்கும்.

'பிரஜாவுரிமைகொடுக்காமல் இந்தியர்களை இங்குவைத்திருப்பதுபெருங்குற்றம் என்றுதான் இதுவரைகாலமும் தமிழரசுக் கட்சி கூறிவந்தது. ஆகையினல் இம்மசோதாகாரணமாக 1லட்சம் பேருக்காவது பிரஜாவுரிமை கிடைக்கும். அப்படி கிடைப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

'ஆதலால் இச்சட்டத்தை எதிர்ப்பதற்கு ஒரு காரணமுமில்லை, ஆதலால் அரசாங்கத்தை விட்டு வெளியேற ஒரு காரணமுமில்லை. கடைசியாக தேவை வந்தால், தருணம் வந்தால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதை புறக்கணிக்க மாட்டோம்.

கூட்டத்தில் திருவாளர்கள் வி. நவரத்தினம், எம். பி. க. துரைரத்தினம் எம். பி, சி. கதிரவேற்பிள்ளை; எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. ஆகியோரும் பேசினர்.

## திருக்குறள் மாநாடு

அகில இலங்கை தமிழ் மறைக் கழகத்தின் பதினைந்தாவது திருக்குறள் மாநாடு நேற்றும், இன்றும், நாளையும் சங்கானை அரசடி வயிரவ கோவில்முன்றலில் நடைபெறுகிறது.

சங்கானை இந்து வாலிபர் மன்றத்தினரின் ஆதரவுடன் நடைபெறும் இம்மாநாட்டில் குறள் ஓவியக் கண்காட்சி குறள் ஊர்வலம், குறள் சமயக் கருத்தரங்கு, பட்டிமன்றம், கவியரங்கு, கலைநிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெறுகின்றன.

சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு சி. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் திரு. மு. சிவானந்தத்தைச் செயலாளராகக் கொண்ட விழாச்சபையினர் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். சமயக் கருத்தரங்கில் இந்து, கிறித்துவ, பௌத்த சமயங்களைச் சேர்ந்த மூன்று பெரியார்கள் கலந்து கொள்வார்கள்.

—

## வவுனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தையே தாம் வரவேற்பதாகவும், தமிழ்பல்கலைக்கழகம் நிறுவப்படும்போது அதன் ஒரு பிரிவு வவுனியாவில் அமைந்தால், வவுனியா மக்களுக்கு திருப்தியாக இருக்கும் என்றும் திரு. சிவசிதம்பரம் கூறினாராம்.

நண்பர்களிடம் இன்னும் ஒரு விஷயத்தை திரு. சிவசிதம்பரம் வெளியிட்டார் என்று தெரிகிறது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்துக்கு வவுனியாவில் வரவேற்பு அளித்ததற்காக திரு. பொன்னம்பலம் கண்டித்ததாகவும், மாவட்ட சபைகள் மசோதா, தமிழ் பல்கலைக்கழகம், இரண்டையும் தாம் ஆதரிப்பதை திரு. பொன்னம்பலம் தடுப்பாராஞல் தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறுவதைத் தவிர தனக்கு வேறு வழி கிடையாதென்றும் திரு. சிவசிதம்பரம் கூறியதாக அறியப்படுகிறது.




மில்க்வைற் நீலசோப் பார் சோப்

பட்டு, பருத்தி, நைலோன், ரெறலின், ஆகிய எல்லாவிதத் துணிவகைகளேயும், அலுமினியப் பாத்திரங்களையும், கிளாஸ் வகைகளேயும், ஆச்சரியப்படத்தக்க முறையில் சுத்தம் செய்கிறது.


1941 மே 9ந் திகதி இரவு 11-30 மணி எங்கும் ஒரே அமைதி!

போப் துரை புஸ்ஸல்லாவை லேவெலன் தோட்டத்தில் பிளாக்மோர் துரையின் பங்களாவில் இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு தனது ஸ்டெலன் பர்க் தோட்டத்திற்குக் காரில் திரும்பினர். தோட்டத்தின் டீ பெக்டரியை அவர் கடக்கும் போது இரவு 11-30 மணி. பெக்டரி காவற்காரன் காசிம் 'துரை வருகிறார்' என்று பங்களாவுக்கு டெலிபோன் செய்தான். 10 நிமிடங்களில் பங்களாவிலிருந்து காசிமுக்கு டெலிபோன் வந்தது 'துரை வரவில்லை' என்று ......துரை எங்கே? ...காசிம் பங்களாவை நோக்கி தலைவிரி கோலமாக ஓடினன். வழியில் ..............

........................................

விபரங்கள் அடுத்த வாரம் சுதந்திரனில்!

**போப்துரை கொலை வழக்கு**

**31-5-67**

**சுதந்திரனில் ஆரம்பமாகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதாவின் கணவன்

எமது சிறுகதை

ப. தேவேந்திரன்

சா வீட்டு ஓலம் அஸ்தமித்து ஒரு மணித்தியாலம் கடந்து விட்டது!

நேரம் அதிகாலை மூன்று மணியென சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் மும்முறை ஒலமிட்டது!

'கோடி பணங்கிடந்தும் என்ன பலன், இப்ப கொள்ளி வைக்க ஒரு பிள்ளையில்லாமல் மனிதன் கண்மூடிவிட்டது'

'பாவம் சிவன் பிரியேக்கை நிம்மதியாய்க் கண் மூடியிருக்காது'

'அந்த நல்ல மனிசன்ரை அடி அழியாமல் கண்கெட்ட கடவுள் ஒரு கொந்தலைக் குடுக்கேல்லை.'

'நீ என்னவோ நல்த மனிசன் எங்கிருய், தன்ரை ஆக்களுக்கு ஒண்டும் வையாமல், அந்தத் தேப்பனைத் தின்னிப் பெடியனுக்குத்தான் எல்லாத்தையும் எழுதிவைச்சிட்டுப் போட்டுதாம் அந்தாள்'

'உன்ரை கதையென்ன, நல்ல மனிசன் எண்டால் அப்பிடித்தானிருக்க வேணும். அந்த மனிசன் தன்ரை ஒரேயொரு தங்கைக்கு எவ்வளவு சீதனம் குடுத்துச் சிறப்பாய்க் கலியாணம் கட்டி வைச்சிது. இரண்டு பிள்ளையளைப் பெத்தேப் பிறகும் ஒரு கார்க்காறனோடை ஓடிவிட்டாள் அவள், அப்பிடிப் பட்டவளுக்கும் அந்தாள் எழுதிவைக்கேல்லையெண்டே சொல்லுறுய்?'

'என்ன இருந்தாலும் ஒரு ரத்தமல்லே'

'நீதி ஞாயம் உள்ளவன் இரத்தம், பிறத்தியெண்டு பார்க்கமாட்டான்! எது தறுமமோ துள கடவுளுக்குப் பொறுக்கக் கூடியதோ அதைத்தான் செய்வன்'

'மனிசன்ரை கடையும் சாமானும் மட்டும் ஒரு லச்சம் பெறுமாமே.'

'ஓ அது மட்டுமே, வங்கியிலை அம்பதாயிரம் கட்டியிருக்காம்.'

'இவ்வளவும் ஆரோ ஒருத்தன்ரை பிள்ளைக்குப் போகுது'

'ஓ அதுக்கென்ன, அந்த மனிசன் உசிரோடை இருக்கேக்கை அடிக்கடி சொல்லும்' ஒழுக்கமுள்ளவை தான் எனக்கு உருத்தானவை, மற்றவையெல்லாம் பிறத்தி' எண்டு, அந்தாள்தான் மனிதன் சொன்னது போலைச் செய்திட்டிது'!

அடுத்தவரின் மரண வீட்டில் அரட்டை அடிப்பதற்கென்றே வந்த அந்த இரு வயோதிபப் பெண்கள் கூட நித்திரா தேவியின் மயக்கத்தின் தாக்கத்தை எதிர்த்து நிற்க முடியாமல் ஒரு மூலையில் சாய்ந்து விட்டனர்!

சாரதாவின் கணவன் ஒரு பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் உரிமையாளன். காலையில் தனது மோட்டாரில் அலுவலகத்திற்குச் சென்றவன், மாலையில் பிணமாக வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டான்.

'நல்ல மனுஷன் படுக்கையில் கிடவாமல் மாரடைப்பினுல் செத்துப் போஞன்' என்று ஊர் பேசிக் கொண்டது!

கொழும்பிலிருந்த ஒரு சில உறவினரின் வருகைக்காக ஈமக் கிரிகைகளை மறு நாளுக்கு ஒத்திப் போட வேண்டியதாயிற்று.

வீட்டின் நடுச்சாலையில் போடப்பட்டிருந்த கட்டிலில் வெண் துயிலால் முகம் நீங்கலாக மூடப்பட்டுத் துயில் கொள்ளும் பாவனையில் கிடந்தது சாரதாவின் கணவனின் பூதவுடல். தலைமாட்டில் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கின் சலனமற்ற ஒளி பிணத்தின் முகத்தைத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது!

கட்டிலின் ஒரு புறத்திலும் பக்கத்திற்கொருவராய் சாரதாவும் நளினியு சோகமே உருவெடுத்தாற் போல் அமர்ந்திருந்தினர். நளினி தன் மடியில் உறங்கிக் கொண்டிருந்த மூன்று வயதுப் பாலகனை வலக்கரத்தால் அணைத்தவாறு, இடக்கரத்தை நாடிக்கு முண்டு கொடுத்து, உணர்ச்சிப் பெருக்கில் ஊற்றெடுக்கும் கண்களால் பிணத்தின் முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

சாரதாவின் வெறித்த பார்வை குத்து விளக்கின் சுடரில் நிலை குத்தி நிற்க அவளுடைய சிந்தனையும் சுடர் விட்டெரிந்து கொண்டிருந்தது!

பத்து வருடங்களுக்கு முன் அவளுடைய கணவன் தொழில் சம்பந்தமாக கொழும்பு சென்றிருந்த போது அங்கிருந்தே அவளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான்.

'எனது சாரதா,

கடந்த எட்டு வருடங்களாக என் மனதில் குமைந்து கொண்டிருந்த ஒரு எண்ணம் பற்றி நேரில் உன்னிடம் பேசத் திராணி அற்று இவ்விடம் வர நேர்ந்ததைப் பயன் படுத்தி அதை உனக்கு எழுதுகிறேன். தீர ஆலோசித்து நீ யொரு முடிவுக்கு வரவேண்டும். எனது முடிவில் உனக்கு இஸ்டமில்லாது போனுல், நான் பிரஸ்தாபிக்கப் போவதையே மறந்துவிடு, அதற்கு நீயும் இஷ்டப்படுவாயாகில் நாங்கள் இருவரும் பாக்கிய சாலிகள்.

மனிதன் மண்ணில் தோன்றி, வாழ்ந்து மடிகிருன். அவன் வாழ்ந்து மடிந்து போனபின்பும் அவனுடைய அடிச்சுவடுகள் இருக்க வேண்டுமென்பதில் எனக்கு இருக்கும் ஆசை அளவில்லாதது. எனது அந்த ஆசையில் உனக்கு ஆசையில்லாவிட்டால் அதைக் கருவிலேயே அழித்துவிடவும் சித்தமாயிருக்கிறேன். என்னுடைய இந்த நோக்கத்தால் உன்பால் எனக்கிருக்கும் அன்பு ஊற்றுக் குறைந்துவிட்டதோ, அன்றி வற்றிப் போய் விட்டதோ என்று எண்ணி விடாதே. நீ என்றும் என்னுடையவள்; நான் என்றும் உன்னுடையவன். நாங்கள் மணமுடித்து 18 ஆண்டுகளாகியும் எங்கள் வாழ்க்கை பசுந்தலை விடாது பாலைவனமாகவே யிருக்கிறது. எங்களுக்கு இறைவன் இரு தலைமுறைகளுக்குப் போதுமான செல்வத்தைக் கொடுத்திருக்கிருன். ஆனுல், இத்தனையுமிருந்தும் என்ன பயன்? நாளைக்கு நீயும் நானும் இருந்தாற்போல் கண்களை மூடிவிட்டால் ஒழுக்கங்கெட்ட சோம்பேறிகள் எத்தனைபேர் நாங்கள் பாடுபட்டுத் தேடிய தேட்டங்களுக்குச் சொந்தங் கொண்டாட வருவார்கள் என்பதை எண்ணவே என் நெஞ்சம் வெடிக்கிறது!

சாரதா, பதட்டமடையாது நிதானமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வா. உன் ஒரே ஒரு தங்கைக்கு இப்பொழுது வயது 27 ஆகிறது. நாங்கள் எவ்வளவு சீதனம்கொடுத்தும் நளினியை ஒருநல்ல இடத்தில் கட்டி வைக்கத் தயாராக இருக்கிறோம். இருந்தும், அவளின் காலொன்று சற்று ஊனமாயிருப்பதால், சமத்துவம், முற்போக்குப் பேசும் வாலிபராவது அவளை மணக்க முன் வருகிருர்களில்லை. நீ என்னைத் 'துரோகி' யென்று சொன்னுலும் பாதகமில்லை என்று எண்ணக்கூடிய ஒருவனுக நானிருந்தால், நான் எத்தனையோ சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தி அந்தப்பட்டத்தைப் பெற்றிருப்பேன். ஆனுல் உன் வாயிலிருந்து அந்த வார்த்தையைக் கேட்க நான்ஒருபோதும் ஒருப்படேன்.

நீ மட்டும் சம்மதித்தால் உன் தங்கை வாழாவெட்டியாக இருக்கவேண்டாம்.

எங்கள் செல்வமும் பாழாகப் போகவேண்டாம். உன் வயிற்றில் தான் ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. உன் தங்கையின் வயிற்றில் பிறக்கும் குழந்தையும் எங்கள் குழந்தையாகவேயிருக்கும். உனக்குச் சம்மதமென்ருல் உன் தங்கை நளினியை நான்......

மேற்கொண்டு அந்தக் கடிதத்தை வாசிக்கச்சாரதாவால் முடியவில்லை. கடிதத்தை சுக்கு நூறாகக் கிழித்து அடுப்பிலிட்டுச் சாம்பராக்கி விட்டாள்!

அடுத்த கணம் தங்கையின் மயிரில் பிடித்து உலுப்பி 'என் கஞ்சியைப் பறித்துக் குடிக்க நினைத்தியாடி சண்டாளி, உன்னைப்பெத்தவங்கஉயிரோடிருக்கும் போதே உன்னைக் கரை சேர்க்காமல் போனது என் வாழ்க்கையைக் கெடுக்கவா' என்று பொரிந்து தள்ளினுள்.

நளினிக்கோ ஒன்றும் புரியவில்லை. பிரமித்துப் போனுள். நளினி 'தனக்கொன்றும் தெரியாது' எனச் சத்தியம் செய்து கொடுத்ததன் பின் சாரதா ஒருவாறு அமைதியுற்ருலும், கணவனை சபிப்பதற்கு உள்ளுக்குள்ளாகப் புகைந்து கொண்டிருந்தாள்.

கொழும்பிலிருந்து திரும்பிய கணவன் தனது மனைவியின்கண்களிலிருந்து வெடித்தகனலைதன் இதழ்களின் கோணத்தில் அரும்பிய புன்னகையால் தணிக்கமுயன்றும் பயனில்லை.

'துரோகி' இத்தனை காலமும் போலி வேடமா போட்டீங்க' 'ஒழுக்கம் ஒழுக்கம்' என்று சதாஜெபிக்கும் உங்களை நம்பியல்லவா நளினியை என்னுடன் வைத்திருந்தேன். அந்த நம்பிக்கைக்குத் துரோகஞ் செய்து அவளை கெடுத்து விட்டியளா பாவி...' என்று கத்திப் பத்திரகாளியாக மாறி விட்டாள் சாரதா.

அத்தனை விநயமாகவும், விளக்கமாகவும் எழுதிய கடிதத்தைப் படித்த பின்பும் தன்னைத் 'துரோகி' எனக் குற்றஞ் சாட்டிய மனைவிக்குத் தான் நிரபராதியெனக் காட்டிக் கொள்ளவே அவன் விரும்பவில்லை. அன்று முழுவதும் அவன் அனுசரித்த மௌனம் அவர்களின்மனப் புண்ணின் வலியைச் சிறிது போக்கியது! அப்புறம், காலம் அவர்களின் மனப் புண்ணையே மாற்றிவிட்டது.

சாரதாவின் குடும்பத்தில் சகச நிலையை ஏற்படுத்திய காலம் சும்மாயிருக்கவில்லை. ஏற்கனவே வாழ்விழந்த ஒருவனுல் அவளுடைய தங்கை நளினிக்கும் வாழ்வளித்தது.

நளினிக்கு வாழ்வளித்த காலம், அவளுக்கு ஒரு மகவையும் அளித்த ஆண்டில், அவளுடைய கணவனை ஒரு மோட்டார் விபத்தில் சிக்க வைத்து அவனையும் பறித்துக் கொண்டது!

நளினியின் கணவன் இறந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியானதும் சாரதாவின் கணவனையும் காலன் பறித்துக் கொண்டான். சாரதாவின் கணவன் மரித்த அன்று காலை அலுவலகத்திற்குப் போய்ச் சிறிது நேரத்தால் அவனுக்கு மாரடைப்பு வலி ஏற்பட்டதாம், உடனே அவன், நம்பிக்கைக்குப் பாத்திரமான தனது ஊழியர் ஒருவரை அழைத்து இரும்புப் பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, தனக்கு ஏதாவது நேர்ந்தால் அதை மனைவியிடம் சேர்பிக்கும் படியும் கூறியிருந்தானும். அக்கடிதத்தில் கண்டது:—

'எனது சாரதா'

இதை உன் தங்கையின் கணவன் இறந்த ஒருமாதத்தின் பின் எழுதுகிறேன். இனிமேல் எங்களுக்குக் குழந்தைகள் பிறக்கப்போகிறதல்ல. நளினிக்கு ஒரு ஆண் குழந்தை கிடைத்ததும், அவள் கணவனை இழந்து விட்டாள். எனக்குச் சேர வேண்டிய சொத்துக்கள் அத்தனையையும் எனக்குப்பின் நளினிக்கும் மகனுக்கும் சேர வேண்டுமென எழுதப்பட்ட எனது உயில் இருப்புப் பெட்டியில் இருக்கிறது. உன்னுடையப் பாகமும் உனக்குப்பின் உன் தங்கைக்கும் மகனுக்கும் தானே! அதை உன்னுடைய விருப்பம்போலச் செய்து கொள்,

இப்பொழுது நான் பலவருடங்களுக்கு முன் ஒரு முறை கொழும்பு சென்றிருந்த போது, அவ்விடமிருந்து எழுதிய நீண்டகடிதத்தின் நினைப்பு வருகிறது. அதை எனக்கு அப்பொழுதிருந்த மகப்பேறு ஆசை வெறியில் ஜெனித்த சபலத்தினுல் எழுதினேனே யொழிய, உன் தங்கையை அடைய வேண்டுமென்ற இச்சையால் எழுதவில்லை. உன் தங்கை நளினியின் மேனியில் என்கை இன்றுவரையும் படவேயில்லை. என நான் சத்தியம் செய்கிறேன். அந்தச் சம்பவம் எனக்கும் உலகிற்கு ஒரேயொரு பாடத்தைத்தான் கற்பிக்கிறது. அதாவது ஒருத்தி தன் கணவனை தான் ஒருத்திக்காகச் சொந்தமாக்கிக் கொள்வாளே தவிர, கதைகள் காவியங்களில் வரும் ஏமாளிக் கற்பனைப் பாத்திரங்களைப் போல் தான் இறக்குந் தறுவாயிலும் தனது கணவனைத் தன் உடன் பிறந்த சகோதரிக்குத் தன்னும் தத்தம் செய்யமாட்டாள் என்பதே!'

மறுநாள் பொழுது புலர்ந்தது. கொழும்பிலிருந்து வரவேண்டிய உறவினர்கள் வந்ததும் சாரதாவின் கணவனின் பூதவுடல் தகனஞ் செய்யப்படுவதற்காக ஆயத்தங்கள் செய்யப்பட்டன. பிணத்திற்குக் கொள்ளி வைப்பதுயார் 'என்ற பிரச்சனை எழுந்தது. நளினி தன் மூன்று வயதுப் பாலகன் கொள்ளி வைக்க வேண்டுமென விரும்பினுள். 'ஏன் அந்தாள் தேப்பனெண்டாலப்லே பெடி கொள்ளி வைக்கலாம்' என்று ஒரு நச்சுக் கிழவி முணுமுணுத்தது நளினிக்கோ சாரதாவுக்கோ கேட்டிருக்காது. இருந்தும் சாரதா நளினியின் விருப்பத்திற்கிணங்கவில்லை. பெண்கள் சில சந்தர்ப்பங்களில் வீட்டிலிருந்து பிரேதம் புறப்படும் போதே பாடையினுள் ஒருசிறுகொள்ளிவைத்து விடுவதுபோல் தானும் செய்ய வேண்டுமெனச் சாரதா விரும்பினுள் அவளின் விருப்பம் நிறைவேறியது!

[யாவும் கற்பனை]


## அச்சகத்தோரே!
## அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினுல் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்றேம்.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,

கொழும்பு-12

தொலைபேசி: 3411 த. பெ. 1183


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசு கலைக்கப்படுமா?

## 'கலைத்தால் மீண்டும் மீண்டும் வருவோம்' —அண்ணா

## 'படி அரிசி' தகராறில் மோதல்

சட்டபூர்வமான அரிசிப் பங்கீட்டு முறைஅமுலிலுள்ள சென்னையிலும்கோயமுத்தூரிலும் இம் மாதம் 15-ந் திகதி முதல் ரூபாய்க்கு ஒருபடி அரிசி வழங்கும் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இதனால் ரூ. 8 கோடி முதல் 10 கோடி வரை அரசாங்கம் மானியம் வழங்க வேண்டியுள்ளது. இதற்கு மத்திய அரசாங்கம் தமிழக அரசுக்கு உதவி புரியாதென்றும், இவ்விடயத்தில் இரு அரசாங்கங்களுக்குமிடையே பலத்த மோதல் ஏற்படலாமென்றும், அதன் விளைவாக தமிழக அரசு கலைக்கப்படலாமென்றும் சென்னை நகரில் பரவலாகப் பேசப்படுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

காங்கிரஸ்காரர்கள் தி. மு. க. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முன் வந்தால், அந்தச் சவாலை ஏற்கத் தான் தயாராக இருப்பதாகவும், தனது மந்திரி சபையைக் கவிழ்த்தால் மீண்டும் மீண்டும் தி. மு. க. தான் பதவிக்கு வருமென்றும் முதலமைச்சர் அண்ணா பதிலளித்துள்ளார். தமிழக அரசைக் கவிழ்க்கும் முயற்சியைப் பிரதமர் இந்திரா காந்தி விரும்பமாட்டார் என்று ம. பொ. சி. கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பொதுத்தேர்தலில் பொதுமக்களுக்கு கொடுத்த ஒரு முக்கிய வாக்குறுதி இவ்வாரம் நிறைவேறியுள்ளது. அதுதான் ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசி வழங்குகின்ற திட்டம்.

ஏழைகளுக்குரூபாய்க்கு ஒருபடி போடும் திட்டம் அமுலுக்கு வருவதையொட்டி தமிழகமெங்குமுள்ள மக்களிடையே பலத்த மகிழ்ச்சி காணப்படுகிறது. ரூபாய்க்கு அரைப்படி அரிசியே கிடைக்காமல், கஷ்டப்பட்டு வந்த ஏழை, நடுத்தர மக்கள் ரூபாய்க்கு ஒருபடியென்பதில் அதிக ஆர்வங்காட்டி வருகிறார்கள்.

இதைவிட, தி. மு. க. தொண்டர்களிடையே அதிக உற்சாகம் காணப்படுகிறது. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை கழகம் நிறைவேற்றுகிறது என்பதிலே அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்து நிற்கிறார்கள்.

இப்போதைய திட்டப்படி சென்னை, கோவை, ஆகிய சட்டபூர்வ ரேஷன் அமுலிலிருக்கும் பகுதிகளுக்கு அரிசி கொடுப்பதினால் மட்டும் வருஷத்துக்கு 1/ கோடி செலவு ஏற்படுமென்றும் தமிழக உணவு அமைச்சர் திரு. மதியழகன் கூறியிருக்கிறார்.

தமிழகம் பூராவும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டால், ஆண்டொன்றுக்கு ரூபா 11, அல்லது 12 கோடி செலவு ஏற்படுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை எப்படி ஈடுசெய்வது என்பதுதான் தமிழக அமைச்சர்களின் தற்போதைய கவலை.

இந்த நஷ்டத்தை டெல்லி அரசுதான் கொடுத்துதவ வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அறிவித்திருக்கிறார்.



ரூபாய்க்கு ஒருபடி என்ற திட்டத்தை தி. மு. க. அரசு தன் சொந்த விருப்பத்தில் போட்டுள்ளதாகவும், இதில் மத்திய அரசு பங்கேற்க முடியாது என்றும் மத்திய அரசு கருதுவதாகத் தெரிகிறது. எனவே இந்தப் பிரச்சினையில் சென்னையும் டெல்லியும் மோதிக் கொள்ளக் கூடிய சூழ்நிலையேற்படுவது தவிர்க்க முடியாதது என்றும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

அத்துடன் தமிழகம் ஒரு உபரி மாநிலமாகக் கருதப்படுகிறது. எனவே பற்றுக்குறை மாநிலமாகக் கருதப்படும் கேரளத்துக்கு கொடுக்கப்படும் உதவி மானியம் தமிழகத்துக்கு கிடைப்பது சாத்தியமில்லையென்றும், தமிழகத்துக்கு மேலும் நிதியொதுக்க மொரார்ஜி முன்வரமாட்டாரென்றும் டெல்லிச்செய்திகள் கூறுகின்றன.

எனவே டெல்லி தமிழகத்துக்கு உதவி புரிய முன்வராவிட்டால், கண்டிப்பாக தமிழகத்துக்கும் டெல்லிக்கும் மோதல் ஏற்பட்டே தீரும் என்று கூறலாம்.

டெல்லிக்கும் தமிழகத்துக்கும் இப்பிரச்சினையில் மோதல் ஏற்பட்டால், அதில் லாபம் தி. மு. க. வுக்குத்தான். ஏன் தெரியுமா? தமிழகத்துக்கு போதிய உதவியளிக்க டெல்லி முன்வரவில்லையென்பதை மக்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம், காங்கிரஸ் கட்சியை மீண்டும் எழும்ப விடாமல் தடுத்துவிட தி. மு. க. வுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும்.

அண்ணா இது பற்றி சட்டமன்றத்தில் கூறியிருந்ததும் இங்குகுறிப்பிடத்தக்கது. 'தமிழகத்துக்கு தேவையான உதவிகளை டெல்லி செய்து தர மறுத்தால், டெல்லி அரசை முச்சந்திக்கு கொண்டு வந்து மக்கள் முன் நிறுத்துவோம்'' என்று அவர் விடுத்த எச்சரிக்கையில் பொருளில்லாமலில்லை.

---

அரிசிப் பிரச்சினையிலும் 'தனித் தமிழ்' சொற்களை உபயோகிக்கும் பிரச்சினையிலும், காங்கிரஸ் காரர்களும், தி. மு. க. வினரும் மாறி மாறி சொற்கணை தொடுத்து வருகிறார்கள்.

ரூபாய்க்கு ஒருபடி தானா, மூன்றுபடி அல்லவா தி.மு.க. வினர் கொடுக்க வேண்டும் என்று தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் சமீபத்தில் கூறியிருந்த நையாண்டிப் பேச்சுக்கு உணவு அமைச்சர் திரு. மதியழகன் சுடச்சுட பதில் கொடுத்திருக்கிறார்.

'திரு. பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்த போது அவரால் ரூபாய்க்கு முக்கால் படி அரிசியாவது தர முடிந்ததா? அப்படிக் கொடுக்க முடியாத அவருக்கு, ரூபாய்க்கு, மூன்றுபடி கொடுஎன்று கேட்க என்ன யோக்கியதை இருக்கிறது!' என்று கேட்டிருக்கிறார் திரு. மதியழகன்.

திரு. பக்தவச்சலம் இப்படிப் பேச அண்ணா பார்த்துக் கொண்டிருப்பரா? அவர் பின்வருமாறு விட்டார் ஒரு சவால்.

'மூன்றுபடி போட வேண்டும் என்று பக்தவச்சலம் கேட்கிறார். அவரால் ஒருபடி கூட போட முடிந்ததா? அவரும் காமராசரும் சேர்ந்து ரூபாய்க்கு 2 படி கொடுப்பதாக உறுதி மொழி எழுதித் தரட்டும். நாளைக்கே நான் ராஜினமா செய்கிறேன்' என்று கூறினார்.

இதைக் கேட்டுக் கொண்டு பக்தவச்சலம் பேசாமல் விடுவாரா? 'நானும் காமராசரும் அப்படிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாலும் மக்களுக்கு இரண்டுபடி அரிசி தானே கிடைக்கும்?. வேண்டாம். நீங்களே (அண்ணா) பதவியிலிருங்கள். நீங்கள் இருந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி கிடைக்குமே! அதை ஏன் நாங்கள் கெடுக்க வேண்டும்? என்று கூறியிருக்கிறார்.

### அரிசிப் பிரச்சினையில் பெரியார்

'தற்போதைய நிலையில் அரிசி விலையைக் குறைப்பது புத்திசலித்தனமல்லவென்றும் ரூபாய்க்கு 1 படி அரிசி போடுவதைப் பற்றிய விளைவுகளை அமைச்சர்கள் சிந்திக்க வேண்டுமென்றும், ஏனைய பண்டங்களின் விலைகளுடன் அரிசி விலையை ஒப்பிடும்போது அது அவ்வளவு உயர்ந்ததாக இல்லை யென்றும், தி.மு.க. அதிகாரத்துக்கு வருவோம் என்று நம்பியிராத நேரத்தில அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய தில்லையென்றும் பெரியார் தமது அறிக்கையில் கூறுகிறார். வாக்குறுதியாவது, வெங்காயமாவது, என்பத பெரியாரின் சித்தாந்தம் போலும்.

கடந்த தேர்தலில் கிடைத்த பலமான தோல்வியினால் ஏற்பட்ட ஆத்திரத்திலிருந்து தமிழ்நாட்டு காங்கிரசார் இன்னும் விடுபடவில்லையென்பது, அவர்களின் பேச்சுகளிலிருந்து புலனாகிறது. அவர்களின் ஆத்திரம் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு, கடந்தவாரம் சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பழைய முதலமைச்சர் பக்தவச்சுலம், திரு. ஓ. வி. அழகேசனும பேசிய பேச்சுக்கள்.

'விவசாயிகளை நெல் பயிரிடுவதைக் கைவிட்டு கரும்புபயிரிடும் படியும், முடியுமானால் கொஞ்ச காலத்துக்கு எதுவுமே பயிரிடாது வெறுந்தரையாக விடும்படியும், இவர்கள் இருவரும் "வேண்டுகோள்" விடுத்திருந்தார்கள்.

மறுநாள் ஒரு கூட்டத்தில் பேசிய அறிஞர் அண்ணாவும், திரு. கருணாநிதியும் இந்தப் பேச்சுக்கு, 'சுடச்சுட' பதில் கொடுத்தார்கள்.

'விவசாயிகளை தூண்டுவது சட்டப்படி தற்றமென்றும், காங்கிரசார் இப்படியான பிரசாரத்திலிறங்கினல்பஞ்சாப்பிலிருக்கின்ற நிலச் சட்டத்தை தமிழ் நாட்டுக்கும் கொண்டு வரவேண்டி யேற்படுமென்றும் எச்சரிக்கை விடுத்த தமிழக முதல்வர், தமக்கேயுரிய நகைச்சுவையுடன், கரும்பைப் பயிரிட்டால், 'கருப்பஞ்சாறாக' குடித்துக் கொண்டிருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கலைஞர் கருணாநிதியோ இன்னும் ஒருபடி மேலே சென்று, விவசாயிகளைத், தூண்டுபவர்களை தண்டிக்க 'புதிய சட்டம் கொண்டு வருவோம்' என்று மிரட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### தமிழ்ச் சொற் பிரச்சினை

அரிசிப் பிரச்சினை இப்படியிருக்க, தனித் தமிழ் விசாரத்தின் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் ஒரு பக்கம் நடைபெற்று வருகின்றன.

தி. மு. க. அரசு, நிர்வாகத்தில் தமிழைப் புகுத்தி வருவதை கண்டு காங்கிரஸ்காரர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'நாம் ஆட்சியில் இருந்தபோதே இவற்றையெல்லாம் நாமே செய்திருக்கலாமே, அப்போது செய்யாமல் விட்டு விட்டோமே' என்ற மனத்தாங்கலில், தி. மு. க. வைத் தாக்கஆரம்பித்திருக்கிறார்கள்.

## அழகேசனுக்கு அண்ணா எச்சரிக்கை

## பக்தவச்சலமும் 'தமிழக அரசும்'

## ம.பொ.சி. மந்திரியாவாரா?

## மாதவன் சொன்ன திடுக்கிடும் தகவல்

தமிழக அரசு, தலைமைச் செயலகம், திரு, திருமதி, செல்வி, வானொலி, போன்ற தனித் தமிழ்ப் பதங்களை தி. மு. க. உபயோகிப்பதற்கு, காரணம், மொழி வெறியென்றும், தி. மு. க. மந்திரிகள், தங்கள் உடம்புகளிலும், தாம் இன்னின்ன அமைச்சர்கள் என்று கூறும் விளம்பரங்களை தமிழில் எழுதி மாட்டிக் கொண்டாலும் ஆச்சரியமில்லையென்று காங்கிரஸ் பிரமுகரான திரு, அழகேசன் உளறி வைத்து, திரு. நெடுஞ்செழியனிடமிருந்து 'காத்திரமாக' வாங்கிக் கட்டிக் கொண்டார்.

'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்பதற்கு ஒளி விளக்கு பொருத்தியதைப் பற்றி திரு. பக்தவச்சலம் 'இவர்கள் ஆடசி இரவில்தான் நடக்கும். அது தான் ஒளி விளக்குப் போட்டிருக்கிறது' என்று கூறி அண்ணாவிடம் மாட்டிக் கொண்டார்.

'எங்கள் ஆட்சி இரவில் தான் நடக்கிறது. இரவில் தான் நாட்டில் சமூக விரோத செயல்களும் அக்கிரமங்களும் நடக்கும். எனவேதான் ஒளி விளக்குப் போட்டால்தான், ஊர் சொத்தை அடித்து உலையில் போடுபவனைக் கண்டு பிடிக்க முடியும். அரசாங்கமே சுழல்கிற விளக்காக மாறி ஒளியை வீசும். சமூக விரோதிகள் எந்தக் குகையில் இருந்தாலும் வெளிக் கொண்டு வருவோம்' என்று பட்பட்டென்று பக்தவச்சலத்துக்கு பதிலடி கொடுத்திருக்கிறார் அண்ணா. அண்ணாவுடன் சொல்லாட முடியுமா?

### மாதவன் சொன்ன தகவல்

தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு நடந்தபோது குறிப்பிட்ட மாவட்டத்தில் 5 பிரமுகர்களைச் சுட்டுக்கொல்லுமாறு பொலீஸ் அதிகாரியால் உத்தரவிடப்பட்டது என்ற ஒரு திடுக்கிடும் தகவலை சட்ட அமைச்சர் திரு. மாதவன் வெளியிட்டுள்ளார்.

ஒரு பொறுப்புள்ள அமைச்சர் சரியான ஆதாரங்களின்றி இப்படிக் கூறியிருக்க முடியாது. இதிலிருந்து இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது முன்னைய காங்கிரஸ் அரசு எவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டது, என்பதை இது விளக்குகிறது.

இந்தி எதிர்ப்பு போராட்டம் பற்றிய 'பைல்'களை எரித்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் சங்கத்திலிருந்து எஸ். எஸ். ஆர். ராஜினமா

## 'எம். ஜி. ஆர். இல்லாத போது எனக்கென்ன வேலை?'

### டி. வி. என். னும் விலகுவார்?

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் மக்கள் திலகம் எம். ஜி. ஆருக்கு தோல்வி ஏற்பட்டதைத் தொடர்ந்து, நடிகர் சங்கத்தின் சகல பொறுப்புக்களிலிருந்தும் சாதாரண உறுப்பினர் பதவியிலிருந்தும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் விலகிவிட்டார்.



இது சம்பந்தமாக அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் 'நடிகர் சங்கத்துக்காக அல்லும் பகலும் பாடுபட்ட எம். ஜி. ஆர். இல்லாத இடத்தில் எனக்கு மட்டும் என்ன வேலை?' யென்று கேட்டிருக்கிறார்.

நடிகர் சங்கத்தின் புதிய ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. தலைவர் தேர்தலில் நாடக நடிகர் எம். வி. சாமிநாதன் வெற்றிபெற்றார். புதிய செயலாளருக்கான தேர்தலில் டி. வி. நாராயணசாமி வெற்றி பெற்றார்.

நடிகர் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் புரட்சி நடிகரின் பெயரை டி. வி. என். முன்மொழிந்தார். புரட்சி நடிகருக்கு எதிராக டி. என். கிருஷ்ணனின் பெயரை நடிகர் சங்கத்தின் புதிய பொருளாளர் 'பிரண்ட்' ராமசாமி முன்மொழிந்தார்.

இத்தேர்தலில் டி. என். கிருஷ்ணனுக்கு 9 வாக்குகளும், எம். ஜி. ஆருக்கு 6 வாக்குகளும் கிடைத்தன.

இம் முடிவைத் தொடர்ந்து நடிகர் சங்கத்தின் சகல தொடர்புகளிலிருந்தும் தாம் விலகிக் கொள்வதாக இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். அறிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கை வருமாறு:—

'திரு. எம். ஜி. ஆரை எதிர்த்து திரு. டி. என். கிருஷ்ணன் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கிறார். இதனுல் எம். ஜி. ஆரின் சேவையை இழக்க வேண்டி யேற்பட்டுள்ளது. நடிகர் சங்கத்துக்காக எவ்வளவோ பாடுபட்டவரும், பாடுபட விரும்பவருமான திரு. எம். ஜி. ஆரின் தோல்வியை என் தோல்வியாக கருதி எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் நான் விலகிக் கொண்டு விட்டேன்.'



இராசேந்திரனைத் தொடர்ந்து நடிகர்சங்கத்தின் புதிய பொதுச் செயலாளரான திரு. டி. வி. நாராயணசாமியும் நடிகர் சங்கத்திலிருந்து ராஜினமா செய்து விடுவாரென்று கூறப்படுகிறது.

# திரைவாணன் பதில்கள்

எஸ். ஜெஸ்டின் பெர்னன்டோ
செங்கலடி

கே: எம். ஜி. ஆரும் சிவாஜியும் ஒரே படத்தில் கதாநாயகர்களாக நடித்தால் படம் எப்படி இருக்கும்?

ப: ஒரு படத்தில் இருவர் எப்படி கதாநாயகர்களாக நடிக்க முடியும்? ஆனல்சிவாஜியும் எம். ஜி. ஆரும் சேர்ந்து நடித்தால் எப்படி இருக்கும் என்பதைத்தான் 'கூண்டுக் கிளியில்' பார்த்துவிட்டோமே!

ஃ

தி. ஜெயபவானி
நெல்லிப்பழை

கே: எம். ஜி. ஆரின் விலாசம் என்ன?

ப: எம். ஜி. ஆர் தோட்டம் ராமாபுரம், சென்னை.

ஃ

கே. வசந்தி
மட்டுநகர்

கே: ஜெயலலிதாவும் சிவாஜியும் எப்பொழுது ஜோடி சேர்ந்து நடிப்பார்கள்?

ப: கவலையை விடுங்கள். 'பெட்ரால் சினி ஷோப்' கம்பெனியார் 'சங்கம் மூவிஸ்' என்ற புதிய படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் தமது முதல் படத்துக்கு சிவாஜியையும் ஜெயலலிதாவையும் ஜோடியாக நடிக்க சமீபத்தில் ஒப்பந்தம் செய்திருக்கிறார்களே.

ஃ

என். கதிரவேற்பிள்ளை
உருப்பராய்

கே: 'அன்பே வா' சென்னையில் 25 வாரங்கள் ஓடியதாக எழுதினீர்களே, அப்படியானல் ஏன் வெள்ளிவிழா கொண்டாடப்படவில்லை?

ப: 'அன்பே வா' சென்னை 'காசினே' தியேட்டரில் 25 வாரங்கள் ஓடியது மட்டும் உண்மை. ஆனல் வெற்றி பெறும் எல்லாப்படங்களுக்கும் விழா எடுக்க வேண்டுமென்பதில்லையே!

ஃ

ந. தி. இந்திரன்
மல்லாகம்

கே: திருவிளையாடல், கந்தன் கருணை, சரஸ்வதி சபதம் ஆகிய படங்களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பு எதில் நன்றாக இருந்தது?

ப: 'திருவிளையாடலில்' தான்.

ஃ

தி. சிவாஜி
மல்லாகம்

கே: திருவிளையாடல் படம் வெள்ளிவிழாக் கொண்டாடிய பொழுது சிவாஜி [illegible] விட்டு [illegible] பந்தலில் என்ன நினைத்திருப்பார்?

ப: [illegible] இப்பொழுது புராணப்படங்களை [illegible] ஆரம்பித்து விட்டார்கள் என்று நினைத்திருக்கலாம்.

ஃ

வே. பத்மநாதன்
நல்லூர் வடக்கு

கே: நெஞ்சிருக்கும் வரை 'பெற்றால்தான் பிள்ளையா' இப்படங்களில் சிறந்த கதை அம்சம், நடிப்பு எந்தப்படத்தில் நன்றாக உள்ளது?

ப: நடிப்பைப் பொறுத்தவரை இரண்டு படங்களுமே நன்றாக உள்ளன. கதையைப் பொறுத்தவரை 'நெஞ்சிருக்கும் வரை' ஸ்ரீதரின் பழைய பாணிதான்: மேஜர் சந்திரகாந்த், தமிழில் ஒரு புதுவிதமான கதையைக் கொண்டது.

திரைவாணன்,
சுதந்திரன் மலைப்புகுசோலை
த. பெ. இல. 1133.
கொழும்பு.

# தங்கவேலுவும் இந்திப்படங்களும்

'இந்திப் படம் நடக்கும் எந்த ஒரு கொட்டகை வாசலிலும் என்னைப் பார்க்கவே முடியாது' என்று ரோஷத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார் தங்கவேலு. ஒரு படத்தில் நடிக்கவென ஒப்பனையை முடித்துக் கொண்டு மேக்கப் அறையிலிருந்து வெளிப்பட்ட தங்கவேலுவை சில பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு நின்றிருந்தனர்.

'உங்களுக்கு ஏன் இந்திப் படங்கள் மீது இவ்வளவு வெறுப்பு' என ஒரு பத்திரிகை நண்பர் கேட்டார்.

'அப்படிக் கேளுங்க வாத்தியாரே!' என்று தொடங்கித் தமது வெறுப்பின் காரணத்தை விளக்கினர் அவர்.

'எனக்கு முதலில் வெறுப்பு ஏற்பட்டது பம்பாய்வாசி மேல் தான். அதுதான் அவர்கள் படத்தின் மீதும் வெறுப்பு ஏற்படக் காரணம்.

'1947 ம் ஆண்டு என்று நினைக்கிறேன். நான் பம்பாய் போயிருந்தேன். அங்கு ஒரு தியேட்டரில் படம் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது ஒருவர் என்னிடம் வந்தார். அவர் மிகச் சாதாரணமான ஒரு தொழிலாளி. தமிழ் நாட்டுக்காரர் ஒருவரைப் பார்த்த மகிழ்ச்சியில் என்னிடம் சகஜமாகப் பழகிப் பேசினர்.



'நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது மழை வந்து விடவே அருகே இருந்த ஒரு வீட்டின் பக்கம் ஒதுங்கி நின்று பேச்சைத் தொடர்ந்தோம். நாங்கள் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தபோது அந்த வீட்டின் கதவு திறந்தது. ஒரு ஆசாமி எட்டிப் பார்த்தான். நான் நல்ல உடைகளை அணிந்திருக்கவே என்னை ஒன்றும் சொல்லாமல், என் கூட இருந்த தொழிலாளியிடம் 'வெளியேபோ' என்று இந்தியில் கத்தினன்: 'மழை பெய்கிறது. அது நின்றதும் போய்விடுகிறோம்' என்று பணிவாக பதில் கூறினர் நண்பர்.

அந்த ஆசாமி கதவைச் சாத்திக் கொண்டான். நாங்கள் பேச்சைத் தொடர்ந்தோம். மீண்டும் கதவு திறந்தது. அந்தஆசாமிஒருபால் குவளையிலிருந்த கொதிதண்ணீரை என் கூட இருந்தவர் மீது கொட்டினன். அவர் புழுவாகத் துடித்துவிட்டார். இரக்கமற்ற பாவி கொதிக்கும் வெந்நீரைக் கொட்டிவிட்டு கதவையும் மூடிக்கொண்டான். அன்று பிறந்த வெறுப்புத்தான்' என்று கூறி முடித்தார் தங்கவேலு.

## சிவகுமார்-பாட்டு காதற் பாட்டு

ரகுநாத் பிக்சரின் 'கஸ்தூரி' என்ற படத்திற்காக சிவகுமாரும், பாரதியும் பாடிய காதற் பாட்டொன்று பரணியில் படமானது.

வாலி எழுதி, எம். எஸ். விசுவநாதன் இசையமைத்த அப்பாடலின் சில அடிகள் வருமாறு: 'உன்னைத் தூங்கவிட மாட்டேன் [illegible] தலையை எங்கவிட மாட்டேன் [illegible] விடியும் வரை விழித்திருக்கும் வயதல்லவே.'

# மாஸ்கோவில் ஜமுன காணுதது

நடிப்பாலும், பேச்சாலும் தோற்றத்தாலும் பிறரைத் திகைக்க வைக்கும் நடிகை ஜமுனவே அண்மையில் திணறிப் போனர்.

நடந்தது இங்கு அல்ல.

இங்கிருந்து ஐயாயிரம் மைலுக்கு அப்பாலுள்ள ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் உள்ள பாகூவில் 'பதவிடி முத்துகு' என்ற தெலுங்கு படத்தில் நடித்ததற்காக ரஷ்யாவில் நடந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்வதற்காக ஜமுன சென்றபொழுது.

ரஷ்யாவின் பிரபல பாடகரான திருரஷித் பெய்கிதோ நாற்பத்தி ஒன்பது மொழிகளில் பாடியதைக் கேட்டது மட்டும் அல்ல, நமது தாய் மொழியான தமிழில் தேசிய கீதம் பாடியதைக் கேட்டுத் தான் திணறிப் போனர்.

'ரஷ்யா சென்று திரும்பியதைக்குறித்து ஏதாவது கூறுகிறீர்களா?' என்று இடைமறித்துக் கேட்டதற்கு 'ஓ' என்று தலையை பலமாக ஆட்டிவிட்டு, 'அந்த நாட்டு மக்கள் 'அன்புடனும்' இதய சுத்தியுடனும் பழகிப் பேசுகிருர்கள். பெண்கள் ஆண்களைப் போலவும் மலையாளிகளைப் போல் கடுமையாக உழைக்கிருர்கள். நான் ஆறு கஜ புடவை அணிந்து சென்றதை மிகவும் ஆச்சரியமாகவே கவனித்தார்கள்.



'நேருஜி நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்களா? இந்திரா காந்தி சௌக்கியமா? என்றெல்லாம் கேட்டு இதயமெல்லாம் அன்பு நதியில் நினைக்கவைத்தார்கள். கடைசியாக நான் அங்கு பார்க்காதது பிச்சைக்காரர்களை' என்று முடித்தார் ஜமுன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவியின் பெருமையை புரிந்து கொண்டார் ஜெமினி



'குமரிப்பெண்ணில்' நாகேஷ் - ஜெயலலிதா

திரு. ஏ. பி. நாகராஜன் தயாரிக்கும் 'திருவருட் செல்வர்' படத்தில் ஜெமினி கணேசன் நடிக்கிறாரல்லவா? இதிலும் இவருக்கு 'சிவன்' வேடம்தான். படத்தில் ஒரு காட்சியில் 'சிவன்' சன்னியாசி போல மாறு வேடமணிந்து வரவேண்டிய காட்சி வருகிறது. எனவே சன்னியாசிக்குரிய 'மேக்கப்' போட்டுக் கொண்டு ஒக்கனக்கல் காவிரியாற்றங்கரைக்கு அருகே படப்பிடிப்புக்கு தயாராக நின்று கொண்டிருந்தார் ஜெமினி கணேசன்.

அதே நேரத்தில் அப் பகுதியில் நடைபெற்ற ஒரு திருவிழாவுக்காக, ஏராளமான ஜனத்திரள் வந்திருந்தது. திருவிழா முடிந்ததும், அந்தக் கூட்



டம் ஊர்திரும்பாமல், படப்பிடிப்பு நடைபெறுகிற செய்தியறிந்து அங்கு கூடிவிட்டது.

கூட்டத்தில் ஒரு கிழவியும் இருந்தாள். சன்னியாசித் தோற்றத்தில் காணப்பெற்ற ஜெமினி கணேசனை அந்தக் கிழவி கண்டாள். யாரோ ஒரு மகான் வந்திருக்கிறார் என்று அவள் எண்ணி விட்டாள். எனவே இருகைகளையும் கூப்பிக் கொண்டு ஜெமினி கணேசனை வீழ்ந்து வணங்கினாள் கிழவி.

ஜெமினி கணேசன் பதறிப் போய் கிழவியை தடுத்து நிறுத்தினார். 'தாயே என் காலில் விழ வேண்டாம். இது படத்துக்குரிய வேஷந்தான்! இந்த வேஷத்துக்கே இவ்வளவு மகிமையென்றால், அசல் துறவியாக இருந்தால் அதற்குரிய பெருமை எப்படிப்பட்டது என்பதைப்புரிந்து கொண்டேன்' என்று உணர்ச்சியோடு கூறினார் ஜெமினி கணேசன்.

# 'அறை' தந்த பயம்!

புதுமுகம் ஜெய பாரதி கே. எஸ். ஜியின் 'பேசும் தெய்வம்' படத்தில் நடித்திருக்கிறார். இப்படத்தில் சிவாஜியின் முறைப்பெண்ணாக நடித்திருக்கிறார் பாரதி.

படத்தில் சிவாஜி, ஜெய பாரதியைக் கிண்டல் செய்வதாகவும், பாரதி சிவாஜியின் கன்னத்தில் அறைவது போலவும் ஒரு காட்சி வருகிறது.

இந்தக் காட்சி படமாக்கப்பட்டபோது, முதல் 'டேக்'கில் சிவாஜியை அறையாமலே நடித்தார் ஜெயபாரதி. ஆனால் சிவாஜியோ 'சும்மா பயப்படாமல் அடி; அப்போதுதான் 'டேக்' தத்ரூபமாக இருக்கும்' என்று கூறி இரண்டாவது 'டேக்'குக்கு' தயாரானார். எதிர்பார்த்ததைவிட வேகமாக 'பளார்' என்று சிவாஜியை அடித்துவிட்டார் பாரதி.

படப்பிடிப்பில் கலந்து கொண்ட சுந்தரிபாய், ரங்கராவ் முதலியோர் உண்மையிலேயே பயந்து போயினர். ஜெய பாரதிக்கோ சிவாஜி என்ன செய்வாரோ என்ற பயம், கை, கால்கள் நடுங்க ஆரம்பித்துவிட்டன. சிவாஜியோ கலகலவென்று நகைத்துக்கொண்டே கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டார்.

மற்றொரு காட்சியில் 'மாப்பிள்ளை அழகு சகிக்கவில்லை' என்று கூறும் ஜெயபாரதியை சிவாஜி அடிக்க வேண்டும். இதற்கான படப்பிடிப்பில்



சிவாஜி ஓங்கி அடித்தபோது ஜெயபாரதியின் 'ஜாக்கெட்' கிழிந்துபோய்விட்டது. புதிய 'ஜாக்கெட்' துணி வாங்கி வந்த பிறகே அதனால் தடைப்பட்டிருந்த இரண்டு மணி நேரப் படப்பிடிப்பு தொடர்ந்தது.

'அறைந்த போதும், அறை வாங்கிய போதும் மெய்யாகவே பயந்து போனேன்' என்கிறார் ஜெயபாரதி.



'நாய்க்குத் தலைமகனில்' எம்.ஜி.ஆர். ஜெயலலிதா

# 'இவருக்கு' ஏற்ற பாகம்
## கணவர் நடிப்பது பற்றி எம். என். ராஜம் கருத்து

சக்திஸ்ரீ பிலிம்ஸ் என்னும் புதிய சினிமாக் கம்பெனியார் தயாரிக்கும் படத்தில் கதாநாயகனுக்குரிய பாடலைப் பாட பின்னணிப் பாடகர் ஏ. எல். ராகவன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

ஸ்டூடியோவில், படத்துக்கு வேண்டிய பாடல்களைப்பாடி முடித்ததும், படத்தயாரிப்பாளர் தேவநாராயணனிடம் "இந்தப்படத்திலே கதாநாயகனாக நடிக்கப்போவது யார்?" என்று கேட்டார் ராகவன்.

படத்தயாரிப்பாளர் சட்டென்று 'நீங்கள் தான்' என்றார்.

வியப்புற்ற ராகவன், 'நானு' என்று வினவினார்.

'ஆமாம், நீங்கள்தான். இப்போதுதான் முடிவுசெய்தேன். உங்களையே கதாநாயகனாகப் போட்டு விடலாமென்று' என்றார் படத்தயாரிப்பாளர்.

நீண்ட நேரம் வரையில் ராகவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் படத்தயாரிப்பாளர் அதை உறுதிப் படுத்தியதற்காக, ராகவனிடம் அவரது வீட்டுக்குச் சென்றார்.

படக்கதையை, ராகவனும் அவரது [illegible] எம். என். [illegible] கேட்டனர்.



கதையைக் கேட்டதும் எம். என். ராஜம் சொன்னது இது-

'இவருக்கு ஏற்ற கதை. பொருத்தமான பாத்திரம். முதன் முறையாக தமிழ்ப் படத்தில் இவருக்குத் தாங்கள் தந்திருக்கும் வாய்ப்புக்காக, நான் பெருமைப்படுகிறேன்' என்றார்.

'உங்கள் மனைவியின் சம்மதம் கிடைத்து விட்டது. இனி உங்கள் கருத்து என்னவோ?' என்று சொல்லிக்கொண்டே படத்தயாரிப்பாளர் வெளியேறினார். பாட வந்தவர் படநாயகரானார்.



'நாடோடியில்' பாரதி - எம். ஜி. ஆர்

# குமாரி சச்சுவின் ஏக்கம்

குமாரி சச்சுவுக்கு ஒரு ஆசையுண்டு. வீணை கற்றுக் கொள்ள வேண்டுமென்பதே அந்த ஆசை. அந்த ஆசை இவரது சகோதரி மாடி லட்சுமி வீணை வாசிப்பதைப் பார்த்தே இவருக்கு ஏற்பட்டது. பாலசந்தரின் வீணைக் கச்சேரி நடக்கிறது என்று கேள்விப்பட்டாரானால், ஊரின் எந்த இடமானாலும் போய்விடுவார். ரேடியோவில் அவருடைய வீணைக் கச்சேரி இருந்தால் கேட்கத் தவறமாட்டார்.

வெள்ளிக்கிழமையன்று பிறந்தவர் சரஸ்வதி. அதனால் இவருக்கு சரஸ்வதி பெயர் வைத்தார்கள். திரையுலகில், இந்தப் பெயரை மாற்றச் சொல்லி பலர் பல தடவை கூறியும் இவர் அதற்கு மறுத்து விட்டார்.

குமாரி சச்சு, கச்சேரி [illegible] மாகவும், [illegible] ஆண்டுகளுக்குமுன் புமந்தைவெளி சாமுண்டீஸ்வரி கோவிலில் குமாரி சச்சுவின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. கச்சேரிக்கு வந்தவர்களில் முக்கியமானவர் யோகராஜ பாகவதர்.

சச்சுவின் குரலால் கவரப்பட்ட பாகவதர், மேடைக்கு வந்து ஒரு பாட்டு பாடினார். சச்சுவும் தொடர்ந்து பாடினார். பிறகு பாகவதர் புறப்பட்டபோது, 'நேரம்கிடைக்கும் போது வீட்டுக்கு வா, நான் கீர்த்தனைகள் சொல்லித்தருகிறேன்' என்று கூறி விட்டுச் சென்றார்.

சச்சு பிறகு பாகவதரைச் சந்திக்கவேயில்லை. காரணம் அவர் இறந்து விட்டார். 'அவரிடம் பாட்டுக் கற்றுக் கொள்ளாதது, இன்னும் ஒரு ஏக்கமாகவே இருந்து விட்டது' என்கிறார் சச்சு.

ஜுபிடரின் 'விஜயகுமாரி' படம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது குமாரி சச்சு பேபி சச்சுவாக இருந்தார். அப்போது இவருடைய பாட்டி, இவரைப் படப்பிடிப்பை வேடிக்கை காட்டவென அழைத்துக் கொண்டு ஸ்டுடியோவிற்குச் சென்றார்.

ஜுபிடர் பிக்சர்சார், தங்கள் அடுத்த படமான 'ராணி'க்கு'சின்ன பானுமதி'யாக நடிக்க ஒரு சிறுமியைத் தேடிக் கொண்டிருந்த நேரம் அது.

டைரக்டர். ஏ. எஸ். ஏ. சாமி பேபி சச்சுவைப்பார்த்தார். சச்சுவின் முகம் பானுமதியின் முகத்தைப் போல இருக்கவே சச்சுவையே நடிக்கவைத்தால் என்ன என்ற யோசனை சாமிக்கு ஏற்பட்டது. சச்சு பாட்டியிடம் கேட்டார். சில நிமிடம் யோசித்துப் பிறகு சரியென ஒப்புக் கொண்டார் பாட்டி.

குமாரி சச்சு சினிமா உலகுக்கு வந்தது இப்படித்தான். இது கோவையில் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூ. மொ. வி. சேலைகள் பணக்காரப் பெண்களுக்கு மட்டுந்தானு?

கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் யாருடைய நன்மைக்காகசெயல்படுகின்றன? கடந்த வாரம் கூ. மொ. வி. நிறுவனத்தால் விற்பனைக்கென அங்கிகரிக்கப்பட்ட சேலைகளை வாங்குவதற்குபுடவைக் கடைகளின் முன்னுல் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு கியூவில் மணிக்கணக்காக காத்து நின்றுர்கள் யார் இந்தப் பெண்கள்? இவர்கள் பெரும்பாலும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. நடுத்தரக் குடும்பத்தைச சேர்ந்த பெண்களே் ரூபா 72க்கு ஒரு சேலையை வாங்குவதற்கு இரண்டு முறை யோசிக்கவேண்டியிருக்கிறது. இந்நிலையில் வருமானம் குறைந்தவர்களின் நிலை என்னவென்று சொல்லத் தேவையில்லை.

கூ. மொ. வி. ஸ்தாபனம் இப்பொழுது 8வகையான துணிகளைவிற்பனை செய்கிறது. நாமறிந்தவரை, இதில் எந்த வகையையும் யார் ரூபா 2/90ச்குமேல் கூ. மொ. வி. நிறுவனம் விலைக்கு வாங்கவில்லையாம். ஆனுல் இந்த எட்டு வகைத் துணிகளை டம்கூ. மொ. வி. நிறுவனம் புடவைவர்த்தகர்களுக்கு ஒரு யாருக்குபின்வரும்விலை விதம் கொடுக்கிறது.

(1) ரூ. 5. 25 (2) ரூ. 8. 75 (3) ரூ. 10. 50, (4) ரூ. 8. 75, (5) ரூ. 7. 45. (6) ரூ. 7. 45 (7) ரூ. 8. 75, (8) ரூ. 7.90.

பொது மக்கள் ஒருயாருக்கு பின்வரும் விலைகள் விதம் குறித்த துணிகளை வர்த்தகர்களிடமிருந்து வாங்க வேண்டியிருக்கிறது.

(1) ரூ. 6.00, (2) ரூ.10.00 (3) ரூ. 12.00, (4) ரூ. 10.00, (5) ரூ. 8.50, (6) ரூ. 8. 50, (7) ரூ. 10. 00, (8) ரூ. 9. 00

இப்புள்ளிவிபரப்படி அதிக மலிவான சேலை (முதல் வரை) ரூபா 36 முடிகிறது. நாமறிந்தவரையில் இப்போதுள்ள நல்லரகமான சேலை மேலே காட்டப்பட்டுள்ள புள்ளி விபரத்தில் தரப்பட்டுள்ள (யார் ரூபா 10. க்கு விற்கப்படும்) 2வது வகையே. இந்த ரகத்தில் ஒரு சேலை வாங்க ரூபா. 60/- முடிகிறது. எனவே கூ. மொ. வி. சேலையை வாங்கப் பணக்காரப்பெண்கள் மொய்பதில்வியப்பென்ன?

இதனுல் நடுத்தர மனிதனுக்கு ஏதாவது பிரயோசனம் கிடைக்கிறதா?

ஒரு வருடத்துக்கு முன்பு துணி வர்த்தகர்களுக்கு அவர்களிடமுள்ள புடவைத் துணிகளை ரூபா 2. 65க்கு மேல் பொது மக்களுக்கு விற்கக் கூடாதென்று கெசட் மூலம் அறிவிக்கப்பட்டது. அதனுல் அப்பொழுது, ரூபா200.00 விலை குறிக்கப்பட்ட சேலைகள் ரூபா 15. 90க்கு விற்கப்பட்டன. யார் ரூபா 40, 50என்று விற்கப்பட்ட 'ருவிட்' துணி யார் ரூபா 2. 82க்கு விற்கப்பட்டது. நடுத்தர மக்களுக்கு உதவவும், விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கையெடுப்பதாக கூறப்பட்டது. 'எல்லாத்துணி வகைகளும் இனி நடுத்தர, ஏழை மக்களுக்கு கிடைக்கும்' என்றும் உறுதி மொழி கூறப்பட்டது.

ஆனுல் இன்று கூ. மொ. வி. நிறுவனம்இந்தவாக்குறுதியை நிறைவேற்றுகிறதா?கூ.மொ. வி.நிறுவனம்விற்பனைசெய்யும் துணிகளை நடுத்தர மக்கள் வாங்க முடிகிறதா? கூ. மொ. வி. இத்துணிகளை இவ்வளவு அதிக விலையில் எதற்காகவிற்க வேண்டும்? லாபம் சம்பகதிக்கவா?

கூ. மொ. வி. நடுத்தர மக்களுக்கு வெறும் இனிப்பான மொழிகளை மட்டும் கூறினுல் போதாது. செய்கை மூலம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற முன் வர வேண்டும்.

## சகோதரிகள் வரிந்து கட்டுகிருர்கள்:

# குறைபாடு பெண்களிடந்தானு? ஆண்களிடம் இல்லையா?

பெண்கள் குறைகளின் இருப்பிடமே என்று கூறுதல் பிழையானது, பெண்கள் எது செய்தாலும் ஆண்களுக்குக் குறையாகப் படுகிறது போலும். பெண்கள் செய்வது பிழையா, சரியா என ஆராயது அவர்கள் மீது பழி சுமத்தலாம? இப்படிப் பெண்களிடம் குறை காணும் ஆண்கள் பெரிய ஞானிகளா? குறை செய்யாமல் விளங்குவதற்கு.

பெண்கள் ஒரு இரகசியக் குகை, அவர்களுக்கு பங்கு போடும் புத்தி, உரிமையை நாடி நிற்பவர்கள் என்றெல்லாம் என்னென்னவோ புலம்புகிருர் கட்டுரையாளர். ஆழமனம்படைத்த பெண்களின் செய்கைகளை ஆழமாக நுணுகி ஆராய்ந்தால் அவர்களின் திறமை புரியும். அவர்கள் பொழுதைக் கழிப்பதற்காக பெண்கள் கூடி வம்பளந்தால் என்ன குற்றம்.

ஆண்கள் கூடி சதைத்தால் அதில் பிழையில்லை என்ற எண்ணமா. அன்பு, அடக்கம், அழகு வாய்ந்த பெண்களே பொருமையின் இருப்பிடமா? ஏன் ஆண்கள் பொருமை என்னும் வலையில் சிக்குவதில்லையா? ஆண்கள் ஒருவருக்கொருவர் பொருமையைத் தியால் அல்லல் படுத்துவதெல்லாம் குறையில்லா செய்கைகளா? இது தானே பெரிய குறை-கல்லும் கரையும் வண்ணம் அழுது புலம்பி பெண்கள் கேட்பார்கள் என்று கூறுகிருர் கட்டுரையாளர்.

ஆண்கள் பெரிய திறமா? உதாரணமாக தம் மனைவியரை வருத்தி, வாழும் ஆண் மக்கள் இல்லையா இவ்வுலகில். உரிமையிலும் வாழ்விலும், சமபங்கு பெற்று வரும் பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகர் சமமான அறிவற்றவர்களா? இல்லை ஒருகாலும் இல்லை. 'ஆணுக்குப் பெண் சரிநிகர்'சமம் என்று புதுமைக் கவிஞனே பாடியுள்ளான்.




பங்கு போடும் எண்ணத்தைக் கிளப்புவதில் ஆண்கள் விதிவிலக்கா? நாமெல்லாம் வாழ்வோம் என்று எண்ணுகிருர்களா ஆண்கள். நாமெல்லாம் 'ஓர் குலம் ஒருவனே தேவன்' என்று எண்ணும் ஆண்கள்தான் சிலராய் இருக்கலாம். இவ் விடயத்தில் பெண்கள் பலராகவே விளங்குகிருர்கள். கணவர்களை மனைவியர் அறிந்து வைத்திருந்தால் போதுமா? அதற்காக கணவர்கள் என்ன திங்குகளைச் செய்தாலும், பேசாது இருப்பதா?

அவர்கள் கணவர்களைத் திருத்தி நல் வழிப்படுத்தத் தானே வேண்டும். இதை விட்டு விட்டு பெண்கள் குடும்பச்சண்டை வரும் என்று எண்ணி வாளா விருப்பதா? கணவர்கள் எக்கேடு கெட்டால் என்ன! இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டெல்லென்ன என்றுற் வாழ வேண்டும் ஏதாவது போல கணவர்களைத் திருத்தாது இருப்பது சரியா? இல்லை கணவர்களை திருத்தி பொருத்தமற்றவற்றைக் கூறி பெண்கள் தாஞ சண்டைக்கிழுக்கிருர்கள். ஆண்கள் இதற்கு விதிவிலக்கா. எனவே பெண்களிடம் குறைபாடுகளேஇல்லை. அப்படி இருப்பினும் ஆண்களிடமும் தான் இருக்கக்கூடும்.

—எஸ். பத்மா
இணுக்காடு

சமையல் குறிப்பு:

### பொரிவிளாங்காய் உருண்டை

பச்சரிசி, கடலைப் பருப்பு, பயத்தம் பருப்பு இவைகளை வகைக்கு கால்படி எடுத்து, வெறும் வாணலியை அடுப்பில் வைத்து, தனித்தனியாக சிவக்கவறுத்துக்கொள்ளவும். பிறகு அவற்றை யந்திரத்திலிட்டு பாவாக அரைத்துக் கொள்ளவும். ஒரு தேங்காயை உடைத்து பல்லுப்பல்லாக நறுக்கிக் கொள்ளவும். சிறிது நெய் விட்டு தேங்காயை சிவக்க வறுத்து மாவில் போட்டு கலந்து கொள்ளவும். ஒரு துண்டு சுக்கு, நாலகு ஏலக்காய் இவைகளை பொடி செய்து அதில் போடவும். அரை இருத்தல் வெல்லத்தை தண்ணீர் விட்டுப் பாகு வைத்து கம்பிப்பாகாக வந்ததும் மாவில் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு மாவைக கலந்து உருண்டையாக பிடித்துக் கொள்ளவும். எல்லா மாவையும் ஒரு சேர பாகில் கொட்டி கலக்கக் கூடாது.

ஃ

### வீட்டில் செய்யும் 'பன்'

மைதா மாவு-3இருத்தல், சர்க்கரை-1 இருத்தல்.

உப்பு-தேவையான அளவு சமையல்சோடா- 1 சிறங்கை.

நெய் - 2தேக்கண்டி

புளிப்பில்லாத கட்டித் தயிர் - 1சுண்டு

செய்யும் விதம்:-

ஒரு அகலமான பாத்திரத்தில், சமையல் சோடா, உப்பு, சர்க்கரை ஆகியவற்றைப் போட்டுக் கொண்டு தயிரையும் கூட சேர்த்துக் கலந்து கொள்ள வேண்டும். சர்க்கரை நன்ருகக் கரைந்தவுடன், கொஞ்சம் கொஞ்சமாக எல்லா மைதாமாவையும் அதில் போட்டு அதனுடன் நெய்யையும் சேர்த்து நன்ருக ரொட்டி மாவிற்கு பிசைந்து கொள்வதுபோல பிசைய வேண்டும். இந்த மாவை இரவே பிசைந்து வைக்க வேண்டும்.

மறுநாட்காலையில் முந்திய இரவு பிசைந்து வைத்துள்ள மாவை, வட்டமான சிறு சிறு வில்லைகளாக செய்து கொள்ளவேண்டும். இந்த வில்லைகளை நெய்யில் போட்டு எடுக்க வேண்டும். இதைச் சூடாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும்.

—வசுமதி

பெண்கள் குறைபாடுகளின் இருப்பிடம்' என்றகருத்துப்பட இம் மாதம் 8ந் திகதி சுதந்திரனில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. அதைப் பார்த்த சகோதரிகள் விடுவார்களா? சகோதரிகள் அக்கட்டுரைக்கு பதிலளித்து எழுதிய கட்டுரைகளில் ஒன்று இங்கு இடம் பெற்றுள்ளன.

சகோதரிகளிடமிருந்து பெண்களுக்கு உபயோகமான கட்டுரைகள், சமையல் குறிப்புகள், குழந்தை வளப்பு, வீட்டுக் குறிப்புகள். போன்றவற்றை எதிர்பார்க்கிேருேம். இவற்றை அனுப்பும் போது கடித உறையில் 'சுதந்திரன் மங்கையர் சங்கம்'என்று குறிப்பிட தவற வேண்டாம்.

—சுமதி

### தமிழகத்தில்......

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கச் சொல்லி திரு. பக்தவச்சலம் உத்தரவு போட்டது பற்றி மக்களிடையே இருந்து வந்த சந்தேகம் இதனுல் உறுதிப் பட இடமேறபடுகிறது.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது நடைபெற்ற இன்னும்பல கொடூரச் செயல்கள் போகப் போக அம்பலப் படும் என்றும் கூறப்படுகிறது.

**ம. பொ. சி. மந்திரி யாவாரா?**

தமிழகத்தின் மந்திரி சபையை விஸ்தரிக்கப் போவதாக சமீபத்தில் அறிஞர் அண்ணு அறிவித்ததைத் தொடர்ந்து பல விதமான ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

புதிய மந்திரிகளாக வரக்கூடியவர்கள் யாராக இருப்பார்கள் என்பது பற்றி பல விதகருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானத்துக்கு நிச்சயமாக மந்திரிப் பதவி கிடைக்கலாம் என்றும் அனேகமாக, திரு. நெடுஞ்செழியன் தற்போது வகித்து வரும் அறநிலையப் பாதுகாப்பு இலாகா திரு. ம. பொ. சியிடம் ஒப்படைக்கப் படலாமென்றும் சொல்லப்படுகிறது.

ஆனுல் இச்செய்தியை எழுதும் வரை தி. மு. க. வட்டாரமோ அல்லது திரு. ம. பொ. சியின் தமிழரசுக் கழக வட்டாரமோ இச் செய்திகளை ஊர்ஜிதம் செய்யவில்லை.

---

### முன்னேற்றம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மக்களைப்போல்சிறப்பாக வாழ முடியும்.

இவ்வாறு ரம்பொடையைச் சேர்ந்த ரம்பொடைத் தோட்டத்தில் நடைபெற்ற மேற்படி தோட்டத்தின் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தேர்தல் கூட்டத்டத்தில்உரையாற்றிய கழகததின் இணைப் பொருளாளர் திரு. மு. எல்லாளன் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசும் போது நாம்இன்னும் நமதுமுன்னேர்களின் புகழ்பாடுவதையே தொழிலாகக் கொண்டு, நாம் எந்த சூழ்நிலையில் இருக்கின்ரேம் என்பதை மறந்திருக்கின்ரேம். நமது முன்னேர்கள் வீரர்களாய் தீரர்களாய் மொழிபற்று மிக்கவர்களாய் வாழ்ந்தனா. ஆனுல் நாம் மொழியுரிமையற்றவர்களாக, இருப்பிடமற்றவர்களாகவாழ்கின்ரேம் ஏன் இந்த அவல நிலை. எம்மில் ஒற்றுமையில்லை போட்டி பொருமை மிக்கவர்களாய் வாழ்ந்துவருகின்ரேம். யார் எதைச்சொன்னுலும் அப்படியே ஏற்றுக் கொள்கிரேம். இப்படியே நாம் காலமெல்லாம் கஷ்டப்பட்டு கால் வயிற்றுக்குக்கூட கஞ்சியில்லாதவர்களாக வாழமுடியாது. ஆகவே அவர்சொன்னுர் இவர் சொன்னுர் என்பதை விட்டு நம்மை உயர்த்திக் கொள்ள சிந்திக்க வேண்டும். முன்னேற வேண்டும், என்று கூறினுர்.

மற்றும் தலவாக்கொல்லை மாவட்ட பிரதிநிதி திரு. வீரையா உட்பட பலர் உரையாற்றினர்.

---

### ஓவியக் கண்காட்சி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வசிக்கும் 200 பிரபல ஓவியர்களின் ஓவியங்களைக் கொண்ட ஒரு கண்காட்சி பெர்லினில் நடைபெற்றது. 260 ஓவியங்களும், சிலைகளும், 230 கூடார்த்த சித்திரங்களும், மற்றும் பத்திரிகைகளுக்குத் தீட்டப்பட்ட படங்களும் இக் கண் காட்சியில் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் வகுத்த வழி

—கதிர் செல்வநாயகம்—

உலகில் அறியாமை நீங்கி மக்கள் தமது அறிவை விரிவடையச் செய்வதற்குவள்ளுவன் அருளிய திருக்குறள் மிகவும் வேண்டற்பாலது. அறிவுக்கு உணவு திருக்குறள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. எல்லா மக்களுக்கும் எக்காலத்திற்கும் பயன்படக்கூடிய—இன்புறக்கூடிய வகையில் திருக்குறள் அரும் பெரும் கருத்துக்கள் உடையதாக அமைந்திருக்கின்றது. எனவே திருக்குறள் காட்டும் சிரிய வழியில் செல்வோமேயானல் நமக்கு நல்ல அறிவையும்,நல்ல ஆற்றலையும் அளிக்கும் என்பது திண்ணம். பயிருக்கு மழை போல, உடலுக்குஉயிர்போல, அறிவுக்கு ஒளி திருக்குறளே தான்.

ஒருமைக் கண் தான்
கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து.

ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வி அப்பிறப்பிற்கு மட்டு மல்ல, அவனுக்கு ஏழு பிறப்பிலும் கல்வியின் பயன் உதவும் என்பது வள்ளுவரின் கருத்து. மனிதர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் கல்வி கற்றுத்தான் ஆகவேண்டும் என்பது வள்ளுவரின் கருத்திலிருந்து புலனுகின்றது அல்லவா?

பொய்யாமை அன்ன புகழ்
இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

வாழ்க்கையில் என்றும் பொய் பேசாமல் உண்மை பேசி ஒருவன் வாழ்வானேயாகில் அவனுக்குப் புகழ் நிலை வந்து சேருவதோடு, எல்லாவித அறங்களும் தானுக வந்து சேரும் என்பது வள்ளுவர் கருத்து. உண்மை உயர்வை அளிக்கும் என்பது வெள்ளிடமலை. உண்மை பேசு உத்தமனுவாய் என்பது இங்கு நினைக்கற்பாலது.

அன்பிற்கும் உண்டோ
அடைக்குந் தாழ் ஆர்வலர்
புண் கண்ணீர் பூசல் தரும்.

ஒருவர் பிறர் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விட்டு அழுகின்றுர், அங்ஙனம் அவர் அழுவதற்குக் காரணம் என்ன? அன்பு ஒன்றே தான். இத்தகைய அன்பிற்கு அடைத்து வைக்கும் தாழ் உண்டா? இல்லை என்று வள்ளுவர் கூறுகிறுர். எனவே, எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் போல அன்பினுல் பிணைக்கப்பட வேண்டும்.

'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவன் வழி உலகத்தில் உள்ள எல்லா உயிர்கள்மீதும்அன்புசெலுத்த வேண்டுமே தவிரச் சாதி பேதம் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். 'மனித சாதி முழுமைக்கும் அறம் பொது; அறத்தின் முன் அனைவரும் ஒன்றே' என்ற தமிழர் கொள்கையை தமிழன் இரத்தத்தில் ஊறும்படி செய்தல் வேண்டும்.

நிலையில் திரியாது
அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் மற்றவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்பவருடைய உயர்வு மலையின் உயர்வை விட மிகவும் உயர்வாயிருக்கும். எனவே இந்த வள்ளுவன் வழி கற்றறிந்த பெரியார்களை எள்ளி நகையாடக்கூடாது. பெரியார்களைப் போற்றவேண்டும். பெரியார்களைப் போற்றினுல் தான் நாங்களும் அவர்களைப்போலப்பெரியவர்களாக வரலாம். பெரியார்களுடைய வார்த்தைகளை உதாசீனம் செய்தல் ஆகாது. மூத்தோர் வார்த்தை அமிர்தம் அல்லவா? ஆகையால் அவர்கள் சொற் தட்டாமல் நாம் நடப்போமேயானுல், நல்லியல்புகள் வாய்ந்த நற்பண்புகளுடையவர்களாகத் திகழலாம் என்பது திண்ணம்.

## மாணவர் அரங்கு

## திருக்குறளும் தலைமயிரும்

அன்று சமய பாடவகுப்பு நடந்து கொண்டிருந்தது. திருவள்ளுவரைப்பற்றியும், திருக்குறளைப்பற்றியும் மிகத் தெளிவாக விளங்கப் படுத்தியபின் திருக்குறளை எடுத்து முதலாம் அதிகாரத்தின் முதற் குறளை ஆசிரியர் விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார் வகுப்பறை மாணவர்களுக்கு, மாணவர்கள் யாவரும் மிகக் கவனத்தோடு ஆசிரியரின் விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனுல் சோமுவின் கவனம் மாத்திரம் வேறு பக்கம் சென்று கொண்டிருந்தது. இதையும் ஆசிரியர் ஒருபக்கம் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

ஆசிரியர் திருக்குறளை நன்ருக உணர்ச்சி வசப்பட்டுகருத்தாழத்தோடு விளங்கப் படித்துக் கொடுத்துக் கொண்டிருக்க, ஏனைய மாணவர்கள் எல்லாரும் அவர் கூறுவதைக் கவனமாய்த்தான் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆனுல் சோமு மாத்திரம் அடிக்கடி பக்கத்திலிருக்கும் சுந்தரத்தோடு கதைத்துககொண்டிருப்பதைப் பார்த்ததும் அவருக்கும் கோபம் வந்துவிட்டது.

டக்கென சோமுவின் பக்கம் திரும்பி சோமு எழுந்திரு! என்ன அவனோடு கதை உனக்கு! நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன்! நீ என்ன செய்து கொண்டிருக்கிறுய். படிக்க விருப்பமில்லை என்றுல் படிக்கிற மற்றப் பிள்ளைகளையும் கெடுக்காமல் வகுப்பைவிட்டு வெளியில் போய் விடு என்று சீறிவிழுந்தார் சோமுவின்மேல்.

சோமுவுக்குப் பயம் பிடித்து விட்டது! இன்னும் ஆசிரியர் என்னதான் சொல்லப்போகிறுர், அல்லது என்னதான் செய்யப் போகிறுர் என்று டக்கென அவனுக்கு ஒரு யோசனை வந்துவிட்டது.

'சேர்! எனக்கொரு சந்தேகம் சேர், திருவள்ளுவர் எதற்கெடுத்தாலும் ஒவ்வொரு குறள் பாடி வைத்திருக்கிறுரே சர்! ஏன் சேர் தலைமயிர் வெட்டிக் கொள்ளவும் ஏதாவதும் பாடியிருக்கிறுரா? என்று கேட்டான் சோமு. உண்மையில் அவனின் கவனம் முழுவதும் தலைமயிர் வெட்டிக்கொள்ள நேரத்தோடு சலூனுக்குப் போக வேண்டும் என்பது தான்! அதே எண்ணத்தோடுதான் இந்தக் கேள்வியையும் கேட்டு விட்டான். ஆசிரியருக்குச் சிரிப்பு வந்து விட்டது! வகுப்பு மாணவர்களும் 'கொல்' என்று ஒரேயடியாகச் சிரித்தார்கள்.

ஒரு வாறு சிரிப்பையடக்கிக் கொண்ட ஆசிரியர் 'போதும் பிள்ளைகள்! சோமு கேட்ட கேள்வியும் நல்லகேள்விதான். கவனமாய்க் கேளுங்கள் அதற்கும் ஒரு குறளைப் பாடித்தான் சென்றுர் திருவள்ளுவர் என்று தொடர்ந்தார்......

'மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்...'

ஆம், உலகம் பழிக்கின்ற தீய பழக்கத்தை விட்டு விட்டால், மொட்டையடித்தலும், சடை வளர்த்தலுமாகிய புறக் கோலங்களும் வேண்டாம் என்று கூறுவதால் 'கிராப்' வெட்டிக் கொள்வது நல்லது தானே! என்று சொல்லி முடித்தார்.

—ப. லிங்கதாசன்



உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்வன் நவ்சாத் இம்மாதம் 5-ந் திகதியுடன் தனக்கு ஓராண்டு பூர்த்தியான மகிழ்ச்சியில் திளைக்கிறுர்.

## பொய்ப்புகழ்

'அன்பே நீ மிக நன்ருகப் பாடுகிறுய்' என்று காதலியின் திறமையை காதலன் புகழ்ந்தான்.

'அப்படியா? நீங்கள் கூட நன்ருகப் பாடுகிறீர்களே!' இது காதலன்..

'நான் சொன்னது போல் நீ பொய் சொல்லவில்லையே!' —காதலன் ஆர்வத்தோடு அவளைக் கேட்டான்.

அன்புள்ள தம்பி தங்கைகளே!

வணக்கம்.

இம்மாதம் 24-ந் திகதி தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் பெருமை தேடிக் கொடுக்கும் குறளைப்படைத்த திருவள்ளுவர் திருநாள் தமிழ் கூறும் நல்லுலகெக்கும் கொண்டாடப்படுகிறது. வள்ளுவருக்கு ஊரெங்கும், வீடெங்கும் விழா எடுக்கவேண்டியது தமிழர் தம் தலையாய கடன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

வள்ளுவருக்கு ஆண்டுக்கொருமுறை விழா எடுத்தால் மட்டும் போதாது, வள்ளுவரை உண்மையாக நாம் கௌரவிக்க வேண்டுமென்றுல் வள்ளுவர் எமக்கு விட்டுச் சென்ற செல்வமாகிய திருக்குறளைப் படித்து அது காட்டும் பாதையில் வாழ முயற்சிசெய்ய வேண்டும்.எனவேநீங்கள் எல்லாம்வள்ளுவர் திருநாளில், குறளைப் படித்து அதன் நெறியில் ஒழுகச் சபதமெடுத்துக் கொள்ளுங்கள்.

இனி வருகிற வாரம் சந்திப்போமே!

அன்புள்ள
கோபு அண்ணு

# விஞ்ஞான விந்தைகள்

## திடீர் மை

இந்தத் திடீர் யுகத்தில் திடீர் திடீர் என்று திடீர் பொருட்கள் தோன்றுவது வழக்கமாகிவிட்டது. ஜேன்ஸ்வில் பார்க்கர் பென் கம்பெனியார் ஒரு பேனு தயாரித்திருக்கிறுர்கள். தானுகவே மை நிரப்பிக் கொள்ளும் வகையைச் சேர்ந்த இந்தப் பேனுவில் திடீர் மையை ஊறச் செய்துவிடலாம். பேனுவின் மை சேமிக்கும் திடீர் மை குழாயின் அடியில் உள்ளது. குழாயின் நடுப்புறத்தில் உலர் மை குழாய் இரு மெல்லிய கடல் பஞ்சுகளின் இடையே வைக்கப்பட்டுள்ளது. பேனுவை நிரப்பவேண்டுமானுல் குழாய் உள்ள பகுதியை தண்ணீரில் 30 விநாடிகள் அமிழ்த்தி வைக்க வேண்டும். கடல் பஞ்சுகளின் வழியே நீர்க் குழாயின் மத்திக்குள் புகுந்து உலர் மையைக் கரைத்துப் பேனுவை நிரப்பிவிடுகிறது. அதன்பலனுக மூன்றரை மணிநேரம் எழுதுவதற்குத் தேவையான மை கிடைத்துவிடுகிறது.

## காகிதத்தையும் துவைக்கலாம்

காகித உற்பத்தித்துறையில் ஒரு புது சாதனை முறுக்கிப் பின்னப்பட்ட காகிதம். அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த டல்லாஸ் நகர வாசி 'ரோலண்ட் ஹெச்மார்க் என்பர்' கண்டுபிடித்துள்ள ஒருவகைக் காகிதத்தை கொதிக்க வைக்கலாம். உலர் சுத்தம் செய்யலாம். முப்பது முறை உபயோகிக்கலாம். காகிதம் முதலில் நூலாக மாற்றப்பட்டு பின்னர் துணியாக நெய்யப்படுகிறது. நீடித்த உழைப்பிற்காக ரசாயனப் பூச்சு செய்யப்படுகிறது. நீரில் பலமணி நேரம் ஊறினுலும் கிழியாத இந்தக் காகிதம் பாரசூட் செய்வதற்கும், சுவற்றில் ஒட்டும் தாளாகவும் தொப்பி, டை முதலியவை செய்வதற்கும் பயன்படுகிறது.

## கேள்வி இங்கே

(கீழே தொடுத்திருக்கும் கேள்விகளுக்கு உங்களால் விடைகாண முடிகிறதா என்று தேடுங்கள். இல்லாவிட்டால் எதிர் புறத்திலே முடித்திருக்கிறேம். வித்தகர் பேருரைகளிலிருந்து.)

1. வேதனைகளும் வேடிக்கையாக இருக்கும் எப்போது?
2. சரித்திரத்தின் புரட்சிகரமான சம்பவங்கள் எதனுல் ஏற்படுத்தப்பட்டன? வலிமைமிக்க எழுத்தினுலா? பேச்சினுலா?
3. புன்னகைக்கும் கண்ணீருக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் 'பெண்டுலம்' யார்?
4. பணத்துக்கு முதலாளியானுல் என்ன நேரும்? அடிமையானுல் என்ன விளையும்?
5. சுதந்திர மரத்தின் விதை எது?
6. மனநோய் கொண்டவனுக்கு மருந்தென்ன?
7. பலகுணங்கள் வாய்ந்த நண்பர்களைவிட பயனுள்ள உறவு வேறுண்டா?
8. ஒருவன் வியக்கத்தக்க அளவில் ஆயிரம் மைல்கள் நடந்திருக்கிறுன் என்றுல், அதனுள் பொதிந்து கிடக்கும் ரகசியம் என்ன?

## விடை இங்கே

1. அந்த வேதனைகள் பிறருக்கு நிகழும்போது!
— வில் ரோஜர்ஸ்
2. பேச்சினுல்!
— ஹிட்லர்
3. மனிதன்!
— பைரன்
4. பணத்துக்கு முதலாளியானுல் அது தீயச் செயல்களுக்குப் பயன்படும்; அடிமையானுல், அது மனிதனை தீய செயல்களுக்குப் பயன்படுத்தும்!
— அகஸ்டைன்
5. நாட்டுப் பற்றுடையோரின் இரத்தம்!
— காம்பெல்
6. அவனது தூங்காத இரவுக்கு மருந்து, பொழுது விடிவதுதான்!
— எப். டபிள்யூ. பெயின்
7. பொறுக்கி எடுத்த சில புத்தகங்களின் உறவு!
— கோல்டன்
8. அவன் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துத் தான் அவ்வளவு தூரத்தையும் நடந்திருக்கிறுன்.
— சீனப் பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4-வது வெற்றி வாரம்!



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜயா (மட்டுநகர்) பிரெசென்ட் (புத்தளம்) குமரன் (மன்னார்)


ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நாகேஷ் மனோகர் ரங்கராவ் நடிக்கும்

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்

# குமரிப் பெண்

இரண்டாவது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு)
சிவாஜி கணேசன் நடிக்கும்

# தூக்குத் தூக்கி



# 2வது வெற்றி வாரம்

எம்பயர் (கொழும்பு) செல்லமகால் (கொட்டாஞ்சேனை) வின்சர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை)
இம்பீரியல் (மட்டுநகர்) றிகல் (நுவரெலியா) றிகல் (கம்பளை) விஜிதா (இரத்மலானை)

எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நம்பியார் நாகேஷ் பாரதி நடிக்கும்

# நாடோடி.

பலரசிகர்களின் வேண்டுகோளை முன்னிட்டு
கெயிட்டி திரையில் இப்பொழுது காட்சி தருகிறது
எம். ஜி. ஆர்
ஜெயலலிதா

## ஆயிரத்தில் ஒருவன்
(கலர்)



# மூன்றுவது வாரமாக



வெற்றி நடை போடுகின்றது புதிய வரலாறு படைத்த புதுமைச்சித்திரம்.

ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை) சென்ட்ரல் (மருதானை) லிபர்டி (அட்டன்) ஆனந்தா (மன்னார்)
றேயல் (வவுனியா) ராதா (கந்தப்பொலை) மீபுர (நீர்கொழும்பு) 26 வெள்ளி முதல் ராணி (யாழ்ப்பாணம்)



தேவர் பிலிம்ஸ்

# தாய்க்குத் தலைமகன்

டைரெக்ஷன்:
எம். ஏ. திருமுகம்

எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
அசோகன், மனோகர்
ரங்கராவ் நாகேஷ்
இன்னும் பலர் நடித்தது

கதை—தயாரிப்பு
எம். எம். ஏ. சின்னப்பா
தேவர்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் ... பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில்
1967-ம் வருடம் ... மாதம் ..-ம் திகதி ... அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org